

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | நவம்பர் 04, 2010 | புரட்சி 9 | முழக்கம் 43 | விலை: ரூ.2.50

### பெரியார் சிலைக்கு மாலை அணிவித்ததற்காக தாக்கப்பட்ட கொடுமை

## அர்ச்சகர் பயிற்சியின் போதும் அவமதிப்புகள்

## குமுறும் பார்ப்பனரல்லாத இளைஞர்கள்

*அர்ச்சகர் பயிற்சி பெறச் சென்ற தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த இளைஞர்கள், பயற்சிக் காலத்தில் அவமதிக்கப்பட்ட பல தகவல்கள் வெளிவந்துள்ளன. இது குறித்து அர்ச்சகர் பயிற்சி முடித்து விட்டு, கோயில் பணியில் அமர்த்தப்படாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் அர்ச்சக இளைஞர்கள் கூறிய தகவல்கள்:*

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து 2007 ஆம் ஆண்டு ஆகஸ்டு வரை நாங்கள் அர்ச்சகர்களாக பயிற்சி பெற்றோம். பழனி தண்டாயுதபாணி திருக்கோயிலிலும் அர்ச்சகர் பயிற்சி நடந்தது. இங்கே பயிற்சி பெற்றவர்களுக்கு கோயில் தலைமை அர்ச்சகப் பயிற்சியாளர் வேதம், தியான சுலோகம், காயத்ரி மந்திரங்களை கற்றுத் தர மறுத்து விட்டார். ஆகமம் கற்றுத் தரும் ஆசிரியரே வரவில்லை. ஒரு தமிழ்ப் புலவர் மட்டும் தேவாரம், திருவாசகங்களை கற்பித்தார். பழனி கோயில் தலைமை அர்ச்சகராக இருப்பவர் பாலு குருக்கள் என்ற பார்ப்பனர். அவர்தான் பயிற்சி தர வேண்டும். ஆனால், உங்களுக்கு எல்லாம் வேதம், தியான சுலோகங்களையோ அர்ச்சகருக்கான பயிற்சியையோ கற்றுத் தர முடியாது என்று கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

திருவண்ணாமலையில் நடந்த பயிற்சியிலும், நாங்கள் அவமானப்பட்டோம். அங்கும் எங்களுக்கு வேதம், ஆகமம் கற்றத்தர பார்ப்பன அர்ச்சகர்கள் மறுத்து விட்டார்கள். வெளியிலிருந்து தாமாக முன்வந்து ஒரு பார்ப்பனர், எங்களுக்கு கற்றுத்தர முயன்றபோது, பார்ப்பன அர்ச்சகர்கள், அவரை உடல் ரீதியாக தாக்கி, வெளியே தள்ளினர். நாங்கள் மொத்தம் 207 பேர் பயிற்சி பெற்றோம். 4 இடங்களில் சைவப் பயிற்சியும், 2 இடங்களில் வைணவ பயிற்சியும் நடந்தது.

எழுத்துத் தேர்வு மட்டுமின்றி, நேர்முகத் தேர்வும், அதற்கு மதிப்பெண்ணும் உண்டு. அற நிலையத் துறை ஆணையர், உதவி ஆணையர் ஆகிய அதிகாரிகளோடு, பழனி தலைமை அர்ச்சகரான பாலு குருக்கள், நேர்முக தேர்வுக் குழுவில் இடம் பெற்றிருந்தார். அதிகாரிகள் கை கட்டி வாய் பொத்தி, பார்ப்பன குருக்கள் சொல்வதைத்தான் கேட்பார்கள். நேர்முகத் தேர்வுக்கு வரும்போது பார்ப்பனர்களைப் போன்ற தோற்றத்துடன் தான் வரவேண்டும் என்பது கட்டாயம். காதில் கடுக்கண், தலையில் குடுமி, முதுகில் பூணூல் அணிந்து, மீசையில்லாமல் வரவேண்டும். அதிலும்கூட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த 16 பேருக்கு பூணூல் அணியவும் தடை விதித்தார்கள்.

“நீங்கள் எந்த பூசையும் செய்ய வேண்டாம். சர்க்கரைப் பொங்கல் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள் அதுவே போதும்” என்று பழனி பார்ப்பன அர்ச்சகர் கூறினார். இவ்வளவு அவமானங்களைச் சுமந்து, நாங்களே, எங்கள் முயற்சியால், எங்களை தகுதியாக்கிக் கொண்டோம். ஆனாலும், பணி நியமனம் இல்லாமல் திண்டாடுகிறோம். தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத் தடையை நீக்கும் முயற்சிகளில் மெத்தனம் காட்டுகிறது. உச்சநீதிமன்றத்தில் நாங்களே சங்கத்தின் வழியாக நிதி திரட்டி எதிர் வழக்காடி வருகிறோம்” - என்று கண்ணீர் மல்க கூறுகிறார்கள், இந்த இளைஞர்கள்.

செப்டம்பர் 17, தந்தை பெரியார் பிறந்த நாள் அன்று தமிழ்நாடு அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கத்தின் தலைவர் வா. அரங்கநாதன் தலைமையில் அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் திருவண்ணாமலையில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். இதனால் ஆத்திரமடைந்த சில இந்து முன்னணியைச் சார்ந்தவர்கள் அரங்கநாதனை தாக்கி உள்ளனர். இது குறித்து வா. அரங்கநாதன் நடந்த சம்பவங்களை விளக்கி, கழக ஏட்டுக்கு விடுத்துள்ள செய்தி:

“நான் தமிழக அரசு நடத்திய அனைத்து சாதியினர் அர்ச்சகர் பயிற்சித் திட்டத்தில் திருவண்ணாமலையில் படித்து முடித்துள்ளேன். அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் படித்த 207 மாணவர்களுக்கும் பணி நியமனம் செய்யப்படவில்லை. எனவே, மாநில அளவில் அனைத்து மாணவர்களையும் திரட்டி, சங்கம் அமைத்து நடத்தி வருகிறோம். இந்த நிலையில் மதுரையைச் சார்ந்த பார்ப்பன பட்டர்கள் எங்களை பணி நியமனம் செய்யாதிருக்க உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததால், தமிழக அரசு எங்களை பணியமர்த்தவில்லை. எங்கள் சங்கத்தின் சார்பாக உச்சநீதிமன்றத்தில் நாங்கள் வழக்கை எதிர்கொண்டு வருகிறோம். சங்கத்தின் சார்பாக போராட்டங்களையும் நடத்தி வருகின்றோம். இதனால் ஆரம்பத்தில் இருந்தே இந்து முன்னணியினர் பார்ப்பனர்களுக்கு எதிராக பேசக் கூடாது என எச்சரித்து வந்தனர்.

பெரியார் பிறந்த நாளான கடந்த செப்டம்பர் 17 அன்று திருவண்ணாமலையில் காலை 9 மணியளவில் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டோரும் அர்ச்சகர்களாக வேண்டும் என போராடிய தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து விட்டு இரவு வரை நகரின் பல பகுதிகளில் மக்கள் மத்தியில் எங்கள் பணி நிய மனத்திற்கு தடையாக உள்ள உச்சநீதிமன்ற வழக்கை தமிழக அரசு விரைந்து நடத்த வலியுறுத்தி துண்டறிக்கைகளை வழங்கி வந்தோம். அன்று இரவு 8.30 மணியளவில் அண்ணாமலையார் கோவில் வாயிலின் அருகில் நானும் மனித உரிமை பாதுகாப்பு மய்ய வழக் கறிஞர்களும் துண்டறிக்கை கொடுத்துக் கொண்டிருக்கும் போது இந்து முன்னணியின் நகர செயலாளர் இளமாறன் உட்பட ஐந்து பேர், “ஏண்டா கிறித்துவ பசங்களை கூட்டி வந்து நோட்டீஸ் கொடுத்து பிரச்சினை செய்ய பார்க்கிறியா” என கேட்டார். இதனால் எங்களுக்கும் அவர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்து முன்னணி யினர் என்னைப் பார்த்து தொடர்ந்து நீ பிராமணர்களுக்கு எதிராக பேசி வர; நீ என்ன கதி ஆவர பார்” என எச்சரித்தார். ஆபாசமான வார்த்தைகளாலும் திட்டினார்.

இதற்கிடையில் 14.10.2010 இரவு 9 மணியளவில் கோயிலுக்குள் நாங்கள் இருந்தபோது இந்து முன்னணியைச் சார்ந்த காமராஜ் மற்றும் சுரேஷ் இருவரும் என்னைப் பார்த்து, தெவிடியா பையா நீ தானே பெரியார் சிலைக்கு மாலை போட்டவன். நீ ஏன்டா பார்ப்பானாக பாக்குற, பெரியாரு நாட்டைக் கெடுத்தார். நீ திருவண்ணா மலையை கெடுக்க பார்க்கியா. உன்னால எங்க கட்சியில எங்களுக்கு நெருக்கடி. இனிமேல் சங்கம் சார்பில் ஏதாவது பண்ணிப் பாரு. கோவில் வாசலிலேயே வெட்டுப்பட்டு சாவ என்று திட்டி, கழுத்தை நெரித்து, முதுகில் தாக்கினார்.

நான் தனி ஆளாக இருந்ததால் எதையும் பேசாமல் அங்கிருந்து வந்து விட்டேன். இந்து அமைப்புகள் எங்க சங்க செயல்பாடுகளால் காழ்ப்புணர்ச்சி கொண்டு என்னையும், சங்க மாணவர்களையும் எப்படியாவது ஒழித்துக் கட்ட வேண்டும் என பல்வேறு வகையில் மிரட்டி வருகின்றனர். எதிரிகளால் என் உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்று அச்சமாக உள்ளது. இவர்களுக்கு பின்னணியில் பார்ப்பனர்கள் உள்ளனர் என உறுதியாக கூற முடியும் என்று கூறியுள்ளார்.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 04.11.2010**

### நகராட்சி அலுவலகத்தில் ஹோமம் நடத்துவதா?

## தடுத்தி நிறுத்தினர், பல்லடம் கழகத் தோழர்கள்

*திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் புதியதாக கட்டப்பட்ட நகராட்சிஅலுவலகத்தில் நடக்கவிருந்த கணபதி ஹோமம் பூசை, கழக தோழர்களால் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட்டது. பல்லடம் நகராட்சி புதிய கட்டிடத்தை அக்.17 அன்று தமிழக துணை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார். அதன் பிறகு அக்.29 அன்று காலை 4 மணியளவில் கணபதி ஹோமம் பூசை நடத்தி, திறக்கப்படவிருக்கும் சேதி அக்.27 மாலை 4 மணிக்கு கழகத் தோழர்களுக்கு தெரிய வந்தது.*

உடனடியாக கழகத் தோழர்கள் தொடர்பு கொண்டு ஒன்றிய அமைப்பாளர் சி. விஜயன் தலைமையில், நகர செயலாளர் கோ. ஜெகதீஸ், பகுத்தறிவாளர் கழகத் தோழர் மா. திருமூர்த்தி, தோழர்கள் இராமசாமி, சூரி. ஆறுமுகம் ஆகியோர், நகராட்சித் தலைவர் மற்றும் செயல் அலுவலரிடம் ஹோமம் நடத்துவதை நிறுத்துமாறு மனு அளித்தனர்.

பூசை நடத்துவதற்கான பூசணிக்காய், வாழை, பூசை பொருட்கள், செங்கற்கள், மாலைகள் வாங்கி வைத்துள்ளதை கழகத் தோழர்கள் பார்த்து, அரசு அலுவலகத்தை பூசை மடமாக்குவதைக் கண்டித்தனர்.

இந்த பூசை, அரசு ஆணையை அவமதிக்கும் செயலாகும். மத சார்பற்ற நாட்டில் இது போன்ற நிகழ்ச்சிகள் நடத்தக் கூடாது. அவ்வாறு நடத்தினால் பூசை நடக்கும் போதே பொது மக்களை திரட்டி போராட்டம் நடத்துவோம் என கழக சார்பில் எச்சரித்தனர். கழகத்தின் இந்த அறிவிப்பால், நடக்க இருந்த கணபதி ஹோமம் பூசை தடுத்து நிறுத்தப்பட்டது. கழகத் தோழர்களின் முயற்சியை பொது மக்கள் பாராட்டினர்.

### கழக முழு நேரப் பணியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்பு

பெரியார் திராவிடர் கழகம் கடந்த ஏப்ரல் 14 ஆம் தேதியிலிருந்து நடத்திய சாதி தீண்டாமை ஒழிப்பு பரப்புரை இயக்கங்களில் தொடர்ந்து பங்கேற்ற தோழர்களுக்கும், கழகத்துக்காக முழு நேரமாகப் பணியாற்றி வரும் தோழர்களுக்காகவும், சிறப்புப் பயிற்சியரங்கம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நவம்பர் 6 ஆம் தேதி தொடங்கி, 13 ஆம் தேதி நிறைவடையும் 8 நாள் பயிற்சியில் சாதி ஒழிப்பு, பெண்ணியம், மார்க்சிய பார்வையில் குடும்பம், தனிச் சொத்து தோற்றம், பார்ப்பன - பனியா பன்னாட்டுச் சுரண்டல்கள்; எதிர்கொள்ளும் முறைகள்; மனித உரிமை மீறல்கள்; சுற்றுச் சூழல் பாதிப்புகள், தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் ஆகிய தலைப்புகளின் கீழும், ‘குடிஅரசு’ தொகுப்புகள் குறித்தும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. திண்டுக்கல்லில் பயிற்சி நடைபெறுகிறது.

தலையங்கம்

# அருந்ததிராய் பேசியதில் குற்றம் என்ன?

‘காஷ்மீர் எப்போதும் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது இல்லை’ என்று பிரபல சிந்தனையாளரும், ஆற்றல் மிக்க எழுத்தாளருமான அருந்ததிராய் வெளியிட்ட கருத்தில், எந்தக் குற்றமும் இல்லை என்பதே நமது உறுதியான கருத்து. அருந்ததிராய் மீது தேச துரோகக் குற்றச்சாட்டை ‘தேச பக்தர்கள்’ வீசுகிறார்கள். வழக்குத் தொடருவதற்கு இந்திய ஆட்சி ஆலோசித்து வருவதாக செய்திகள் வருகின்றன. அருந்ததிராய் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பார்ப்பனிய இந்துத்துவ சக்திகள், பார்ப்பன ஏடுகள் கூக்குரலிடுகின்றன.

காஷ்மீர் மக்கள் மீது ராணுவ ஆட்சியைத் திணித்து, அம்மக்களின் சுயநிர்ணய உரிமையை துப்பாக்கி முனையில் பறித்து வைப்பதற்குப் பெயர்தான் தேச பக்தியா என்று கேட்க விரும்புகிறோம். தேச பக்தர்களுக்கு சில கேள்விகளை முன் வைக்க விரும்புகிறோம்.

- காஷ்மீர் இந்தியாவில் இணைக்கப்பட்டபோது அங்கே, ஹரிசிங் என்ற இந்து மன்னராட்சி நடந்தது; மன்னருக்கு இந்தியாவின் வைஸ்ராய், மவுண்ட்பேட்டன் எழுதிய கடிதத்தில் இந்தியாவுடனான இணைப்பு, காஷ்மீர் மக்களின் வாக்கெடுப்பு ஒப்புதல் பெற்ற பிறகே இறுதி செய்யப்படும் என்று உறுதி கூறினாரே; (27, அக். 1947) வாக்கெடுப்பு நடத்தப்பட்டதா?
- “காஷ்மீர் மக்களின் எதிர்காலத்தை அவர்களே தீர்மானிப்பார்கள்; அய்.நா. போன்ற சர்வதேச அமைப்புகளின் மேற்பார்வையில், அம்மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்படும்” என்று சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக பதவிக்கு வந்த ஜவகர்லால் நேரு, காஷ்மீரிகளுக்கு மட்டுமல்ல, உலக நாடுகளுக்கே உறுதி அளித்தாரே (2 நவ. 1947); சொன்னதை செய்தாரா?
- காஷ்மீர் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்துவதற்காகவே இந்தியா, பாகிஸ்தானுக்காக, அய்.நா. இரண்டு ஆணையங்களையே உருவாக்கியதே (1948, ஜனவரி); உண்டா? இல்லையா?
- சுதந்திரமான வாக்கெடுப்பு நடத்தி, காஷ்மீர் மக்களின் எதிர்காலத்தை முடிவு செய்ய வேண்டும் என்று 1948-லிருந்து 1957 வரை அய்.நா.வின் பாதுகாப்புக் கவுன்சில் மீண்டும் மீண்டும் தீர்மானங்களை நிறைவேற்றியதே; மறுக்க முடியுமா?
- காஷ்மீர் மக்களுக்காக வரையறுக்கப்பட்ட சுயாட்சி வழங்கப்பட்டு அதற்காக, அரசியல் சட்டத்தில் 370வது பிரிவு ஒன்று சேர்க்கப்பட்டது உண்டா? இல்லையா? (1952, நவம்பர் 17) அடுத்த ஓராண்டிலிருந்தே 1953 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டிருந்த ஓரளவு உரிமைகளும் கட்டாயப்படுத்தியும், அச்சுறுத்தியும், சூழ்ச்சிகளாலும் படிப் படியாகப் பறிக்கப்பட்டு, மக்கள் கிளர்ச்சிகளை ஆயுத முனைகளில் ஒடுக்கி, காஷ்மீரை ஒரு “போலீஸ் அரசாக” மாற்றியது யார்? இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சியா? இல்லையா?
- தான் கொடுத்த வாக்குறுதியையே மீறி, காஷ்மீரில் வாக்கெடுப்பு என்ற கேள்விக்கே இடமில்லை என்று நாடாளுமன்றத்திலேயே நேரு அறிவித்தாரே; (1956) அது துரோகமா, இல்லையா?
- 1957 ஆம் ஆண்டிலிருந்து காஷ்மீரில் நடத்தப்படும் தேர்தல்கள் எல்லாம் ஜனநாயகத்தை கேலிக்குள்ளாக்கும் கூத்துகளாகவே நடந்தன என்பதும், நேருவின் உறுதி மொழியை எடுத்துக்காட்டிய அரசியல் தலைவர்களும், பணியாளர்களும் ‘தேச விரோதிகள்’ என்று முத்திரை குத்தி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதும் உண்டா? இல்லையா?
- டில்லியின் எல்லை மீறிய அதிகார ஊடுருவலை எதிர்த்து, 1987 மார்ச் மாதத்தில் ‘முஸ்லீம் அய்க்கிய முன்னணி’ ஒன்று உருவானது. தேர்தல் தில்லுமுல்லுகளையும், டெல்லியின் அத்து மீறலையும், எதிர்த்துப் போராடிய அந்த முன்னணி தோழர்களை இந்திய போலீசும், உளவுத் துறையும் மூர்க்கத்தனமாக ஒடுக்கியது உண்மையா? இல்லையா?
- இந்திய பார்ப்பன ஆட்சியின் தேர்தல் அரசியல் மோசடிகளை உணர்ந்து கொண்ட பிறகு தான், இளைஞர்கள் 1989 ஆம் ஆண்டில் தங்களின் விடுதலைக்கான போராட்டத்தை தொடங்கினார்கள் என்பதை மறுக்க முடியுமா?
- 1990-ல் காஷ்மீரின் பல்வேறு பகுதிகளில் விடுதலைக்கான மக்கள் போராட்டம் வெடித்தபோது, ஆயுதமில்லாத அப்பாவி இளைஞர்களையும் அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்திய (செங்கோரா, தெங்டோரா பகுதிகளில்) இளைஞர்களையும் ராணுவம் வேட்டையாடி பிணமாக்கியது உண்டா, இல்லையா?
- 1990 இல் ராணுவத்துக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் ‘காட்டுமிராண்டி’ சட்டத்தைக் கொண்டு வந்து (Armed Forces Special Powers Act) காஷ்மீரில் முழு அதிகாரம் கொண்ட ராணுவ ஆட்சியை நடத்தி வருவது உண்மையா? இல்லையா? அதற்குப் பிறகு சொந்த மண்ணிலேயே காஷ்மீரிகள் கைதிகளாக்கப்பட்டதோடு, சோப்போர், கவக்தால், பிஜ்பேகரா உள்ளிட்ட பல பகுதிகளில் மனித வேட்டை நடத்தி, ரத்த ஆற்றை ராணுவம் ஓடச் செய்தது உண்டா? இல்லையா?
- உலகிலேயே மிகப் பெரும் ஜனநாயக நாடு இந்தியா என்று தம்பட்டமடித்துக் கொண்டு, உலகிலேயே மிகப் பெரும் ராணுவ மண்டலத்தை உருவாக்கி வைத்திருக்கும் நாடாக இந்தியா இருக்கிறது என்பதை மறுக்க முடியுமா? காஷ்மீரில் 50 லட்சம் மக்களைக் கட்டுப்படுத்த 4 லட்சம் ராணுவம் குவிக்கப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டிலிருந்து கொல்லப்பட்டவர்கள் 90000 பேர். ராணுவத்தால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 9000-க்கும் அதிகம். 11 சதவீத காஷ்மீர் பெண்கள் ஏதேனும் ஒரு வகையில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

(ஆதாரம்: எல்லை கடந்த மருத்துவர்கள் குழுவின் ஆய்வு அறிக்கை)

காஷ்மீர் மக்களின் சுயாட்சி உரிமையைப் பறித்ததை 1956 ஆம் ஆண்டிலேயே பெரியார் ‘பார்ப்பனர்களின் காலித்தனம்’ என்று கண்டித்தார்.

ஒரு தேசிய இன மக்களின் உரிமைகளை ராணுவ முனையிலேயே பறித்து வைத்துக் கொண்டு கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு, நம்பிய மக்களுக்கு துரோகம் இழைப்பதுதான் தேச பக்தியா? இந்த துரோகத்தை சுட்டிக்காட்டி, துணிவுடன் உண்மையை உரக்கக் கூறும் அருந்ததிராய்கள் தேச விரோதிகளா? பதில் சொல்லட்டும்!

# வர்ணாஸ்ரம “டையர்கள்”

## ‘ரிவோல்ட்’ பக்கங்களிலிருந்து.... (5)

மலேயாவில் (இப்போது மலேசியா) தொழிலாளர்களாக குடியேறிய தமிழ்நாட்டைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் இந்தியர்களுக்கு ஆட்சி அதிகாரங்கள் வழங்குவது குறித்து, ஆய்வு நடத்த வந்த சைமன் குழுவிடம் அளித்த கோரிக்கை மனுவை முழுமையாக ‘ரிவோல்ட்’ வெளியிட்டது. தீண்டாமைக் கொடுமைகள் பட்டியலிட்டு காட்டியது அந்த மனு. சாதிகளற்ற மலேயா சமூகத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் சமமாக நடத்தப்படுவதை பெருமையுடன் சுட்டிக் காட்டி, தமிழகத்தில் இந்து மதம் திணித்த தீண்டாமைக் கேடுகளை விரிவாக அது விளக்கியது.

பஞ்சாப் ஜாலியன் வாலாபாக்கில் சட்டவிரோதமாகக் கூடிய மக்களை ஈவிரக்கமின்றி பிரிட்டிஷ் அதிகாரி டயர் சுட்டுக் கொன்ற கொடுமையைக் கண்டித்த ‘ரிவோல்ட்’, நமது நாட்டு டையர்களுக்கு எப்போது முடிவு கட்டப் போகிறோம் என்ற கேள்வியை எழுப்பி, நீண்ட தலையங்கத்தைத் தீட்டியது. “தீண்டாமையின் கொடூரங்களை மேடைப் பேச்சுகளாலும், தீர்மானங் களாலும் ஒழித்துவிட முடியாது. பார்ப்பனியத்தில் ஊடுருவியுள்ள அதன் ஆணிவேரைக் கில்லி எறிய வேண்டும். வர்ணாஸ்ரம ஆதரவு மாநாடுகள் நடத்தப்படும் நிலை தொடரும் காலம் வரை சாதி உற்பத்தி நிறுவனங்களான கோயில்கள் புனிதமாக போற்றப்படும் காலம் நீடிக்கும் வரை, “ஜாலியன் வாலா பாக்குகளாக” பிறசாதி மக்களை நடமாட மறுக்கும் அக்கிரகாரங்கள் நீடிக்கும் காலம் வரை, மக்களை இழிவுபடுத்தும் நமது நாட்டு டையர்களான மதப் பிரச்சாரகர்களின் வெறுப்பு கக்கும் மதப்பிரச்சாரம் தொடரும் வரை இந்தப் புற்றுநோய் - சமூகத்தை அரித்துக் கொண்டிருக்கும் காலம் வரை - கோடானு கோடி ஒடுக்கப்பட்ட மக்கள் இழிவிலிருந்து விடுபட முடியாது என்று எழுதியது ‘ரிவோல்ட்’.

பெரியார் இயக்கம் தீண்டப்படாத தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏதும் செய்திடவில்லை என்ற பொய்யான பரப்புரை ஒன்று, சில சக்திகளால் திட்டமிட்டு பரப்பப்படுகிறது. பெரியார் திராவிடர் கழகம், ‘குடிஅரசு’ தொகுப்புகளையும், ‘ரிவோல்ட்’டையும் வெளிக் கொண்டு வந்த பிறகு, இந்த பொய்யுரைகள் சூரியன் கண்ட பனிபோல் மறைந்தோடிப் போய்விட்டன. தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காக பெரியார் இயக்கம் நடத்திய சோர் வில்லா போராட்டங்கள் வரலாறுகளாக இந்த ஏடுகளில் பதிவாகியுள்ளன.

‘ரிவோல்ட்’ தொகுப்பின் இரண்டாம் பகுதியாக வர்ணாஸ்ரம எதிர்ப்பு மற்றும் தீண்டாமை சாதி எதிர்ப்பு தொடர்பாக ‘ரிவோல்ட்’ வெளியிட்ட முக்கிய கட்டுரைகள் 177 பக்கங்களில் தொகுத்து தரப்பட்டுள்ளன.

“தீண்டப்படாத மக்கள், சென்னை மாகாணத்தில்தான் மிகக் கொடூரமான முறையில் நடத்தப்படுகிறார்கள். வேறு எந்தப் பகுதியிலும் இவ்வளவு கொடூரம் இல்லை” என்று காந்தியடிகளே கூறியதை ‘ரிவோல்ட்’ எடுத்துக் காட்டி, வர்ணாஸ்ரமவாதிகளான ‘டையர்’களை வீதிகளில் நேரடியாக சந்திக்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்தது.

ஈரோடு தேவஸ்தானக் கமிட்டி, தீண்டப்படாத மக்களை கோயிலுக்குள் அனுமதிக்கலாம் என்று முடிவு செய்ததை ஏற்க மறுத்த ‘வர்ணாஸ்ரம’ டையர்கள், ஈரோட்டில் உள்ள கோயில்களை ஒரு மாதம் வரை திறக்க மறுத்தனர். ஈரோட்டில் கோயில் நுழைவை வெற்றிகரமாக நடத்தி முடித்த சுயமரியாதை இயக்கத்தையும், ரிவோல்ட்டையும் பாராட்டி, கடிதங்கள் குவிந்தன ! இதை ‘ரிவோல்ட்’ சுட்டிக்காட்டி, பிற பகுதியில் ‘வர்ணாஸ்ரம டையர் களுக்கு’ எதிராக போராட்டங்கள் வெடிக்க வேண்டும் என்று அறைகூவல் விடுத்தது !

(தொடரும்)

# ‘ஆண்டவனை’ மறுத்து ஆள்கிறவரை நம்பும் அர்ச்சகர்கள்

தமிழ்நாட்டில் பழனி, திருச்செந்தூர், மதுரை உள்ளிட்ட 38000 கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்கள், கோயில் ஊழியர்கள், 6 வது ஊதியக் குழு பரிந்துரைப்படி ஊதியம் வழங்கக் கோரி, வேலை நிறுத்தம் செய்துள்ளனர். கோயில்களில் அன்றாட “தெய்வத் திருப்பணிகளான” அர்ச்சனைகள், பூசைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. பிறகு, தமிழக அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி, சுமூக உடன்பாடு ஏற்பட்டு, வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்பட்டுள்ளதாம்.

கோரிக்கைகளை பகவான்களிடம் முறையிடுவதில் எந்தப் பயனும் கிடைத்து விடாது என்பது அர்ச்சகப் பார்ப்பனர்களுக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான் ஆண்டவன் “திருப்பணி”களையே நிறுத்திக் கொண்டு வேலை நிறுத்தம் செய்கிறார்கள். ஏமாந்து போன பக்தர்கள்தான் அர்ச்சனைத் தட்டில் காசைப் போட்டு, ‘பெயருக்கும்’, ‘ராசி’க்கும் அர்ச்சகரிடம் அர்ச்சனை செய்யுமாறு கேட்கிறார்கள்.

அர்ச்சகர்களோ, தங்களது கோரிக்கையை அரசிடம் வைக்கிறார்கள்.

“அர்ச்சகர்களே; உங்களுக்கே கடவுள் மீது நம்பிக்கை இல்லை என்றால், மக்களுக்கு எப்படி நம்பிக்கை வரும் ? இது தெய்வ நிந்தனை ஆகாதா ?” என்று எந்த வைதீகப் பார்ப்பனரும் கேட்கவில்லை. ஆயுதபூசையை நிறுத்தச் சொல்வது கடவுள் உணர்வைப் புண்படுத்து வதாகும் என்று கூப்பாடு போடும், இந்த முன்னணியினரும் கண்டிக்கவில்லை.

கருப்புச் சட்டையுடன் மோதுவதற்கு முன்பு, கருவறைக்குள்ளேயிருந்தே கடவுளுக்கு எதிராகக் கலகக் குரல் கேட்கிறதே; அதை செவிமடுப்பார்களா, இந்த கடவுள் ‘போலீஸ்காரர்கள்’ ?

## தூக்குத் தண்டனைக்கு எதிராக இங்கிலாந்து தீவிரப் பணி

அக்.10 - 'தூக்குத் தண்டனைக்கு எதிரான சர்வதேச நாள்'. உலகம் முழுதும் தூக்குத் தண்டனை நிறுத்தப்பட வேண்டும் என்ற இயக்கத்துக்கு இங்கிலாந்து தலைமை ஏற்று வழி நடத்தத் தொடங்கியுள்ளது. இங்கிலாந்தின் வெளியுறவுத் துறை அமைச்சகம், உலகம் முழுதும் உள்ள அதன் தூதரகங்கள் வழியாக தூக்கு தண்டனை எதிர்ப்பு நாளையொட்டி அந்தத் தண்டனையை நிறுத்தக் கோரும் இயக்கத்தைத் தொடங்கியிருக்கிறது. 2015 ஆம் ஆண்டில் உலகம் முழுதும் தூக்குத் தண்டனை நிறுத்தப்பட்டுவிட்டது என்று பிரகடனப்படுத்துவதே இங்கிலாந்தின் இலக்கு.

உலக நாடுகளில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள இங்கிலாந்து குடி உரிமை பெற்றவர்களை அதிலிருந்து காப்பாற்றும் முயற்சியாக தூக்குத் தண்டனை அமுலில் இல்லாத நாடுகளுக்கு, அவர்களை திருப்பி அனுப்பக் கோரும் முயற்சிகளில் இங்கிலாந்து தூதரகங்கள் இறங்கியுள்ளன. தூக்குத் தண்டனைக்கு மாற்றாக வேறு தண்டனைகளை வழங்குவதற்கு செல்வாக்குள்ள சக்திகளின் வழியாக தொடர்புடைய நாடுகளை நிர்ப்பந்திக்கும் முயற்சிகளிலும், இங்கிலாந்து தூதரகங்கள் செயல்பட்டு வருகின்றன. அத்துடன், அய்.நா. பொதுச் சபை, தூக்குத் தண்டனையை உலகம் முழுதும் முடிவுக்குக் கொண்டு வர வலியுறத்தும் தீர்மானத்தையும் மீண்டும் நிறைவேற்ற இங்கிலாந்து அய்.நா.வை வலியுறுத்தியுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் 22 நாடுகள் தூக்குத் தண்டனையை தங்கள் சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கி விட்டன. இப்போது 95 நாடுகளில் தூக்குத் தண்டனை சட்டப்படி ஒழிக்கப்பட்டு விட்டது. அய்ரோப்பிய ஒன்றியம் முழுதும் (பெலாரஸ் என்ற நாட்டைத் தவிர) தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட்டுவிட்டது. தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் நாடுகளின் எண்ணிக்கையும் 58 ஆக குறைந்துள்ளது. இந்த நாடுகளிலும்கூட குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ன. தூக்குத் தண்டனை அமுலில் உள்ள சீனாவில் அந்நாட்டின் உச்சநீதிமன்றம் தவிர்க்கவே முடியாத வழக்குளில் மட்டும் தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. துப்பாக்கியால் சுட்டு மரண தண்டனை விதிக்கும் முறையை மாற்றி, விஷ ஊசியைப் பயன்படுத்த சீனா முடிவு செய்துள்ளது. அமெரிக்காவில் சில மாநிலங்களில் தூக்குத் தண்டனை அமுலில் உள்ளது. அமெரிக்காவின் சட்டத்தில் 8வது திருத்தம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்படி இனி விஷ ஊசி போடும் முறையையே பயன்படுத்த வேண்டும். ரஷ்யா நாட்டில் தூக்குத் தண்டனை சட்டத்தில் இருந்தாலும் 2009 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்துவது நிறுத்தி வைக்கப்பட்டது. இந்தியாவும் உலக நாடுகளின் மாற்றத்தை ஏற்று, தூக்குத் தண்டனையை சட்டப் புத்தகத்திலிருந்து அகற்ற முன் வருமா ?

**(தகவல்: 'இந்து' தலையங்கம், அக்.26)**

**(அடுத்த இதழில் தூக்குத் தண்டனைக்கு எதிராக தமிழச்சி கட்டுரை)**

**வரப்பெற்றோம்**

### மணற்கேணி

'மணற்கேணி' என்ற இரு மாத கலை - இலக்கிய இதழ் ஒன்று ரவிக் குமாரை ஆசிரியராகக் கொண்டு ஜூலை - ஆகஸ்டு மாதத்திலிருந்து வெளிவரத் தொடங்கி இருக்கிறது. முதல் தலை யங்கத்தில் ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டம் நசுக்கப்பட்டதைக் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. "இதழின் குறிக்கோள் சுதந்திரத்துக்கான வேட்கை குறைந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான்" என்று முதல் தலையங்கம் கூறுகிறது. அழகியல் நேர்த்தியோடும், அழகான கட்டுரைகளோடும் வெளி வந்திருக்கும் - இந்தத் தனிச் சுற்று இதழின் விலை ரூ.40.

தொடர்பு முகவரி: மணற்கேணி பதிப்பகம், முதல் தளம், அறை எண்.2, 10 டாக்டர் நடேசன் சாலை, சென்னை-600 005.


**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.

**தொடர்புக்கு புதிய எண்:**
✆ 99416 13535


*திருச்சி மாவட்டக் கழகத்துக்கு புதிய நிர்வாகிகள்*

# பாரதிதாசன் பல்கலை பார்ப்பன துணைவேந்தருக்கு எதிராக போராட்டம்



27.10.2010 புதன் கிழமை மாலை 4 மணிக்கு திருச்சி தமிழ்நாடு ஹோட்டலில் திருச்சிராப்பள்ளி மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடல் கூட்டத்திற்கு பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை வகித்தார். மேலும் பெரியார் பெருந்தொண்டர் முத்துசெழியன், செ.த. இராசேந்திரன், தி.தாமரைக்கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி முதல்வராக உள்ள பாக்கியராஜ் எனும் கிறிஸ்தவ 'பாதிரியார்' மீது பாலியல் புகார் எழுந்துள்ள நிலையில் அவருக்கு ஆதரவாக நடந்த போராட்டத்தில் திருச்சி மாவட்ட கழகத் தலைவர் செ.த.இராசேந்திரன் பங்கேற்றதை கழக மாவட்டக் கமிட்டி கண்டித்தது. செ.த. இராசேந்திரன், தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார். அதனைத் தொடர்ந்து, திருச்சி மாவட்ட கழகத்திற்கு கீழ்க்கண்ட தோழர்கள் புதிய பொறுப்பாளர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

- மாவட்ட தலைவர் - எஸ்.எஸ்.முத்து; மாவட்ட செயலாளர் - வே.க. குமார்; மாவட்ட இணை செயலாளர் - த. புதியவன்; பொருளாளர் - மு. மனோகரன்; மாவட்ட அமைப்பாளர் - மீ.இ. ஆரோக்கியசாமி.
- திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தராக வந்துள்ள பார்ப்பன மீனா, தான் பதவியேற்ற உடனேயே பல்கலைக்கழகத்தில் சிறப்பாக இயங்கி வந்த பெரியார் உயராய்வு மய்யம், பாரதிதாசன் உயராய்வு மையம் ஆகியவற்றின் செயல்பாடுகளை முடக்கிவிட்டார். அடுத்து பெண்ணியக் கல்விக்கென தமிழ்நாட்டளவில் சிறப்பாக இயங்கி வரும் மகளிர் துறையையும் முடக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். பாரதிதாசனின் சிந்தனைகளுக்கு எதிராக, தீபாவளி பண்டிகைக்கு, பாரதிதாசன் பெயராலே இயங்கும் பல்கலைக்கழகத்தின் சார்பாக செய்தி ஏடுகளில் தீபாவளி வாழ்த்து விளம்பரம் செய்துள்ளார். ஒடுக்கப்பட்ட சமுதாய மக்களுக்கு எதிராக தான்தோன்றிதனமாக செயல்பட்டு வரும், பார்ப்பன துணைவேந்தரை வன்மையாக கண்டிக்கிறோம். தலைமை கழகத்தின் அனுமதி பெற்று துணைவேந்தரை கண்டித்து போராட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.
- பெரியார் பெருந்தொண்டர் தோழர் இளந்தாடி துரையரசன், கழகத்தில் இணைந்ததை பாராட்டி வரவேற்கிறோம்.
- திருவரங்கம் காவல்நிலையத்திற்கு அருகிலுள்ள பெரியார் சிலை முன்பு, சிலையை முழுவதுமாக மறைத்து, காவல்துறையின் பழுதான வாகனத்தை தொடர்ந்து நிறுத்தி வைப்பதை கண்டிப்பதோடு, உடனடியாக அந்த வாகனத்தை அகற்றி, பொது மக்கள் பார்வைக்கு வழி ஏற்படுத்திக் கொடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. காவல்துறையை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முதலமைச்சர் பார்வைக்கு கொண்டு செல்வது என தீர்மானிக்கப்பட்டது.

## சீர்காழி நகர கழகம் கலைப்பு

### நாகை மாவட்ட கழகத்துக்கு புதிய பொறுப்பாளர்கள்

28.10.2010 வியாழன் மாலை 5 மணிக்கு சீர்காழி லிங்கப்பா திருமண மண்டபத்தில், நாகை மாவட்ட கலந்துரையாடல் கூட்டம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையிலும் நடைபெற்றது.

சீர்காழி நகர, ஒன்றிய, மாவட்ட கழகங்களின் செயல்பாடுகள் பற்றி விவாதிக்கப்பட்டு, கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நாகை மாவட்ட தலைவராக இரா. ரசீத்கான், செயலாளராக தெ. மகேசு, அமைப்பாளராக நா. இளையராசா ஆகியோர் பணியாற்றுவது என முடிவு செய்யப்பட்டது.

சீர்காழி நகர கழகம் கலைக்கப்பட்டது, விரைவில் மாவட்ட கழக மேற்பார்வையில் சீர்காழி நகர பொறுப்பாளர்களை அறிவித்து, புதிய நகர கழகத்தை அமைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழுக்கு அதிக சந்தாக்களை சேர்த்துக் கொடுப்பது என முடிவு செய்யப்பட்டது.

## திருச்செங்கோடு கழகப் பொறுப்பாளர்கள் தேர்வு

17.10.2010 அன்று நாமக்கல் மாவட்ட கலந்துரையாடல் கூட்டமும், திருச்செங்கோடு பொறுப்பாளர்கள் நியமனமும், திருச்செங்கோடு பரணி பாவேந்தன் மருத்துவமனைவளாகத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் தி.க. கைலாசம், மருத்துவர் பழ. பாலகிருட்டிணன் முன்னிலையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சியில் அக்டோபர் 2-ல் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட தோழர்களுக்கு நன்றி.

திருச்செங்கோடு நகர பொறுப்பாளர்களாக கீழ்க்கண்ட தோழர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

தலைவர் - சி. சிவக்குமார்; துணைத் தலைவர் - து.சதிசுகுமார்; செயலாளர் - மா. வைரவேல்; துணைச் செயலாளர் - ஆ.பூபதி.

# கம்யூனிஸ்ட்டுகளின் சிந்தனையில் தேக்கம்: பிரகாஷ் காரத் – லண்டனில் பேச்சு

மாறி வரும் புதிய சூழலைப் புரிந்து கொள்ளாமல், 1940 ஆம் ஆண்டு சிந்தனைப் போக்குகளிலேயே இந்தியாவின் இடதுசாரிகள் இருக்கிறார்கள் என்று இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் பிரகாஷ் காரத் - கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய ஆய்வு சொற்பொழிவில் ஒப்புக் கொண்டுள்ளார்.

“ஜாதி என்ற அமைப்பு தானாக மறைந்து விடும். அதற்கு முக்கியத்துவம் தர வேண்டாம். வர்க்கம்தான் முக்கியம் என்று நினைத்து சாதிய அமைப்பு முறையின் வலுவைக் குறைத்து மதிப்பிட்டதன் பலனை இடதுசாரிகள், இப்போது அனுபவித்து வருகிறார்கள்” என்றும், அவர் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் மார்க்சிஸ்ட் சிந்தனையாளரும், வரலாற்று ஆசிரியருமான விக்டர் கீர்னன் நினைவு உரையை லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பிரகாஷ் காரத் நிகழ்த்தும்போது, இந்தக் கருத்துகளை அவர் வெளியிட்டார்,. 1938 முதல் 1946 வரை கீர்னன், இந்தியாவில் வாழ்ந்தவர். அப்போது கம்யூனிஸ்ட் கட்சி, பிளவுபடவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியைத் தொடர்ந்து விமர்சித்து வந்த அவர், இந்தியாவில் இடதுசாரித் தலைவர்களையும் தொண்டர்களையும் “காபிக் கடை அறிவு ஜீவிகள்” என்று அவர் கேலி செய்து வந்ததாக பிரகாஷ் காரத் கூறினார்.

“இந்தியாவில் இப்போது ஏற்பட்டு வரும் சமூக அரசியல் மாற்றங்களை இடதுசாரிகள் புரிந்து கொள்ள வேண்டும். மாறி வரும் சூழ்நிலைக்கேற்ற சித்தாந்தமோ, உத்தியோ, இடதுசாரிகள் வசம் இப்போது இல்லை என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும்” என்றும் அவர் கூறியுள்ளார்.

1968 ஆம் ஆண்டில் எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தபோது முதன்முதலாக கீர்னன் சாதித்ததை நினைவு கூர்ந்தார், காரத். “இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்து நீங்கள் வருகிறீர்கள் ? இது, அவர் என்னிடம் கேட்ட முதல் கேள்வி. இரண்டாவது கேள்வி, நீங்கள் எந்த ஜாதி ? என்பதாகும். நான் ஜாதியைப் பயன்படுத்துவதில்லை என்றாலும், ‘மேனன்’ என்று கூறியவுடன், அவர் சிரித்துக் கொண்டே கேட்டார். “ஆக எல்லா மேனன்களையும் போல், நீங்களும் அய்.ஏ.எஸ். ஆகப் போகிறீர்களா ?” நான் பதில் சொன்னேன். “இந்தியாவில் இரண்டு வகை மேனன்கள் உண்டு; ஒரு வகையினர் அய்.ஏ.எஸ்.கள்; மற்றொரு வகையினர் கம்யூனிஸ்டுகள்” என்று கூறினேன். இருவரும் வாய்விட்டு சிரித்தோம்” என்று காரத் குறிப்பிட்டார்.

**(செய்தி: ‘இந்து’ அக்.24, ‘தினமணி’ அக்.25)**

## லோகு அய்யப்பன் பிணையில் விடுதலை



ஈழத் தமிழ் அகதிகளுக்கு உதவியதாக கைது செய்யப்பட்ட புதுவை கழகத் தலைவர் லோகு அய்யப்பன், சக்திவேல் (தி.மு.க.), கண்ணன் (பா.ம.க.), தேவமணி, ஜீவா ஆகியோர் பிணையில் விடுதலையானவுடன் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

### வந்த கடிதம்

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ 14.10.2010 இதழில் வெளியான நீதிமன்றம் ‘இராமராஜ்யம்’ நடத்து கிறதா ? என்னும் தலைப்பிலான முகப்புக் கட்டுரையைப் படித்தேன். “இராமனே நீதிமன்றத்தில் மனிதராகி விட்டபோது, நீதிபதிகள் மனு தர்மத்தைத் தானே தீர்ப்பாக வழங்கு வார்கள். அதுதான் அலகாபாத்தில் நடந்து முடிந்திருக்கிறது என்று எழுதப்பட்ட முகப்புக் கட்டுரை அதி அற்புதமாய் மிகச் சிறப்பாக உள்ளது. என் உளங்கனிந்த பாராட்டுகள்.

**தங்க. தங்கரபாண்டியன், மணலி புது நகர்.**

## பழ. நீலவேந்தன் இல்ல மண விழா



17.10.2010 அன்று ஆதித் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் பழ. நீலவேந்தனின் சகோதரி ப. சிறீமதி - மு. கார்க்கி ஆகியோரது வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழா, திருப்பூர் தெற்கு ரோட்டரி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. ஆதித்தமிழர் பேரவையின் தலைவர் இரா. அதியமான் தலைமையில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்தி வைத்தார். மணவிழா நினைவாக ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழ் வளர்ச்சிக்காக ரூ.1000 நன்கொடை வழங்கினர்.

## திருப்பூரில் பெரியார் பிறந்த நாள்

17.10.2010 அன்று திருப்பூர் புற நகரான மாஸ்கோ நகர் பகுதியில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் ஒன்றிய தலைவர் க. அகிலன் தலைமையில் நடந்தது. கோபிநாத், விசயன், ரஞ்சித், முருகன், சின்னதம்பி, சுரேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நீதிராசன் வரவேற்புரையாற்றினார். குடந்தை சிற்பிராசன், மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடத்தியதைத் தொடாந்து, கோபி வேலுச்சாமி, பொள்ளாச்சி க.சு. நாகராசு ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்விற்கு கோவை நாகராசு, திருப்பூர் மாவட்ட தலைவர் சு. துரைசாமி, மாநகர தலைவர் இரமேசு பாபு, மாநகர செயலாளர் முகில்ராசு மற்றும் சம்பூகன், சண்.பாண்டியநாதன், பாடகர் தியாகு, பரிமளாராசன், அவினாசியப்பன், இரா. குமார், ஞா. காத்திகேயன், இராமசாமி, ஜெகதீசன், பெரியார் முத்து, கருணாநிதி, இரவி, மு. மணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அர்த்தனாரி நன்றி கூறினார்.

## தென் திருப்போரையில் கழகக் கூட்டம்

தூத்துக்குடி மாவட்டம் தென் திருப்போரையில் 23.10.2010 அன்று மாலை பெரியாரியல் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம், ஆழ்வார் திருநகரி ஒன்றிய கழகத்தின் சார்பில் நடைபெற்றது. ஆழ்வை ஒன்றிய செயலாளர் இரா. உதயக்குமார் தலைமையில் நடந்த கூட்டத்தில், ஒன்றிய தலைவர் பா. முருகேசன் முன்னிலையில், கழகத் தோழர்கள் வே. பால்ராசு, கோ.அ.குமார், பொறிஞர் சி. அம்புரோசு, பால். பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து பால். அறிவழகன், மந்திரமல்ல தந்திரமே நிகழ்ச்சியை நடத்தினார். ஆழ்வை சு. மனோகர் நன்றி கூறினார்.

## கடத்தூர் கழகத் தோழர் ந. கிருட்டிணன் முடிவெய்தினார்


21.10.2010 இரவு திருப்பூர் மாவட்டம் கணியூர் பகுதி கடத்தூர் கழகத் தோழர் ந. கிருட்டிணன் (வயது 37) முடிவெய்தினார். கழகத்தோழர்கள் காந்தி, கதிரவன், கணக்கன், அய்யப்பன், சரவணன் மற்றும் காரத்தொழுவு சிவானந்தம், மோகன், மயில்சாமி, விசு, உடுமலை அரிதாசு, கொழுமம் ராஜேந்திரன், பீட்டர் உள்ளிட்ட தோழர்களும் மற்றும் பழனி ஜவகர் மற்றும் பழனி மானுப்பட்டி பகுதியைச் சார்ந்த கழகத் தோழர்களும், கணியூர் கழகத் தோழர் சாமிநாதன், விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த கடத்தூர், காமராஜ், காளிமுத்து, சதீஷ், கருப்புசாமி மற்றும் பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த தோழர்கள் ஈஸ்வரன், சிலம்பாட்ட ஆசிரியர் வீரமணி, பகுத்தறிவாளர் பேரவையைச் சேர்ந்த மடத்துக்குளம் இரா. மோகன் போன்ற தோழர்களும் கலந்து கொண்டு, தோழரின் இறுதி ஊர்வலத்தில் கழகக் கொடியை கிருட்டிணன் உடலுக்கு அணிவித்து தோழரின் கழகப் பணிகளை நினைவு கூர்ந்தனர். மறைந்த தோழர் கிருட்டிணனின் மகள் “எனது அப்பா, பெரியார் கொள்கை வழி வாழ்ந்தவர்; அவரது இறுதி நிகழ்வும், கொள்கை வழியே நடக்க வேண்டும்” என்று தோழர்களிடம் கண்டிப்பாக கூறினார். உடனே உறவினர்கள் அவர் நெற்றியில் வைத்திருந்த ஒரு ரூபாய் நாணயம் எடுக்கப்பட்டு, கழகக் கொடி போர்த்தப்பட்டது.

இறுதி ஊர்வலம் கடத்தூர் வீதிகளில் வீரவணக்கம், வீரவணக்கம் என்ற முழக்கத்தோடு சென்று அடக்கம் செய்யப்பட்டது. இறுதிச் சடங்கு நிகழ்வில் திராவிடர் கழகத் தோழர் நா. சாமிநாதன், விடுதலைச் சிறுத்தைகள் தோழர் சதிஷ், பொதுவுடைமைக் கட்சி வீரமணி ஆகியோர் இரங்கல் உரை ஆற்றினர். பகுத்தறிவாளர் பேரவை இரா. மோகன், மறைந்த தோழரின் கழகப் பணிகளையும், கடத்தூர் பகுதியில் அவருடைய சமுதாயப் பணிகளையும் எடுத்துக் கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 4th November 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்
# பெரியார் முழக்கம்
பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | நவம்பர் 11, 2010 | புரட்சி 9 | முழக்கம் 44 | விலை: ரூ.2.50


### மத்திய அரசு காட்டிய "ஆதாரங்கள்" மீது நீதிபதி சந்தேகம்

# 'விடுதலைப்புலிகள்' தடை நீங்குமா?

*விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிக்க வேண்டும் என்று தமிழக அரசின் சார்பில் வாதிட்ட வழக்கறிஞரிடம், "நீங்கள் தடையை நீக்கி விட்டாலே, நீங்கள் கூறும் (விடுதலைப் புலிகள் தொடர்பான) நடவடிக்கைகள் தாமாகவே குறைந்துவிடும்" என்று தீர்ப்பாய நீதிபதி விக்கிரமித் சென் கூறியுள்ளார்.*

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தடையை நீடித்து, மத்திய அரசு மே 14 ஆம் தேதி பிறப்பித்த ஆணையைத் தொடர்ந்து, ஒரு நீதிபதியைக் கொண்ட தீர்ப்பாயம் கருத்துகளைக் கேட்டு வருகிறது. 6 மாதத்துக்குள் தீர்ப்பாயம் (நவம்பர் 13-க்குள்) தனது கருத்தை தெரிவிக்க வேண்டும். புதுடில்லி, உதகமண்டலம், சென்னை நகரங்களில் கருத்துகளைக் கேட்ட தீர்ப்பாயம் இறுதியாக டில்லியில் கருத்துகளைக் கேட்டது. முதலில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி மட்டுமே தீர்ப்பாயத்தில் பேசலாம் என்று நீதிபதி கூறிவிட்டார். இயக்கம் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், அதன் பிரதிநிதி எப்படி பங்கேற்க முடியும் என்ற கேள்வி முன் வைக்கப்பட்டது.

உதகையில் தீர்ப்பாயம் முன் விடுதலைப் புலிகள் சார்பில் கருத்து தெரிவிக்க முன் வந்த பழ. நெடுமாறன், வை.கோவிற்கு, நீதிபதி அனுமதி அளிக்க மறுத்துவிட்டார். மத்திய அரசின் சார்பில் உள்துறை அமைச்சகத்தின் உளவுப் பிரிவு இயக்குனர் மிஸ்ரா என்பவர் தடையை நியாயப்படுத்தி பேசினார். அவரிடம் நீதிபதி வழியாக குறுக்கு விசாரணை நடத்த வைகோவை நீதிபதி அனுமதித்தார். 'நாடு கடந்த தமிழீழ அரசு' என்ற அமைப்பு, விடுதலைப் புலிகளால்தான் அமைக்கப்பட்டுள்ளது என்று மிஸ்ரா கூறியதற்கு, அந்த அமைப்பு செயல்படுவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்துள்ள அமெரிக்கா, கனடா மற்றும் அய்ரோப்பிய நாடுகள் அனுமதித்துள்ளதை வைகோ சுட்டிக் காட்டி பதிலடி தந்தார். தமிழ் நாட்டையும், தமிழ் ஈழத்தையும் இணைத்து அகன்ற தமிழ் ஈழத்தை விடுதலைப் புலிகள் உருவாக்குகிறார்கள் என்பதே. இந்திய அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதற்கான காரணமாகக் கூறியது. விடுதலைப் புலிகள் அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ள தமிழ் ஈழ வரைபடத்தில் தமிழ்நாடு சேர்க்கப்படவில்லை என்பதை வைகோ ஆதாரத்துடன் எடுத்துக் காட்டினார்.

டில்லியில் நடந்த இறுதி கட்ட விசாரணையில், மத்திய அரசின் சார்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் ஏ.எஸ். சந்தியோக் நேரில் தோன்றி, புலிகள் இயக்கத்தை தடை செய்வதற்கான காரணங்கள் அடங்கியுள்ளதாக சில ஆவணங்களை தாக்கல் செய்தார். இவை ரகசிய ஆவணங்கள் என்றும் கூறினார். ஆவணங்களைப் படித்துப் பார்த்த நீதிபதி சென், "இந்த ஆவணங்கள் உண்மையானவை தானா என்பது எனக்கு எப்படித் தெரியும் ? இவை எல்லாம் ரகசிய ஆவணங்கள் என்று, எப்படி உங்களால் உரிமை கோர முடிகிறது ? ஒரு ஜனநாயக நாட்டில் ரகசியம் என்று ஒன்றும் கிடையாது. எப்போதாவது, விதிவிலக்காகத்தான் ரகசியத்தைப் பயன்படுத்த வேண்டும். இந்தத் தகவல்களை வெளிப்படுத்துவதால் யாருக்கும் எந்த ஆபத்தோ, சங்கடமோ வந்துவிடப் போவதில்லை. ரகசியப் பிரிவு போலீசுக்கு சிலர் கொடுத்த தகவல்கள் இவை. வேண்டுமனால், அதிகபட்சமாக தகவல்களைக் கொடுத்தவர் பெயர்களை மட்டும் வெளியிடாமல் இருக்கலாம்" என்று நீதிபதி கூறினார்.

தமிழ் ஈழம் தனி நிலப் பகுதியையும் வரலாற்றையும் கொண்டது என்பதை விளக்கி, மேதகு பிரபாகரன் ஆற்றிய மாவீரர் நாள் உரையிலிருந்து வைகோ விரிவாக எடுத்துக் காட்டினார். அண்மையில் நியூசிலாந்து உச்சநீதிமன்றம், விடுதலைப் புலிகள் ஒரு அரசியல் இயக்கம். தமிழ் ஈழம் சிறீலங்கா எல்லைக்குள்தான் அடங்கியுள்ளது என்று தீர்ப்பளித்ததையும் வைகோ சுட்டிக் காட்டினார்.

மத்திய அரசின் நிலையை ஆதரித்து, தமிழக அரசு சார்பில் வாதிட்ட வழக்கறிஞர் எஸ். தனஞ்செயன், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மீது தொடரப் பட்டுள்ள வழக்குகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை குறிப்பிட்டு தடையை நியாயப்படுத்தினார். அப்போது நீதிபதி, தடையை நீக்கி விட்டால், இந்த வழக்குகள் குறைந்து விடுமே என்று திருப்பிக் கேட்டார்.

தமிழர் தேசிய இயக்கம் சார்பில் வழக்கறிஞர் சந்திரசேகர், கைதிகளுக்கான உரிமைகள் அமைப்பு சார்பில் வழக்கறிஞர் இராதாகிருட்டிணன் ஆகியோர், புலிகள் மீதான தடையை நீக்குமாறு வாதாடினர்.

## பூமி பூஜை போடுகிறார், தி.மு.க. சட்டமன்ற 'கொறடா'



தி.மு.க. அரசின் தலைமைக் கொறடாவும், ஒட்டன்சத்திரம் சட்டப் பேரவை உறுப்பினருமான அர. சக்ரபாணி அடிப்படையில் ஓர் இந்துத்துவவாதி. இவர் தொடர்ந்து மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். இவரது இந்துத்துவா செயல்பாடுகள் வெளிப்படையாகவே செயல்படத் தொடங்கிவிட்டது. ஒட்டன்சத்திரம் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் நகரில் நடக்கும் அரசு விழாக்கள் அனைத்தும் பார்ப்பனரை வைத்து சமஸ்கிருத வேத மந்திரங்கள் முழங்க நடத்தப்பட்டு வருகின்றன. அது செய்தித் தாள்களிலும் தொடர்ந்து வெளி வருகிறது.

ஒட்டன்சத்திரம் தொடர்வண்டி பாதை அகலபாதையாக அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் 5, 6, 7-வது வார்டுகளிலுள்ள பொது மக்களின் நடைபாதைக்காக சுரங்கப் பாதை அமைக்கும் பணி தொடங்குவதற்காக கடந்த 27.10.2010 அன்று தொடக்க விழாவை பூமி பூஜை என்ற பெயரில் "பார்ப்பனரை" வைத்து "சமஸ்கிருத வேத மந்திரங்கள்" முழங்க, தமிழக அரசின் தலைமை கொறடா அர. சக்கரபாணி தொடங்கி வைத்து, தனது இந்துத்துவா பற்றினை வெளிப்படுத்தினார்.

இவரைத்தான் திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, மிகச் சிறந்த பகுத்தறிவுவாதி என்று வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் புகழாரம் சூட்டி வருகிறார். அதோடு கடந்த சூலை 2010 முதல் வாரத்தில் ஒட்டன்சத்திரத்தில் திராவிடர் கழகத்தின் சார்பாக நடந்தக் கூட்டத்தில் அரசு தலைமை கொறடாவுக்கு பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

## ஊருக்கு உபதேசம்.... உங்களுக்கு....?

*"…. காடுவரை பிள்ளை என்பதெல்லாம் அந்தக் காலம்; நம்மை (சுடு) காட்டுக்கு அனுப்ப முந்துறும் பிள்ளைகளே… முந்தித் தவங்கிடந்து முன்னூறு நாள் கழித்துப் பெற்ற பிள்ளைகள்!*

*எனவே நல்ல வாழ்வியல் - பகுத்தறிவு சிந்தனையாளர் களே! உங்கள் குடும்பத்தவரை நம்புவதைவிட நெருக்கமான உயிர்காக்கும் தோழர்கள், தோழிகளோடு வாழுங்கள் - உங்கள் வாழ்விணையர்களையே பெரிதும் நம்புங்கள்.*

*இறுதி வரை உங்கள் கால்களில் நீங்கள் நில்லுங்கள் - உங்களது பிள்ளைப் பாசம், பரிவுக்கும்கூட உச்சவரம்பு தேவை."*

**கி. வீரமணியின் 'வாழ்வியல் சிந்தனை'**
- **'விடுதலை'** 7.10.2010

## மேட்டூர் தோழர்கள் பிணையில் விடுதலை

அரசு ஆணைகளுக்கு எதிராக ஆயுத பூசை கொண்டாடிய மேட்டூர் காவல் நிலையத்தில், அதைத் தட்டிக் கேட்ட கழகத் தோழர்கள் மாவட்டத் தலைவர் மார்ட்டின், பொருளாளர் கோவிந்தராசு, முத்துராசு, பாலு ஆகியோர் மீது காவல்துறை பொய் வழக்கு களைப் பதிவு செய்தது. சேலம் சிறையில் தோழர்கள் அடைக்கப்பட்டனர். அவர்களுக்கான பிணை மனுவை சேலம் மாவட்ட நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மீண்டும் உயர்நீதிமன்றத்தில் மூன்று தோழர் களுக்கான பிணை மனுக்களை கழக மூத்த வழக்கறிஞர் துரைசாமி, வழக்கறிஞர் இளங்கோவன் தாக்கல் செய்தனர். நீதிபதி மதிவாணன் முன் விசாரணைக்கு வந்தது.தோழர் மார்ட்டின் நீங்கலாக மற்ற மூன்று தோழர்களும் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். மார்ட்டீனுக்கு தனியாக பிணை மனு போடப்பட்டுள்ளது.

இரண்டு வார காலம் தோழர்கள் கொள்கைக்காக சிறைத்தண்டனை ஏற்றனர்.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 11.11.2010

# 10 ஆண்டுகளாக பட்டினிப்போர் நடத்தும் பெண் போராளி

அந்தப் பெண் போராளியின் பெயர் இரோம் ஷர்மிளா. 10 ஆண்டுகாலமாக பட்டினிப் போராட்டத்தை நடத்தி வருகிறார், இந்த மணிப்பூர் இளம் பெண் என்ற செய்தி வியப்பாக இருக்கிறதா ? உணவை ஏற்க மறுக்கும் அவரை, கட்டாயப்படுத்தி மூக்கு வழியாக திரவ உணவை அவ்வப்போது செலுத்தி வருகிறது, மாநில காவல்துறை! அவரது கோரிக்கைதான் என்ன ? இராணுவ சிறப்பு அதிகார சட்டத்தை (1958) திரும்பப் பெற வேண்டும் என்பதே அவரது ஒற்றைக் கோரிக்கை. இந்தியாவின் கொடூரமான ஆட்சிப் பிடிக்குள் வலுக்கட்டாயமாக சேர்க்கப்பட்ட வடகிழக்கு மாநிலங்களில் தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் நடக்கின்றன. மணிப்பூர் மாநிலமும் அதில் ஒன்று. இந்த மாநிலங்களில் போராடும் மக்களை ஒடுக்குகிறது இந்திய தேசியப் பார்ப்பன - பனியா ஆட்சியின் இராணுவம்.

அந்த இராணுவத்துக்கு சிறப்பு அதிகாரங்களும் வழங்கப்பட்டு, அதற்கான விசேட சட்டமும் அமுலில் உள்ளது. இரண்டாம் உலகப் போர் நடந்த 1942 ஆம் ஆண்டில் காங்கிரசார் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை நடத்தியபோது, அதை ஒடுக்கு வதற்கு, அன்றைய பிரிட்டிஷ் அரசு பிரகடனப்படுத்தியது தான், இந்த இராணுவ சிறப்பு அதிகாரச் சட்டம்! அதே சட்டத்தை அதில் இடம் பெற்றிருந்த அதே வார்த்தைகளோடு மிகச் சிறிய மாற்றத்துடன் 1958 இல் மீண்டும் அமுல்படுத்தியது, “சுதந்திர” இந்தியாவின் பார்ப்பன ஆட்சி! நாகலாந்தில் விடுதலை போராளிகளுக்கும், மத்திய அரசுக்குமிடையே ‘போர் நிறுத்தம்’ அமுலில் இருப்பதால், அம் மாநிலத்தில், இந்த சட்டம் தற்போது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது.

மத்திய அரசின் இந்தச் சட்டத்தை ஒரு அறிவிப்பின் வழியாக எந்த மாநிலத்திலும் அமுலாக்கிக் கொள்ள முடியும். அசாமில் மாநில அரசே இப்படி ஒரு சட்டத்தை நிறைவேற்றி இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அதிகாரத்தைப் போல் மாநில காவல்துறைக்கும் வழங்கியிருக்கிறது. 1990 ஆம் ஆண்டில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கும், இந்தச் சட்டம் விரிவுபடுத்தப்பட்டு விட்டது. இந்தச் சட்டத்தை எதிர்த்துத் தான் காஷ்மீரில் இளைஞர்கள் போராடிக் கொண்டிருக் கிறார்கள்.

இராணுவ சிறப்பு அதிகாரச் சட்டத்தின்படி, ஒரு இராணுவ சிப்பாய், ஒருவரை தீவிரவாதி என்று சந்தேகித் தாலே அவரை சுட்டுக் கொல்ல அதிகாரம் வழங்கப்பட் டுள்ளது. அந்த இராணுவ சிப்பாய், சம்பந்தப்பட்ட பொறுப்பில் அமர்த்தப்பட்டவராக இருக்க வேண்டும் என்ற அவசியம்கூட இல்லை. உயர் அதிகாரிகளிடமிருந்து முன் அனுமதி பெற வேண்டியதும் இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக முறைகேடாக நடந்ததாக எந்த ஒரு ராணுவத் தினரையும் தண்டிக்கவே முடியாது. மன்னர்கள் நடத்திய இராணுவ ஆட்சியில் நடைமுறையில் இருந்ததைப் போன்ற இந்த சட்டம் தான், இப்போது இந்திய தேசிய பார்ப்பன ஜனநாயகத்தில் கோலோச்சிக் கொண்டிருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி மணிப்பூரில் இராணுவம் மக்களை சுட்டுத் தள்ளுகிறது.

அவ்வப்போது விசாரணைக் குழுக்கள் கண் துடைப்புக்காக அமைக்கப்படுவது வாடிக்கை. மருத்துவக் கல்லூரி மாணவர் உட்பட 9 அப்பாவி பொது மக்கள் சுட்டுக் கொல்லப்பட்ட போது அமைக்கப்பட்ட ஒரு விசாரணைக் குழு மட்டும் (தாஸ் விசாரணை ஆணையம்) துப்பாக்கியால் சுட்ட மத்திய ரிசர்வ் போலீஸ் படையைச் சார்ந்த ஒருவரை தண்டிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தது. ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அசாம் துப்பாக்கிச் சுடும் பிரிவைச் சார்ந்த 11 பேர் மணிப்பூரில் ஒரு இளம் பெண்ணை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி கொலை செய்த நிகழ்ச்சி, பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. (2004, ஜூலை 11) 12 மணிப்பூர் பெண்கள் முழு நிர்வாணத்தோடு இம்பாலில் அசாம் துப்பாக்கிச் சுடும் இராணுவ முகாம் முன் திரண்டு, “எங்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி - சுடு” என்ற முழக்கத்தோடு போராடியது நாட்டையே உலுக்கியது. இது தொடர்பாக விசாரணை ஆணையம், நீதிமன்ற விசாரணைகள், மணிப்பூர் அரசால் கண்துடைப்புக்காகவே அமைக்கப் பட்டன. குற்றமிழைத்த அசாம் துப்பாக்கி சுடும் பிரிவினர் மீது நடவடிக்கை எடுக்க, இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சி, கடைசி வரை அனுமதி வழங்கவே இல்லை.

இராணுவ சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கிட வேண்டும் என்று நீதிபதி ஜீவன் ரெட்டி தலைமையில் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையம் (இது மத்திய அரசாலே நியமிக்கப்பட்ட ஆணையம்) தந்த 157 பக்க



அறிக்கையையும் மத்திய பார்ப்பன ஆட்சி, குப்பைத் தொட்டியில் வீசிவிட்டது.

ஷர்மிளா போராடுவது இதற்குத்தான். 2000 ஆம் ஆண்டு நவம்பரில் - இவர் தனது போராட்டத்தைத் தொடங் கினார். அப்போது இந்த கிராமத்துப் பெண்ணின் வயது 28. இம்பால் நகரிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மல்லோம் என்ற ஊரில் பேருந்துக்காக காத்திருந்த 10 அப்பாவி மக்களை அசாம் துப்பாக்கிச் சுடும் பிரிவு கண் மூடித்தனமாக சுட்டுக் கொன்றது. இறந்தவர் களில் 62 வயது மூதாட்டியும் ஒருவர். அதற்கு முன் விமான நிலையத்தி லிருந்து இராணுவத்தினர் திரும்பியபோது, போராளிகள் வழியில் வெடிகுண்டு ஒன்றை வெடிக்கச் செய்தனர். ஆனால், இராணுவத்தினர் ஒருவரும் சாக வில்லை. இதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாகவே இராணுவம் இந்த படுகொலையில் இறங்கியது. இந்த படுகொலை நடந்த செய்தி வந்தவுடனே கொதித்து எழுந்த ஷர்மிளா, அதே நாளில் தனது போராட்டத்தை தொடங் கினார்.

இந்திய தண்டனைச் சட்டம் 309 ஆவது பிரிவின்படி தற்கொலைக்கு முயன்றதாக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, இம்பாலில் உள்ள ஜெ.என். மருத்துவ மனையில் ஒரு தனி அறையை சிறையாக்கி, அங்கே ஷர்மிளாவை கைதியாக அடைத்துள்ளது மணிப்பூர் அரசு. ஓராண்டு முடிந்ததும் விடுதலை செய்யப்படுவார்; சிறையை விட்டு வெளியே வந்தவுடன், ‘மெய்ரா பாய் பாய்’ என்ற பெண்கள் அமைப்பு பாதுகாப்போடு அவரை, தங்களது அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லும். அங்கு உண்ணா விரதத்தைத் தொடருவார். அடுத்த 48 மணி நேரத்தில் மீண்டும் கைது செய்யப்படுவார். இது ஆண்டுதோறும் நடக்கும் நிகழ்வு. இதே போல் 2006 ஆம் ஆண்டு அவர் விடுதலை செய்யப்பட்டபோது, எவரும் எதிர்பாராத வகையில் டெல்லிக்குப் பயணமாகிவிட்டார். புதுடில்லியில் ‘ராஜ்காட்’டில், அவரது உண்ணாவிரதம் தொடர்ந்தது. தேசிய, சர்வதேச ஊடகங்கள் திரண்டு விட்டன. இராணுவ சிறப்பு அதிகார சட்டத்தை நீக்கக் கோரி, பிரதமருக்கும், குடியரசுத் தலைவருக்கும் அங்கிருந்து கடிதங்கள் எழுதினார். அம்பலப்பட்டுப் போன பார்ப்பன இந்திய ஆட்சி, ஷர்மிளாவை கைது செய்து, அகில இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தில் சேர்த்தது. அங்கே நோபல் பரிசு பெற்ற ஈரான் நாட்டு மனித உரிமைப் போராளி சிரீன் எபாடி (Shirin Ebadi) - ஷர்மிளாவை சந்தித்து, தனது ஆதரவைத் தெரிவித்தார். ஷர்மிளா உடல்நிலை மிக மோசமடையவே டெல்லி போலீஸ் அவரை மணிப்பூர் போலீசிடம் ஒப்படைத்தது.

ஷர்மிளாவின் இராணுவ அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்துக்கு சர்வதேச அமைப்புகள் பாராட்டுகளையும், விருதுகளையும் அவருக்கு வழங்கி வருகின்றன. தென்கொரிய மனித உரிமை அமைப்பு வழங்கிய பெருமைமிக்க மனித உரிமை விருதை, ஷர்மிளாவின் சகோதரர் 2007 இல் தென்கொரியாவின் சியோல் நகரத்துக்குப் போய் ஷர்மிளா சார்பில் பெற்றுக் கொண்டார். திட்டமிடுதல் மற்றும் நிர்வாகத்துக்கான நிறுவனம், ‘ரவீந்திரநாத் தாகூர் சமாதான விருதை’ வழங்கி, 51 லட்சம் ரொக்கப் பணத்தையும், தங்கமெடலையும் கடந்த செப்டம்பர் 11 ஆம் தேதி அவருக்கு வழங்கியுள்ளது.

போராட்டத்தை நிறுத்துமாறு உலகம் முழுதும் வரும் வேண்டுகோளுக்கு ஷர்மிளா செவிசாய்க்கவில்லை. இராணுவ சிறப்பு அதிகாரச் சட்டம் திரும்பப் பெறும் வரை போராட்டம் தொடரும் என்பதில் உறுதியாகவே இருக்கிறார்.

நவம்பர் 4, 2010 இல் அவரது போராட்டம் 10 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. ‘ஜனநாயகம்’ என்ற போர்வையில் தேசிய இனங்களின் உரிமைகளை ஒடுக்கும் பார்ப்பன பனியா ஆட்சியின் இராணுவ ஒடுக்குமுறைக்கு எதிரானது ஷர்மிளாவின் போராட்டம். ஷர்மிளா தனி மனிதரல்ல; பார்ப்பன - பனியா அடக்குமுறை ஆட்சிக்கு எதிரான கோடானுகோடி மக்களின் பிரதிநிதி!

*(காந்தியார் நடத்திய உண்ணாவிரதம், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரானது. எனவே அதைச் சண்டித்தனம் என்றார் பெரியார். திலீபன் உண்ணாவிரதமும், ஷர்மிளா உண்ணாவிரதமும் அடக்குமுறைக்கு எதிரானது. மக்கள் விடுதலைக்கானது; எந்த ஒரு போராட்ட வடிவமும் சரியா தவறா என்பதன் நோக்கம் சூழல்களைக் கொண்டே முடிவு செய்யப்பட வேண்டும். சிறைக் கைதிகளுக்கு உள்ள ஒரே போராட்ட வடிவம் ‘உண்ணா விரதம்’ மட்டுமே! போராட்ட வடிவங்களை சமூக, வரலாற்றுச் சூழல்களே தீர்மானிக்கின்றன. போராட்ட வடிவங்களைவிட போராட்டத்தின் நோக்கமே முக்கியம் என்ற பெரியாரியல் பார்வையில் ஷர்மிளாவின் போராட்ட நியாயங்களைப் புரிந்து கொள்ள முடியும்.)*

**– இரா.**

# திருப்பூர் வீரபாண்டி பகுதியில் பெரியார் 132 ஆவது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம்

பெரியார் 132 ஆவது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் திருப்பூர் வீரபாண்டி பகுதியில் சிறப்புடன் நடைபெற்றது. மா. ராமசாமி வரவேற்புரையாற்றினார். முன்னதாக தியாகு, ரவிச்சந்திரன் ஆகியோர் கொள்கைப் பாடல்களை பாடினர். பெரியார் பிஞ்சு கனல் மதியின் சாதி எதிர்ப்புப் பாடல், கூட்டத்தினரை மிகவும் கவர்ந்தது. சிற்பி இராசனின் ‘மந்திரமா, தந்திரமா’ நிகழ்ச்சி தொடங்கியவுடன், பெருமளவில் கூட்டம் கூடி விட்டது.

தொடர்ந்து கா.சு. நாகராசுவின் சிறப்புரையில் மேட்டூர் காவல் நிலையத்தில் ஆயுத பூசையை எதிர்த்து கழகம் போராடியதையும், சாதி தீண்டாமைக்கு எதிராக அக்.2 இல் நடத்திய திருச்சி போராட்டத்தின் வெற்றிக் குறித்தும் விளக்கிப் பேசினார். கோபி. வேலுச்சாமி சிறப்புரையாற்றினார். இலகுவான கொங்கு வட்டார மொழி நடையில் சாதி மறுப்பு, கடவுள் மறுப்பு கொள்கைகளை பேசியது அனைவரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது.

ஆழமாக யோசிக்க வைக்கிற செய்தியாகவும் பின்பற்ற வேண்டும் என்கிற நிபந்தனையை தூண்டும் விதமாக அவரின் பேச்சு அமைந்திருந்தது. நிகழ்வின் இடை யிலேயே நிறைய இளைஞர்கள், “நாங்கள் எந்த அமைப்பிலும் கிடையாது. உங்களோடு இணைந்து கொள்ள விரும்புகிறோம்” என்று கூறினர்.

30 இளைஞர்கள் தங்கள் தொடர்பு எண்களைத் தந்து, இயக்கத்தில் ஆர்வத் துடன் இணைந்து செயல்பட முன் வந்தது இக் கூட்டத்துக்கு கிடைத்த வெற்றியாகும்.

கூட்டத்துக்கு திருப்பூர் மாவட்ட தலைவர் சு. துரைசாமி, முகில் இராசு, அகிலன், சண். பாண்டியநாதன், இரா. குமார், பாரதி வாசன், நீதி ராசு, சம்பூகன், மு.மணிகண்டன், பிரசாந்த், தண்டபாணி, பரிமளம், செகதீசன் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# தூக்குத் தண்டனை: சில வரலாற்றுத் தகவல்கள்

## *தமிழச்சி தங்க பாண்டியன்*

***தூக்குத் தண்டனை மனித உரிமைக்கு எதிரானது என்ற அழுத்தமான வாதங்களை முன் வைக்கும் கட்டுரையாளர், உலக வரலாற்றிலிருந்து சம்பவங்களை சுட்டிக் காட்டுகிறார்.***

ஒவ்வொரு புனிதருக்கும் கடந்த காலம் உண்டு, எதிர்காலம் உண்டு என்று சொல்லுவார்கள். இதில் யார் பாவி, யார் புனிதர் என்பதை எது தீர்மானிக்கின்றது, அவற்றின் அளவுகோல்கள் என்ன அந்த தரக் கட்டுப்பாடுகளை நிர்ணயிக்கின்ற அதிகார மய்யம் எது ? அந்தப் புள்ளியிலிருந்து துவங்கினால்....

ஒரு காலத்தில் கொள்ளைக்காரனாக இருந்த வால்மீகி, இன்னொரு காலத்திலே மாபெரும் இதிகாச புலவராக இராமாயணம் எழுதுபவராக மாற முடியும் என்றால், எந்த குற்றத்திற்காகவும், எதற்காக ஒரு மனிதனின் உயிரைப் பறிக்க வேண்டும் ? என்ற கேள்வி எழுகிறது. எப்பொழுதுமே நிகழ்ந்து கொண்டிருப்பது என்னவென்றால் ஒரு ஏழையோ, ஏமாளியோ, கறுப்பரோ, நீக்ரோவோ இவர்கள்தான் தூக்கிலிடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பணம் படைத்தவர்கள், வெள்ளைக்காரர்கள் தண்டனையிலிருந்து தப்பித்து விடுகிறார்கள் என்று அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் நீதிபதி மார்ஷல் கூறினார்.

சீனபேமாட் என்ற ஈரானிய இளைஞன், தனது 18 ஆவது பிறந்த நாளை கொண்டாடிய பின்பு, இரண்டு வாரங்கள் கழிந்த ஒரு நாளில் அவனுக்கு மரண தண்டனை நிறைவேற்ற நாள் குறிக்கப்பட்டது. அவனது முகம் கறுப்பு அங்கியால் மூடப்பட்டு இருக்கின்றது. அந்தக் கயிற்றை அவன் முத்தமிடுவதற்கு முன்பாக அந்த மேடையிலே அவனுடைய கடைசி ஆசை என்னவென்று கேட்கப்படுகின்றது. சீனா சொல்லுகின்றான், மே என்று சொல்லப்படுகின்ற மத்திய கிழக்கு மத்தியப் பகுதிச் சார்ந்த அந்த புல்லாங்குழல் இசைக் கருவியை இசைக்க விரும்புகிறேன் என்று சொல்லுகின்றான். அனுமதி அளிக்கப்படுகின்றது. உள்ளத்தை உருகச் செய்கின்ற அந்த இசையிலே மயங்கினார்கள், அவனால் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள், அவனுடைய தண்டனையைப் பார்த்து அங்கே மன ஆறுதல் பெற வேண்டும் என்ற ஆசையோடு வந்திருந்த அந்த உறவினர்கள் மனம் மாறுகின்றனர். ஈரானிய நாட்டுச் சட்டப்படி அந்த தண்டனை ரத்தாகிறது. அதற்கு நிகராக 'தியா' என்று சொல்லப்படுகின்ற பரிகாரத் தொகையைப் பெற்றுக் கொண்டு அவனுக்கு அந்த மரணதண்டனை ரத்து செய்யப்படுகின்றது. இன்றைக்கும் கராத் என்ற நகரிலே அவன் சிறையிலே இருக்கின்றான்.

ஒரு பத்து வயது அமெரிக்கச் சிறுமி, டெக்சாஸ் நகரத்திலே அவள் தந்தை தூக்கிலிடப்பட்டபோது, உலக மக்களைப் பார்த்து இந்தக் கேள்வியைக் கேட்டாள். "இன்றைக்கு இன்னொரு வரை கொன்றதற்காக என் தந்தையை இவர்கள் கொல்கிறார்கள் என்றால் இவரைக் கொல்வதற்காக நாங்கள் யாரைச் சென்று கொல்வது" என்று ! இப்படி முடிவற்ற தொடர் சங்கிலியாக சென்றுக் கொண்டிருக்கின்ற இந்த எதிர்வினைகளை முற்று முழுதாக ஒழிக்க வேண்டும். அது முடியுமா ? முடியும். மரண தண்டனை முற்றாக ஒழிக்கப்படுகின்ற அந்தக் கணத்திலே தான் அது சாத்தியம்.

மரணதண்டனைக்கான தொடக்ககால வரலாறுகள் ரத்தக்கறை படிந்ததாகவே இருக்கின்றது. 18 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலே பிளடிக்கோடு என்ற சட்டத்தினால் ஏழே வயதான எமான் என்ற சிறுவனும் 11 வயதான யேன் என்கின்ற அவனது சகோதரியும் வெறும் சாதாரண திருட்டுக் குற்றத்திற்காக தூக்கிலிடப்படுகின்றார்கள். அன்றையக் காலகட்டத்திலே அது பற்றிய சிறு செய்திக்கூட இங்கிலாந்து பத்திரிகைகள் வெளியிடவில்லை.

நவீன காலத்துச் சீனாவிலே மரண தண்டனைகள் பல நிறைவேற்றப்பட்டுள்ளன. இன்றைக்கும் சீனா தூக்குத் தண்டனையை அமுல்படுத்துகிறது. ஆதி காலத்திலே கேன் டைனாஸ்டி என்கின்ற சீன மன்னர் பரம்பரையிலே டெய்ல்சான் என்கின்ற அரசர் கி.பி. 747 லிருந்து 759 வரையிலே மரணதண்டனையை முற்றிலுமாக ஒழித்திருந்தார் என்பதை வரலாற்றில் படிக்கிறோம்.

அமெரிக்காவிலே மிக்சிகன் மாகாணம் தான் முதன்முதலில் மரணதண்டனை தடைச் சட்டத்தை அமுலாக்கியது, 1847 இல் ! தற்போது அமெரிக்காவிலே 12 மாகாணங்களும், கொலம்பியாவும் மரண தண்டனை முற்றிலுமாக ஒழித்திருக்கின்றன. நாம் இன்றைக்கும் கல்வியிலும் வாழ்க்கை முறையிலும் முன்னோடியாக ஏற்றுக் கொண்டுள்ள பிரிட்டானிய அரசிலே இன்றைக்கு மரணதண்டனை என்பது கிடையாது. பிரான்சும் மரண தண்டனையை ஒழித்து விட்டது.

மிகக் குறிப்பான செய்தி ஒன்றை நான் சொல்ல வேண்டும் என்றால், ஒமன் நகரத்திலே இருக்கின்ற குலாசியம் என்கின்ற மிகப் பெரிய அரங்கிலே இன்றைக்கும் உலகில் எங்காவது ஒரு மரண தண்டனை ரத்துச் செய்யப்படுமானால் அன்றைய தினம் குலாசியம் முழுவதும் தீபங்களால் அலங்கரிக்கப்படுகின்றது. மரண தண்டனை ஒத்தி வைக்கப்பட்டாலே அன்றைய தினம் குலாசியம் முழுவதுமே தீபங்களால் அலங்கரிக்கப்படுகிறது. உலக அரங்கிலே அய்ரோப்பாவின் பல தேசங்கள் பசிபிக் பகுதி நாடுகள் மிகக் குறிப்பாக ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா ஆகிய அனைத்து நாடுகளும் மரண தண்டனையை ஒழித்துவிட்டன. இலத்தின், அமெரிக்காவிலே (தென் அமெரிக்க நாடுகள்) பிரேசிலை தவிர வேறெங்கும் மரண தண்டனை கிடையாது. உலக புள்ளி விவர கணக்குப்படி குற்றங்களின் சதவீதம் அதிகமாக பதியப்பட்டிருக்கின்ற தென் ஆப்பிரிக்காவிலே மரண தண்டனை கிடையாது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மரண தண்டனைக்கு ஆதரவாக முன் வைக்கிற ஒரு கருத்து மரண தண்டனை குற்றங்களை குறைக்கின்றது என்பதாகும். தொடர் குற்றங்களைத் தடுக்கின்றது, ஆயுள் தண்டனையைக் காட்டிலும் அதிக செலவில்லாதது, சில குறிப்பிட்ட குற்றங்களைச் செய்யாமல் அச்சுறுத்த அதுவே சரியான தீர்வு என்று சொல்லுகிறார்கள். ஆனால், இந்தத் தண்டனை தவறாக குற்றம் சாட்டப்பட்டவர்களையும் பழி வாங்கி இருக்கின்றது. சிறுபான்மை ஏழை மக்களுக்கு பெரும் தீங்கை இழைப்பதாக இருக்கின்றது-

---

**நியாயங்களை தீர்மானிப்பவை அதிகார மய்யங்களே!**

---

நீதியரசர் கிருஷ்ணய்யர் எடுத்துச் சொன்ன இரண்டு வழக்குகளை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன். ஒன்று மிகப் பிரசித்திப் பெற்ற பயோலி வழக்கு. பயோலி வழக்கு என்பது பயோலியிலே இரண்டு வகுப்பினரிடையே பதற்றம் உருவாகிய காலத்திலே நடைபெற்ற வழக்கு. இந்து மதவெறியர் என கருதப்பட்ட ஒருவரை சில இஸ்லாமியர்கள் துரத்திச் செல்கிறார்கள். இந்த இந்து அங்கிருந்த வழக்கறிஞர் வீட்டிற்குள் நுழைந்து விட்டான். விரட்டி வந்த அய்வரில் 3 பேர் வெளியே நின்று விட்டனர். இருவர் உள்ளே சென்று, அந்த இந்துவை கொன்றுப் போட்டனர். ஆனால் முதல் தகவல் அறிக்கையில் அய்வர் பெயரும் இடம் பெற்றது. இந்த அய்ந்து பேரும் துரத்திச் சென்று வீட்டிற்குள் கொலை செய்தனர் என்றிருந்தது. முதல் தகவல் அறிக்கை என்பது காவல் துறையின் புனித நூல் அதை மாற்ற முடியாது. ஆகவே மூவர் நிரபராதிகள் என்று தெரிந்தும் அய்வருக்கும் எதிராக வழக்குப் புனைந்து சாட்சியையும் இட்டுக் கட்டியது காவல்துறை. பின்னர் கிருஷ்ணய்யருக்கு தெரிந்த ஒரு ஆய்வாளர் மூலம் உண்மை அவருக்கு தெரிய வருகின்றது. அந்த காவல்துறை ஆய்வாளர் வாக்கு மூலத்திலே இப்படி சொன்னதாக கிருஷ்ணய்யர் பதிவு செய்கின்றார்.

அந்த ஆய்வாளர் சொல்லுகின்றார், அய்யா அய்ந்து பேர் இருந்தனர். சம்பந்தப்படாத மூவரை வழக்கில் சேர்க்காமல் விட்டிருந்தால் நீதிமன்றம் என்ன சொல்லியிருக்கும் ? நிரபராதிகளான மூவர் பெயர் முதல் தகவல் அறிக்கையில் பொய்யாக சேர்க்கப்பட முடியும் என்றால், ஏன் மற்ற இருவர் பெயரும் பொய்யாக சேர்க்கப்பட்டிருக்க முடியாது என்று கேட்டு அனைவரையும் விடுவித்திருக்க வேண்டும். அப்போது என் வேலை போயிருக்கும். ஆகவே என் வேலையை காப்பாற்றிக் கொள்வதற்காக அய்வருக்கு எதிராகவும் சாட்சியம் உண்டுப் பண்ணி விட்டோம். அந்த அய்வருமே தூக்கிலிடப்பட்டு விட்டனர். குற்றவியலின் கொடுமையும், நீதிபதிகளின் மனம் போகிற போக்கையும் நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கிருஷ்ணய்யர் இதைப் பதிவு செய்கின்றார்.

இரண்டாவது "ஒரு அரசு அதிகாரியின் 25 ஆண்டுகள்" என்ற புத்தகத்தை நீதிபதி ஏ.எஸ்.வி. அய்யர் எழுதியிருக்கின்றார். அந்தப் புத்தகத்திலே வருகின்ற ஒரு சம்பவத்தை கிருஷ்ணய்யர் சொல்லுகின்றார், ஒரு ஆங்கிலேயே நீதிபதி குற்றம்சாட்டப்பட்ட ஒருவருக்கு மரண தண்டனை விதித்து விடுகின்றாராம். அன்றைய தினம் இரவிலே அவருடைய கனவிலேகுற்றம்சாட்டப்பட்டு இறந்தவன் வருகின்றான். (கனவுகளிலே நமக்கு நம்பிக்கை இல்லை. கனவு சொல்கிறபடி நடப்பதில்லை என பகுத்தறிவாளர்களாகிய நாம் நன்றாக அறிவோம்) "நீங்கள் குறிப்பிட்ட அந்த ஆவணத்தைப் படித்திருந்தால் என் உயிரை இப்படி முடித்திருக்க மாட்டீர்கள். ஆனால் நீங்கள் அதைப் படிக்காமல் விட்டு விட்டீர்கள்" என்றானாம். மறுநாள் அந்த நீதிபதி கோப்புகளை ஆராய்ந்து அந்தக் குறிப்பிட்ட ஆவணத்தை கண்டுபிடித்து விட்டார். அதனை முன்பே படிக்காமல் விட்டுவிட்டதையும், முன்பே படித் திருந்தால் தீர்ப்பு நேர்மாறாய் இருந்திருக்கும் என்பதையும் உணர்ந்தார். அவர் பிறகு தன்னைத் தானே சுட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சிகளை வைத்துப் பார்க்கும்போது நாம் உணர வேண்டியது, அறிய வேண்டியது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். "எந்தக் காலக்கட்டத்திலும் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு அவர்களுடைய அந்த செயலுக்கான நியாயத்தை எடுத்துச் சொல்லுகின்ற நியாயத்தை வழங்குகின்ற தராசினுடைய முனைகளை தீர்மானிப்பவை அதிகாரத்தின் மய்யங்களாகவே இருந்திருக்கின்றன. ஆகையால் அவை பணம் படைத்தவர்களுக்கும், சாட்சியங்களை நன்றாக திரிபு செய்பவர்களுக்கும், மிகக் குறிப்பாக போராளிகளுக்கும் எதிரானதாகவே இருந்திருக்கின்றது. இது பற்றி நாம் கவனத்தில் கொண்டு இந்தியாவில் மட்டுமல்ல உலகெங்கிலும் மரணதண்டனை ரத்துச் செய்யப்படுவதற்கு நம்முடைய குரலை ஓங்கி பதிய வைக்க வேண்டும்.

மிகச் சமீபத்திலே மரண தண்டனை ரத்துச் செய்துள்ள நாடுகளை பார்ப்போம். 2007 செப்டம்பரில் கோபனும், டிசம்பரில் தென் கொரியாவும், 2008 சனவரியில் உஸ்பெகிஸ்தானும் முற்றாக மரண தண்டனையை ஒழித்திருக்கின்றன. இவைகளிலிருந்து இந்தியாவும் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என நினைக்கின்றோம். கிட்டதட்ட ஜூன் 1, 2008-லிருந்து 92நாடுகளில் மரண தண்டனை முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டன. 11 நாடுகளில் சில வகையான குற்றங்களுக்கு மட்டுமே மரண தண்டனை உள்ளது. 34 நாடுகள் 10 வருடங்களாக மரண தண்டனையை நிறுத்தி வைத்திருக்கின்றன.

முன்னேறிய நாடுகளாக நாம் சொல்லுகின்ற சிங்கப்பூர், ஜப்பான், அமெரிக்கா ஆகியவை இன்றைக்கும் மரண தண்டனையை ரத்துச் செய்யாமல் இருக்கின்றன. ஆனால், நம்பிக்கைக்குரிய விசயமாக ஒன்றை பார்க்கலாம். அய்ரோப்பிய ஒன்றியம் என்று சொல்லுகின்ற அந்த கூட்டமைப்பும், அதற்கான 'கவுன்சிலும்' தங்களுடைய அமைப்பிலே உறுப்பினராக சேர வேண்டும் என்றால், அந்த நாடுகள் மிகக் கண்டிப்பாக மரண தண்டனையை ஒழித்திருக்க வேண்டும் என்பதை ஒரு நிபந்தனையாக வைத்துக் கொண்டிருக்கின்றன. மிக சமீபத்தில் துருக்கிக் கூட தனது சட்டத்தை திருத்திக் கொண்டு அதிலே உறுப்பினராக சேர்ந்துள்ளது.

1973-லிருந்து அமெரிக்காவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மரண தண்டனை 1977 இல் இருந்து அமுலுக்கு வந்திப்பது வருத்தத்திற்குரியதுதான்.

குறிப்பாக நாம் மரண தண்டனை பிரச்னையில் கவனத்தில் கொள்ள வேண்டியது, இளவயது குற்றவாளிகளுக்கான தண்டனை, சிவில், கிரிமினல் என்று முத்திரைக் குத்தப்படுகிற இளவயது குற்றவாளிகளுக்கான மரண தண்டனை குறித்து மனித உரிமை ஆர்வலர்கள் அனைவருமே அதீதமான போர்க்குரலோடு அதை எதிர்க்க வேண்டும்.

**(தொடரும்)**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 11.11.2010**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# சாதி மாநாடுகள் - அன்றும், இன்றும்!

## ‘ரிவோல்ட்’ பக்கங்களிலிருந்து....(6)

*(1928 ஆம் ஆண்டிலிருந்து 1930 ஆம் ஆண்டு வரை பெரியார் நடத்திய ‘ரிவோல்ட்’ ஆங்கில வார ஏட்டிலிருந்து சில வரலாற்றுத் தகவல்கள்)*

1929 ஆம் ஆண்டில் நடந்த சாதி, வகுப்பு மாநாடுகளை ‘ரிவோல்ட்’ பதிவு செய்துள்ளது. இப்போது நடைபெறும் சாதி மாநாடுகளுக்கும், சுயமரியாதை இயக்க ஆதரவோடு நடந்த சாதி மாநாடுகளுக்கும் உள்ள பண்பு ரீதியான வேறுபாடுகளை இந்த செய்திகள் உணர்த்துகின்றன.

இந்த சாதி மாநாடுகளை காங்கிரசார், தேச விரோதிகளின் மாநாடு என்று கூறி எதிர்த்தனர். ‘ரிவோல்ட்’ அதற்கு பதில் கூறியது. இந்த சாதி மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும், மாநாட்டின் நடவடிக்கைகளையும் பரிசீலிக்க வேண்டும் என்பதே ‘ரிவோல்ட்’ தந்த பதில்.

1929 ஏப்.30 அன்று தஞ்சை மாவட்டம் பொறையாரில் (இப்போது நாகை மாவட்டம்) நாடார் சமூக மாநாடு நடந்தது. பூணூல் போடுவதை தங்கள் பெருமையாகக் கருதி வந்த நாடார் சமூகத்திடம் பூணூல் அணிவதைத் தவிர்க்குமாறும், சாதி அடையாளங்களைக் கைவிடுமாறும், சீர்திருத்த திருமணங்களை நடத்துமாறும் அம்மாநாடு வலியுறுத்தி தீர்மானங்களை நிறைவேற்றியது. மாநாட்டில் நாடார் மகா ஜனசங்கக் கொடியை ஏற்றி வைத்து, பெரியார் சிறப்புரை ஆற்றினார். “இது ஏதோ சாதி சுயநலனுக்காக கூட்டப்பட்ட மாநாடு அல்ல; நாடார் சமூகத்தை ஒன்று திரட்டி, அவர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டி, ஒட்டு மொத்த நாட்டின் வளர்ச்சிக்கு அழைத்துச் செல்லும் மாநாடு” என்று பெரியார் பேசினார். கவர்னரின் நிர்வாகக் குழுவில் சட்டத் துறை ஆலோசகராக இருந்த எம். கிருஷ்ணன் நாயர் மாநாட்டில் பேசுகையில்:

“உடலில் பல உறுப்புகள் இருக்கின்றன. அதேபோல பல சமூகங்கள் சேர்ந்தது தான் ஒரு சமுதாயம். உடலில் எந்த ஒரு உறுப்பு பாதிக்கப்பட்டாலும், உடல் முழுதுமே பாதிப்பதுபோல், சமுதாயத்தில் எந்த ஒரு சமூகம் பின் தங்கி நின்றாலும் சமுதாயமே பாதிக்கும். எனவே எல்லா சமூகமும் வளம் பெற இத்தகைய மாநாடுகள் அவசியம். அப்போதுதான் சமுதாயம் முன்னேற முடியும் என்ற கருத்தை முன் வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தின் முதல் ஆதி திராவிடர் மாநாடு காரைக்குடிக்கு அருகே உள்ள கழனிவாசல் எனும் ஊரில் அதே ஆண்டில் நடந்துள்ளது. மாநாட்டுத் தலைவர் நீதிக்கட்சி நாளேடான ‘திராவிடன்’ ஏட்டின் ஆசிரியராக இருந்த ஜே.எஸ்.கண்ணப்பர். இவர் ஆதி திராவிட சமூகத்தைச் சார்ந்தவர் அல்ல; சைவப் பிரிவைச் சார்ந்தவர். மாநாடு தொடங்குவதற்கு முன், சுயமரியாதை, பகுத்தறிவுப் பாடல்களை பாடிக் கொண்டு ஊர்வலமாகச் சென்றுள்ளனர். மாநாட்டுக் கொடியை ஏற்றி வைத்தவர் பொன்னுசாமி பிள்ளை. மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசியவர் வழக்கறிஞர் இராமச்சந்திரன்! (இவர் முக்குலத்தோர் சமூகமான சேர்வை சமூகத்தைச் சேர்ந்தவர்)

ராவ் பகதூர் எம்.ஆர். சுப்பையா செட்டியார், மாநாட்டுக்கு ரூ.10,000 நன்கொடை வழங்கினார். சிவகங்கை அரசர், ‘ஆதி திராவிடர் விடுதி’ கட்டுவதற்கு 15 ஏக்கர் நிலத்தை அன்பளிப்பாக வழங்கினார். ஆதி திராவிடர்கள் மீது தீண்டாமையைத் திணிப்பதற்கு எதிராகவும், சாதி அமைப்புக்கு எதிராகவும் மாநாட்டில் ஒருமித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஜெ.எஸ். கண்ணப்பர் தனது உரையில்,

“ஆதி திராவிடர்கள், எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருப்பதாலும், சுத்தமாக இல்லாததாலும், தீண்டப்படாதவர்களாக நடத்தப்படுகிறார்கள் என்று வாதிடுவது - சுத்த முட்டாள்தனம்; சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக உள்ள கிருஷ்ணன் (கேரளத்தில் ‘தீயா’ என்ற ‘தீண்டப்படாத’ சமூகத்தைச் சார்ந்தவர்) படித்தவர்தான்; சுத்தமாக இருப்பவர்தான். அவர் அக்கிரகாரத்தில் நடந்து செல்ல பார்ப்பனர்கள் அனுமதிப்பதில்லையே - ஏன் ?” என்று கேட்டார்.

உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஒருவருக்கே அக்கிரகாரத்தில் நடக்கும் உரிமை பறிக்கப்பட்டிருந்தது என்பதை, இதிலிருந்து அறிய முடிகிறது.

ஆதி திராவிடர்களில் ஒரு பிரிவினரான ‘தேவேந்திரகுல வேளாளர்கள்’ மாநாடு, திருச்சிராப்பள்ளியில் 1929 செப்டம்பர் 29 இல் நடந்தது. மாநாட்டில் சங்கத்தின் கொடியை ஏற்றி வைத்தவர் ‘திராவிடன்’ ஆசிரியர் ஜெஎஸ்.கண்ணப்பர். சென்னை மாகாண முதலமைச்சர் டாக்டர் சுப்பராயன் மாநாட்டுத் திறப்பாளர். தேவேந்திர குல வேளாளர்கள், தங்களை வெள்ளாளர்கள் என்றும், தீண்டப்படாதவர்கள் அல்ல என்றும் கூறி வந்த காலம் அது!

“பெயரில் பெருமை தேடுவதற்கு சண்டை போடாதீர்கள்; குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதில் கவனம் செலுத்துங்கள்; குழந்தைப் பருவத்தில், இளம் வயதில் திருமணம் செய்யாதீர்கள்; சாதி ஒழிந்து எல்லோரும் சமமாக வேண்டும் என்பதே முக்கியம். அந்த நிலை வந்துவிட்டால், சுயராஜ்யம் வந்து சேர்ந்து விடும்” என்று முதலமைச்சர் சுப்பராயன் பேசினார்.

மாநாட்டின் தலைவர் பெரியார். அவரும் வெள்ளாளர் என்று பட்டம் சூட்டிக் கொள்வதால், தீண்டாமை ஒழிந்து விடாது என்ற கருத்தையே வலியுறுத்தினார். இப்படித்தான் தங்களையும் பார்ப்பனர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்ள சவுராஷ்டிரப் பிராமணர்கள்; விசுவ பிராமணர்கள், தேவாங்க பிராமணர்கள், சாலிய பிராமணர்கள் என்று பார்ப்பனரல்லாத சாதிப் பிரிவினர் தங்களை அழைத்துக் கொண்டனர். அதனால் பார்ப்பனர்கள் அவர்களை தங்களுக்கு சமமாக ஏற்றுக் கொண்டு விட்டார்களா ? - என்று பெரியார் கேட்டார்.

“நாங்கள் தான் நந்தனையும், பாணனையும் ஆழ்வார்களாக்கியுள்ளோம். அவர்களை கோயிலுக்குள் அனுமதித்தோம் என்று பார்ப்பனர்களும், சைவர்களும் கூறுவது நம்மை ஏமாற்றுவதற்குத் தான் - சரி; அப்படியானால், இப்போது ஆதி திராவிட மக்களை கோயிலுக்குள் அனுமதிக்காதது ஏன் ?” - என்று பெரியார் கேட்டார்.

ஆதி திராவிட மாநாட்டில் மாநாட்டில் தீண்டப்படாத சமூகத்தைச் சாராத சாதி ஒழிப்பிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலையிலும் உண்மையான ஈடுபாடு கொண்ட தலைவர்கள் பங்கேற்றது குறிப்பிடத்தக்கதாகும். பெரியாரின் சுயமரியாதை இயக்கம் - அத்தகைய மாநாடுகளை முன்னின்று நடத்தியது.

– ‘இரா’

(தொடரும்)

# ஆனைமலை பகுதியில் கல் உடைக்கும் தொழிலை பாதுகாக்க நடவடிக்கை

*ஆனைமலை நகர ஒன்றிய பொறுப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் 31.10.20010 ஞாயிறு மதியம் 12 மணிக்கு ஆனைமலை நகர செயலாளர் வே. அரிதாசு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:*

ஆனைமலை - ஒடையகுளம் பகுதிகளில் நீண்டகாலமாக கல் உடைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கோவை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நடைபெறுகிற கட்டுமான பணிகள், சாலைப் பணிகள் ஆகியவற்றிற்கான ஜல்லிக் கற்கள், சைஸ் கற்கள் போன்ற பலவகை கற்கள் இந்தப் பகுதியில் இருந்தே அனுப்பப்பட்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக “ஒடையகுளம் சைஸ்” என்கிற கல் புகழ் பெற்றது ஆகும். 50 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகிற இந்தக் கல் உடைக்கும் பணிகளில் சுமார் 2000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். கல் உடைத்தல், லாரித் தொழில், லோடிங் போன்ற பல வடிவங்களில் 100-க்கணக்கான குடும்பங்கள் இந்த கல் குவாரி தொழிலை நம்பி ஆனைமலை - ஒடையகுளம் பகுதிகளில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிறார்கள்.

இந்நிலையில் ஆனைமலைக்கு அருகிலுள்ள “பெருமாள் சாமி கரடு” பகுதியை கடவுள், மதம், ஆன்மீகம் என்கிற பெயரால் ஒரு சிலர் தனிப்பட்ட முறையில் பொருளீட்டுவதற்கும், லாபம் அடைவதற்கும் வசதியாக பயன்படுத்த முயற்சிக்கின்றனர். சமீபகாலமாக ‘பெருமாள் சாமி கரடு’ குறித்து பல்வேறு தவறான தகவல்களை மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக கல் உடைக்கும் தொழிலாளர்களின் வாழ்வுக்கு எதிராக சுற்றுச் சூழல் எனும் பெயரால் இதே கும்பல் பெருமாள் சாமி கரடு பகுதியில் கல் உடைக்கும் தொழில் நடத்துவதற்கு எதிர்ப்பு காட்டி வருகின்றனர். ‘சேனைக்கல் ராயன் மலை பாதுகாப்புக் குழு’ எனும் பெயரில் அரசை மிரட்டுவதற்கும் முயற்சிக்கிறார்கள். மேலும் கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும் தனி நபர்களின் லாப நோக்கங்களுக்காக 2000 தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை பலியிடுவதற்கும் இந்த கும்பல் துணிந்துள்ளது. இதுபோன்ற சமூக விரோத - மக்கள் விரோத மதவாத செயல்களை கழகம் ஒரு போதும் அனுமதிக்காது. எனவே பாதிக்கப்படவுள்ள தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு:

- கல் உடைக்கும் தொழிலை பாதுகாக்க வலியுறுத்தியும்.
- தொழிலாளர்களுக்கு எதிரான மதவாத போக்கை தடுத்து நிறுத்தவும்,
- மக்களிடம் விசமப் பிரச்சாரம் செய்து சமூகத்தின் பொது ஒழுங்கையும், சட்ட ஒழுங்கையும் சீர்குலைக்க முயற்சிப்பவர்கள் மீது அரசு கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியும்,
- கழகம் ஆனைமலைப் பகுதிகளில் தொடர் பிரச்சாரங்களை முன்னெடுப்பது எனவும் தேவைப்பட்டால் இதற்காக தொடர் போராட்டங்களை நடத்துவது எனவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.
- ஒடையகுளம் பஞ்சாயத்துக்கு உட்பட்ட சுள்ளிமேட்டுப் பகுதியில் வசிக்கும் சுமார் 150-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் பயன்படுத்தி வந்த “சுடுகாடு மயானம்” தனியார் ஆக்கிரமிப்பில் உள்ளது. இதனால் இப்குதி மக்கள் மயானம் இன்றி சிரமப்படுகின்றனர். இப்பகுதி மக்களின் தேவை கருதி தனியார் ஆக்கிரமிப்பில் உள்ள சுடுகாடு மயானத்தை மீட்டு அரசின் செலவில் மயானக் கூறை மற்றும் பாதை அமைத்துத் தர வேண்டும் என்றும், ஆனைமலை நகரில் இருந்து சுள்ளிமேட்டுப் பகுதிக்கு தார் சாலை அமைத்து பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட நிர்வாகங்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.
- ஆனைமலை நகரில் செயல்படாமல் கிடக்கும் மத்திய பேருந்து நிலைய வளாகத்தை முறையாக செயல்பாட்டுக்கு கொண்டு வந்து அனைத்துப் பேருந்துகளும் மத்திய பேருந்து நிலையத்திற்குள் இருந்து இயங்கும்படி செய்ய வேண்டும் என்றும், அதற்காக பேரூராட்சி நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது. மேலும் ஆனைமலை நகரை மையமாகக் கொண்ட சுற்று வட்டார கிராமப் பகுதிகளுக்கு பேருந்துகளையும், மினி பஸ்களையும் ஆனைமலையிலிருந்து இயக்க போக்குவரத்து துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தி கழகம் சார்பில் உரிய முயற்சிகள் மேற்கொள்வது எனவும் இக்கூட்டம் முடிவு செய்கிறது.
- நவம்பர் இறுதிக்குள் ஆனைமலை நகர ஒன்றிய பகுதிகளில் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வார ஏட்டிற்கான சந்தாக்களை திரட்டி முடிப்பது என்றும் குறைந்தபட்சம் 500 சந்தாக்களை திரட்டுவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.
- ஆனைமலை நகர ஒன்றிய பகுதிகளில் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நகர ஒன்றிய பொருளாளர் இரா. ஆனந்த்; இந்திரா நகர் கிளைத் தலைவர் மு. மகாலிங்கம், செயலாளர் மு. மோகன்; சுள்ளி மேட்டுப் பகுதி கிளைத் தலைவர் சு. மணி, செயலாளர் ச. கார்த்திக்; டி.எஸ்.ஏ. நகர் அமைப்பாளர் கு. கருப்பசாமி, சின்னப்பம்பாளையம் அமைப்பாளர் க. மகேந்திரன், வேட்டைக்காரன்புதூர் அமைப்பாளர் சுரேசு, ஒடையகுளம் அமைப்பாளர் க. கணேசன், சேத்துமடை அமைப்பாளர் உ. த்திராசு - ஆகியோர்.


இக்கூட்டத்தில் மாவட்ட மாணவர் கழக அமைப்பாளர் ஆ. ரமேசுக்குமார், மாவட்ட கழக செயலாளர் ... ஒன்றிய கழக செயலாளர் ... சம்பத், ஒன்றிய தலைவர் சோ. மணிமொழி மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at Patrika Channel, Egmore RMS under WPP Posted on 11th November 2010

**செய்தி: நல்லதம்பி**

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | நவம்பர் 18, 2010 | புரட்சி 9 | முழக்கம் 45 | விலை: ரூ.2.50


# 8 நாட்கள் நடந்த கழகப் பயிற்சி முகாம்



*பெரியார் திராவிடர் கழகம் நடத்திய சாதி, தீண்டாமை ஒழிப்புப் பரப்புரை பயணங்களில் முழுமையாகப் பங்கேற்று, கழகப் பணிகளில் முழுநேரமும் தாங்களாகவே ஒப்படைத்துக் கொண்டு செயல்பட்டுவரும் தோழர்களுக்கு பயிற்சி முகாம், கழக சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. திண்டுக்கல் அருகே உள்ள நொச்சி ஓடைப்பட்டி எனும் இயற்கை எழில் சூழ்ந்த கிராமப் பகுதியில் உள்ள 'லைஃப்' எனும் பயிற்சி மய்யத்தில் நவம்பர் 6 ஆம் தேதி தொடங்கி 13 ஆம் தேதி வரை 8 நாட்கள் இந்த பயிற்சி முகாம் நடந்தது.*

*பயிற்சி முகாமில் பேசப்பட்ட தலைப்புகள் மற்றும் பயிற்சியாளர்களின் விவரம்:*

*6.11.10* - காலை - குடிஅரசு 1925-1932 - கொளத்தூர் மணி; பிற்பகல் - அம்பேத்கர் பார்வையில் இந்துமதம் - மருத்துவர் ஜெயராமன்.

*7.11.10* - காலை - மனித உரிமை மீறல்கள் - வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் - எவிடன்ஸ் கதிர்; பிற்பகல் - சாதி ஒழிப்புக் களப்போராளிகள் சந்திக்கும் சவால்கள் - வழக்கறிஞர் இரத்தினம்.

*8.11.10* - காலை - சாதி ஒழிப்பு (சாதியின் தோற்றம், தீண்டாமை, சாதியை ஒழிக்கும் வழி) - பேராசிரியர் சரசுவதி; பிற்பகல் - பெரியாரின் போராட்டங்கள் - இலால்குடி முத்து செழியன்.

*9.11.10* - காலை - பார்ப்பன - இந்திய தேசிய - பன்னாட்டுக்கூட்டுக் கொள்ளை - வழக்கறிஞர் பிரிட்டோ; பிற்பகல்-குடிஅரசு 1933-1938 - விடுதலை இராசேந்திரன்.

*10.11.10* - காலை - மார்க்சிய பார்வையில் குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் - மார்க்சிய அடிப்படை - எழுத்தாளர் இரா. ஜவகர்; பிற்பகல் - சுற்றுச் சூழல் கேடுகள் - சிவ. சாந்தகுமார்.

*11.11.10* - காலை - பெண்ணியம் - தத்துவம் - வகைகள் - வேறுபாடுகள் - பெண் விடுதலை இயக்கங்கள் - பாலின சமத்துவத்துக்கான வழி - தமிழ்நாடு முற்போக்கு கலை மற்றும் எழுத்தாளர் சங்க பொதுச் செயலாளர் ச. தமிழ்ச் செல்வன்.

*12.11.10* - காலை - இந்தியாவில் தேசிய இன, உரிமைப் போராட்டங்கள் - க. முகிலன்; மாலை - பெரியார் காலத்தில் கழகம் - மூத்த கழகப் போராளி ஆசிட் தியாகராசன்.

*13.11.10* - காலை - இயக்கம் - கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன்.

வகுப்புகள் திட்டமிட்டபடி நேர விரயமின்றி நடந்தன. இறுதி நாளில் - இயக்கம் - பரப்புரை தொடர்பாக பல் வேறு கருத்துகளை தோழர்கள் தனித் தனிக் குழுக் களாக விவாதித்து, அறிக்கைகளாக முன் வைத்தனர். இந்த யோசனைகள் அனைத்தும் கழக மாநில செயற் குழுவில் முன் வைத்து விவாதித்து, இறுதி முடிவு எடுக்கப்படும் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்தார்.

80 வயது நிறைந்த மூத்த பெரியார் தொண்டர்

*(4 ஆம் பக்கம்)*

# சாதி – அநீதிக்கு எதிராக 'போர்ப்பறை' தூக்கிய மருத்துவர்




பார்ப்பானின் இந்துமத சாதி வன்கொடுமை கிராமங்களிலும், படிப்பறிவு இல்லாதவர்களிடமும் மட்டுமே இருக்கும் என சொல்பவர்கள் உண்டு. ஆனால், சாதிவெறி நகரங்களிலும், உயர் படிப்பு படித்த ஆதிக்கசாதியினரிடமும் உண்டு என நிரூபிக்கும் நிகழ்ச்சி திருப்பூரில் நடந்துள்ளது. திருப்பூர் அரசு தலைமை மருத்துவமனையில் பணிபுரிந்து வருபவர் டாக்டர் ஜெயா, எம்.பி.பி.எஸ்., எம்.எஸ்., டி.சி.எச். நேர்மையான மருத்துவராகவும், சிறப்பான சிகிச்சையிலும், மனித நேயம் கொண்டவராகவும் இருந்ததனால், மக்களின் ஆதரவையும் அன்பையும் பெற்றவர்.

இதனை பொறுக்க முடியாத ஆதிக்க சாதியைச் சார்ந்த மருத்துவமனை உயர் அதிகாரிகள் டாக்டர் நடராஜன் (ஜேடி), டாக்டர் திருமலைச் செல்வன் (ஓய்வு), டாக்டர் தங்கவேல் (ஓய்வு), டாக்டர் மதிவாணன் மற்றும் டாக்டர் பிரியா விசுவாசம் ஆகியோர், டாக்டர் ஜெயா தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர் என்பதால், சாதியை சொல்லி தொடர்ந்து இழிவுபடுத்தியும் பணி செய்ய இடையூறு செய்தும் வந்தனர். பிறகு ஆதிக்கசாதி வெறிக் கொண்டு பொய்யான குற்றச் சாட்டுகளை சொல்லி,தற்காலிக பணி நீக்கமும் செய்து விட்டனர். முறையற்ற வகையில் பணி நீக்கம் செய்யப்பட்டதை ரத்து செய்யக் கோரி கடந்த 20 மாத காலமாக பல்வேறு துறைகளை அணுகி மனுக்களை கொடுத்து சோர்ந்து போய் விட்டார் டாக்டர் ஜெயா. மேலும் அரசிட மிருந்து வரவேண்டிய நிலுவை தொகை மற்றும் ஊதியத்தையும் நிறுத்தி வைத்து விட்டனர். தன் உரிமையை மீட்டெடுக்க கடுமையான போராட்டத்தை நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்.

இந்நிலையில் 11.11.10 அன்று காலை 9 மணிக்கு பறை அடித்துக் கொண்டு, அரசு மருத்துவமனைக்குள் நுழைந்த டாக்டர் ஜெயா, “என்னை மருத்துவராக பணி செய்ய விடுகிறீர்களா ? அல்லது தப்படிக்க போகச் சொல்கிறீர்களா ?'' என உரிமைப் போராட்டம் நடத்தினார்.

இந்தத் தகவலை கேள்விபட்டவுடன் கழகத் தோழர்கள் முகில்ராசு, அகிலன், பரிமளராசன் மற்றும் தோழர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து டாக்டர் ஜெயாவுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் தீவிரமாவதை கவனித்த மாவட்ட நிர்வாகம் உடனே காவல்துறை அதிகாரிகள், தாசில்தார் ஆகியோரை பேச்சு வார்த்தைக்கு அனுப்பியது. பேச்சு வார்த்தையில் கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர். அதில் டாக்டர் ஜெயாவுக்கு மீண்டும் ஒரு வாரத்திற்குள் பணி நியமன ஆணையும், நிலுவை தொகைகளையும் வழங்க அரசு தரப்பில் உறுதி அளிக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவரை நேரில் சந்தித்ததில் மேற்கண்ட வாக்குறுதிகளை நிறைவேற்றி தருவதாக உறுதி அளித்தார். எனவே போராட்டம் தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்பட்டது. கழகத் தோழர்கள் டாக்டர் ஜெயாவுடன் உரிமைப் போராட்டத்திலும், சாதி வன்கொடுமைக்கு எதிரான கலகத்திலும் இறுதி வரை உறுதியுடன் பங்கெடுத்துக் கொண்டனர். இப்போராட்டத்திற்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி, நாம் தமிழர், பா.ம.க., தி.க., ஆதித் தமிழர் பேரவை, ஆதி தமிழர் சனநாயக பேரவை, சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி ஆகிய அமைப்பினரும் ஆதரவு தெரிவித்தனர்.

**– நமது செய்தியாளர்**

தலையங்கம்

## வரவேற்க வேண்டிய சட்டம். ஆனால்....

தமிழ்மொழி வழியாக கல்வியை வழங்கும்போது கிராமப்புற ஒடுக்கப்பட்ட சமூக மாணவர்கள் பாடங்களை எளிதில் புரிந்து கொள்ளும் வாய்ப்புகளைப் பெறுகிறார்கள். ஆங்கில வழிக் கல்வி - இந்த மாணவர்களுக்கு பெரும் சுமையாகவே உள்ளது என்பதில் இரு கருத்துகளுக்கு இடமில்லை. ஆனாலும், தமிழ் வழியில் கல்வி பெறும் மாணவர்களுக்கு எதிர்கால வாழ்க்கைக்கு எந்த உறுதியும் இல்லை. எனவே ஆங்கில வழிக் கல்வியை நோக்கி அவர்கள் விருப்பமின்றி தள்ளப்படுகிறார்கள். இந்த நிலையில் தமிழ் வழிக் கல்வி பயின்ற மாணவர்களுக்கு மருத்துவம், பொறியியல் போன்ற தொழில் பட்டப் படிப்புகளில் தமிழ் வழிக் கல்வியில் தேர்ச்சிப் பெறும் விகிதாச்சாரத்துக்கேற்ப இடங்களை ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகிறோம். இப்போது தமிழக அரசு, தமிழ் வழிக் கல்வியில் பயின்ற மாணவர்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் 20 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவை சட்டசபை கூட்டத் தொடரின் இறுதி நாளில் நிறைவேற்றியுள்ளது. (இதற்கான அவசர சட்டம் ஒன்றும் கடந்த செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டது)

தமிழக அரசின் இந்தச் சட்டத்தை பாராட்டி வரவேற்கிறோம். கிராமப்புற தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இளைஞர்களுக்கு வாழ்வில் ஒளிவீசும் சட்டமாகவே இதை கருதுகிறோம். அதே நேரத்தில், சட்டம் உண்மையாக அமுல்படுத்தப்படும்போதுதான், அதன் நோக்கம் நிறைவேறும்.

அருந்ததியினர் உள் இட ஒதுக்கீடு சட்டம் ஒன்றை தமிழக அரசு கொண்டு வந்தது. அந்தச் சட்டம் ஆசிரியர் நியமனங்களில் அமுல்படுத்தப்படுவதில்லை. பொதுப் போட்டியில் இடம் பெறும் தகுதியுள்ள அருந்ததி மாணவர்கள், உள் ஒதுக்கீடு கோட்டாவின் கீழேயே சேர்க்கப்படுகிறார்கள் என்றெல்லாம் புகார்கள் வருகின்றன.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம், உச்சநீதி மன்றத்தில் முடங்கிப் போன நிலையில், சட்டம் எழுந்து நடமாடுவதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ளவில்லை. சட்டம் நிறைவேற்றியதோடு கடமை முடிந்து விட்டதாகவே கருதுகிறார்கள்.

இதேபோல் சமூக சீர்திருத்தக் குழு என்ற குழுவை சீரிய பெரியாரியல் சிந்தனையாளர் டாக்டர் நன்னன் தலைமையில் தமிழக அரசு அமைத்தது. அந்தக் குழு எந்த வேலையும் செய்துவிடாமல், அரசு எச்சரிக்கையாகக் கண்காணித்துக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது. அதே போன்ற நிலை, இந்த சட்டத்துக்கும் வந்துவிடக் கூடாது என்பதே நமது கவலை.

# “திரு.வி.க.”வை எச்சில் இலை எடுக்கச் சொன்ன பார்ப்பனர்

## ‘ரிவோல்ட்’ பக்கங்களிலிருந்து....(7)

*(1928 ஆம் ஆண்டிலிருந்து 1930 ஆம் ஆண்டு வரை பெரியார் நடத்திய ‘ரிவோல்ட்’ ஆங்கில வார ஏட்டிலிருந்து சில வரலாற்றுத் தகவல்கள்)*

தேசியம் மற்றும் தீவிர சாதி எதிர்ப்பு எனும் தலைப்பில் ‘ரிவோல்ட்’ கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. காங்கிரசின் தேசியம் பார்ப்பனியமாகவும், சாதி வெறியாகவுமே வெளிப்பட்டதை காங்கிரஸ் மாநாடுகளில் நடந்த சம்பவங்களிலிருந்து ‘ரிவோல்ட்’ எடுத்துக்காட்டியது. பிரிட்டிஷ் ஆட்சியை ‘சாத்தான்களின் ஆட்சி’ என்று பேசிய தேசியப் பார்ப்பனர்கள், தங்கள் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் பிரிட்டிஷ் ஆட்சியில் கொழுத்த சம்பளம் பெற்று, பிரிட்டிஷ் விசுவாசிகளாக செயலாற்றியதை ‘ரிவோல்ட்’ பட்டியலிட்டு அம்பலப்படுத்தியது. ‘இது தான் தேசியமா’ என்ற தலைப்பில் ‘ஈ.வி.ஆர்.’ என்ற பெயரில் பெரியார் எழுதிய கட்டுரை, பார்ப்பனர்களின் ‘தேச பக்தியை’ அம்பலப்படுத்தியது. (27 மார்ச் 1929)

காங்கிரஸ் கட்சி செயலாளர் ரெங்கசாமி அய்யங்கார் மேடைகளில், “பிரிட்டிஷ் அரசை செயல்படாது தடுக்க வேண்டும்; சிங்கத்தை அதன் குகையில் சந்திக்க வேண்டும்” என்று முழங்குவார். அவரது சகோதரர் எஸ். சீனிவாச அய்யங்கார், அதே குகைக்குள் சாதுரியமாக நுழைந்து கொண்டு, வழக்கறிஞர் தொழில் நடத்தி, ஒவ்வொரு நாள் காலையிலும் பிரிட்டிஷ் நீதிபதிகளின் காலை நக்கிக் கொண்டிருப்பார். பிரிட்டிஷ் பிரதிநிதிகளை ‘கனவான்களே’ என்று அழைத்துக் கொண்டிருப்பார்.

தேசபக்தியில் ஊறிப் போய் நிற்பதாகக் காட்டிக் கொள்ளும் சீனிவாச சாஸ்திரி, டி.ரெங்காச்சாரி, மணி அய்யர், வி.கிருஷ்ணசாமி அய்யர், சி.பி. இராமசாமி அய்யர், சி. விஜயராகவாச்சாரிகள் எல்லாம் தங்கள் குடும்பத்தினரை எல்லாம் அரசு உயர் பதவிகளுக்கு அனுப்பி - அரசிடமிருந்து கொழுத்த சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்கள். 3 சதவீதமுள்ள பார்ப்பனர்கள் 97 சதவீத பதவிகளைக் கைப்பற்றிக் கொண்டு, பிரிட்டிஷ் ஆட்சியை முடக்குவோம்; விரட்டி அடிப்போம் என்று மேடைகளில் வீரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே புதிய புதிய அரசியல் கட்சிகள், சுதந்திரக் கட்சி, சுயராஜ்யக் கட்சி, ஹோம் ரூல் இயக்கம் என்று முளை விட்டு ஏழைகளுக்கு பாடுபடுவதாகக் கூறிக் கொண்டு, அதற்காக புதிய பதவிகள், புதிய குழுக்கள், வெளிநாட்டுக்குச் செல்லும் பிரதிநிதிகள் என்று புதிய பதவிகளை உருவாக்கிக் கொண்டனர். ‘ஆங்கிலம் அன்னிய மொழி அதைப் படிக்காதீர்கள்’ என்று மேடைகளில் பேசிக் கொண்டு தங்கள் வீட்டுப் பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகளில் சேர்த்தனர். சத்திரச் சோறு சாப்பிட்ட பார்ப்பனர்கள், சத்திரத்தின் உரிமையாளர்களாகவே பதவி வாங்கிக் கொண்டு விட்டனர். தேசியப் பார்ப்பனர்கள் பதவிகளுக்கு வராத காலத்தில் அரசாங்கம் வரி மூலம் வசூலித்த தொகை ரூ.25 கோடியிலிருந்து ரூ.30 கோடி வரை தான்.

40 ஆண்டுகளில் பார்ப்பனர்கள் பதவிகளுக்கு வந்து கொழுத்த சம்பளம் வாங்கியதால் மக்களிடமிருந்து கூடுதல் வரி விதித்து 140 கோடியிலிருந்து 150 கோடி வரை, அரசு வருவாயை அதிகரித்துக் கொண்டது. “சுதந்திர வீரர்களாக” கூறிக் கொண்டு நாட்டின் வருவாயைச் சுரண்டிய பார்ப்பனர்கள், ஒரு காலத்தில் புரோகித பிச்சை எடுத்தவர்கள். ஆனால் பார்ப்பனரல்லாதார் விவசாயிகளாகவும், வணிகர்களாகவும், தொழிலாளர்களாகவும் இருந்தவர்கள். அவர்கள் எல்லாவற்றையும் இழந்து வெளிநாடுகளுக்கு கூலிகளாக வேலை தேடி ஓட வேண்டியிருக்கிறது. இந்த நிலையில், இந்த மண்ணில் தேசபக்தி நாடக வேடம் கட்டிக் கொண்டு காங்கிரஸ் ஆட்டம் போடுகிறது என்று அடுக்கடுக்கான வாதங்களை பெரியார் முன் வைத்தார்.

“அவதூறு பிரச்சாரங்களால் சுயமரியாதை இயக்கத்தை அழித்துவிட முடியாது. சுயமரியாதை இயக்கம் வெற்றி பெற்றே தீரும் என்று துணிவுடன் கூறுவேன்” என்று “ஆர்.எஸ்.” என்ற புனைப் பெயரில் அதற்கு 12 ஆண்டுகளுக்கு முன் காங்கிரசில் இருந்து விலகி சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்த தோழர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். (‘ரிவோல்ட்’ ஏப்.17, 1929)

அதில் காங்கிரஸ் கட்சியில் நடந்த ‘வர்ணாஸ்ரம’ங்களை அம்பலப்படுத்தியுள்ளார். 1910 ஆம் ஆண்டு லக்னோவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் பார்ப்பனர்கள் சாப்பிடுவதற்காக தனி இடம் ஒதுக்கப்பட்டு, அவர்களுக்கு முதலில் உணவு பரிமாறப்பட்டது. அதற்குப் பிறகு எஞ்சிய உணவுதான் பார்ப்பனரல்லாதாருக்கு தனியாக பரிமாறப்பட்டது. இரண்டாவது நாள் இன்னும் மோசம். பார்ப்பனர்கள் சாப்பிட்ட இலைகளை அப்படியே கட்டுரையாளர் உள்பட பார்ப்பனரல்லாத பிரதிநிதிகள் தங்கிய அறையில் கொண்டு வந்து போட்டிருந்தனர். இலையிலிருந்து கழிவுகள் அறை முழுதும் வழிந்தோடி துர்நாற்றம் வீசியது. அந்த சூழ்நிலையில் பார்ப்பனரல்லாதார் உணவருந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

கட்டுரையாளர் உள்ளிட்ட பார்ப்பனரல்லாத பிரதிநிதிகள் எதிர்ப்பு தெரிவித்து வெளியே ஓட்டலுக்கு சாப்பிடச் சென்றனர். இத்தனைக்கும் பார்ப்பனரல்லாதார் பிரதிநிதிகள், உணவுக்கான கட்டணத்தை செலுத்தி மாநாட்டுக்கு வந்தவர்கள். பார்ப்பனரல்லாதவர்களை ‘பார்ப்பன வெறுப்பாளர்கள்’ என்று பட்டியலிட்டு, தனியாக ஒதுக்கி வைத்து அவமதித்தார்கள். சுயமரியாதை இயக்கத்தை கடுமையாக விமர்சித்து எழுதி வந்த பார்ப்பனரல்லாத தலைவரான திரு.வி.க.வும் அவமானத்திலிருந்து தப்பவில்லை. ஒரு முறை ‘படித்த பார்ப்பனர்’ ஒருவர், திரு.வி.க.வை அவரது வீட்டுக்கு சாப்பிட அழைத்திருந்தார்.

பார்ப்பனர் மட்டும் தனது வீட்டின் சமையலறைக்குள் சென்று வயிறு முட்டச் சாப்பிட்டு, திரும்பி வந்து வெற்றிலைப் பாக்கு போட்டுக் கொண்டே, திரு.வி.க.வைப் பார்த்து, வீட்டுக்கு வெளியே சென்று சாப்பிடுமாறு கூறினார். “எச்சில் இலை எடுத்து, சாணம் போட்டு கழுவுவதற்கு சங்கடமிருந்தால், வேலைக்காரி அதைச் செய்வாள். நீங்கள் செய்ய வேண்டாம்” என்று திரு.வி.க.விடம் கூறினார், அந்த ‘படித்த நாகரிகமான பார்ப்பனர்’.

எதற்காக இப்படி, உணவுக்கு அழைத்து அவமானப்படுத்த வேண்டும்? இந்த பார்ப்பனர்கள் தான் சுயமரியாதை இயக்கத்தை நோக்கி குற்றம் சாட்டுகிறார்கள். சுயமரியாதை இயக்கத்தின் வெற்றியை இவர்களால் தடுக்க முடியாது என்று எழுதினார் கட்டுரையாளர் “ஆர்.எஸ்.”.

*(காங்கிரஸ் கட்சியில் இருந்த காலத்தில் பெரியாரும் இப்படி பார்ப்பனர்களால் அவமானப்படுத்தப்பட்ட நிகழ்வுகளை பெரியார் ‘குடிஅரசில்’ பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.)*

**– இரா**

# மாதம்தோறும் பெரியார் சிந்தனை வட்டம் : வடசென்னை கழக முடிவுகள்

31.10.2010 ஞாயிறு காலை 11 மணியளவில் சென்னை பெரம்பூர், பட்டேல் சாலையிலுள்ள ராஜலட்சுமி அரங்கத்தில் வட சென்னை மாவட்ட கழகக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், கழக மூத்த வழக்கறிஞர் செ. துரைசாமி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் கழகத்தின் வளர்ச்சியைப் பற்றியும், தோழர்களின் அணுகுமுறைகள் எப்படி இருக்க வேண்டும், எப்படி செயல்பட வேண்டும், என்றும் விளக்கமாக கருத்துக்களை எடுத்துக் கூறினர்.

வட சென்னை மாவட்ட கழகத் தலைவர் எ. கேசவன் தலைமையேற்க, சொ. அன்பு வரவேற்க கழகத் தோழர்கள் மு.சுதாகர், கே. திலீபன், ச. ஏசுக்குமார், சேத்துப்பட்டு இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றினர். இக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக பெரம்பூர் க. கந்தன், இராஜலட்சுமி அரங்கத்தின் உரிமையாளர் ஆர். ஜனார்த்தனன் ஆகியோர் கலந்து கொண்டனர். மாவட்ட கழகத்தின் வளர்ச்சிக்காக க. கந்தன் ரூ.1000 வழங்கினார். சீ. மணிவண்ணன் நன்றி கூறினார். மதியம் 2 மணியளவில் நிகழ்ச்சி முடிவுற்றது. இந் நிகழ்ச்சியில் வடசென்னை மாவட்ட கழகத் தோழர்கள் 50-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பலர் குடும்பத்துடன் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. அனைவருக்கும் மதியம் புலால் உணவு வழங்கப்பட்டது. நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

காவல்நிலையங்களில் ஆயுத பூசை கொண்டாடுவதை சட்ட விரோதம் என்று சுட்டிக்காட்டிய தோழர்களை கைது செய்ததை இக்கூட்டம் கண்டிக்கிறது.

தனியார் துறையில் இடஒதுக்கீடு என்பது இன்று வரை நடைமுறைப்படுத்த முடியாமல் இருப்பது சமூக நீதிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியாகும். தனியார் துறையில் இடஒதுக்கீடு என்பது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கானல் நீராக உள்ள நிலையை மாற்ற மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாதா மாதம் முதல் ஞாயிற்றுக் கிழமை “பெரியார் சிந்தனை வட்டம்” சிறப்புக் கூட்டம் நடத்துவதெனவும், அந்த சிந்தனை வட்டம் சார்பில் பல்துறை அறிஞர்களை அழைத்து பகுத்தறிவு கருத்துக்களை விளக்கும் கருத்தரங்கினை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

வரும் நவம்பர் 27 ஆம் தேதி சாதி ஒழிப்பு மாவீரர்கள் நினைவுப் பொதுக் கூட்டம் திருவொற்றியூரில் நடத்துவது என்றும், டிசம்பர் 6 ஆம் தேதி அம்பேத்கர் நினைவு நாள் பொதுக்கூட்டம் நடத்துவது, டிசம்பர் 24 பெரியார் நினைவு நாள் பொதுக் கூட்ம் பெரம்பூர் கென்னடி சதுக்கத்தில் நடத்துவது என்றும் தீர்மானக்கப்படுகிறது.

**செய்தி: சொ. அன்பு**

## காலை முதல் இரவு வரை கிராமம் கிராமமாக பரப்புரை

# கோவை வடக்கு மாவட்டத்தில் எழுச்சி; மக்கள் பேராதரவு

***கோவை வடக்கு மாவட்டத்தில் சாதி தீண்டாமைக் கொடுமைகளை விளக்கி பொதுச்செயலாளர் கோவை இராம கிருட்டிணன் தலைமையில் நடந்த பரப்புரைப் பயணம் பேரெழுச்சியுடன் நடந்தது. பயணம் பற்றிய செய்தித் தொகுப்பு:***



பெரியார் 132 ஆவது பிறந்த நாள் விழா கோவை வடக்கு மாவட்டம் முழுவதும் 26.9.2010 ஞாயிறு அன்று சிறப்போடு கொண்டாடப்பட்டது. கிளைக் கழகங்களில் கொடியேற்று விழா, பெயர்ப் பலகை திறப்பு விழாக்களோடு பரப்புரை பயணமும் மேற்கொள்ளப்பட்டது. காலை 9 மணிக்கு நாகராசபுரத்தில் துவங்கி, மாலை 6 மணிக்கு பெரிய நயாக்கன் பாளையத்தில் பயணம் நிறைவுற்றது. மாநகர, மாவட்ட தோழர்கள் இருசக்கர வாகன பேரணி நடத்தினர்.

காலை 9 மணிக்கு நாகராசபுரத்தில் கண்ணன், ஆறுமுகம் ஆகியோர் தலைமையில் கொடியேற்று விழா நடைபெற்றது. கழகக் கொடியினை கழகத்தின் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் ஏற்றி சிறப்புரை யாற்றினார். செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி துவக்கி வைத்தார். விழாவில் பொது மக்கள் அதிகமாக கலந்து கொண்டனர். அனைவருக்கும் தேநீர் வழங்கப் பட்டது. நாகராசபுரத்திலிருந்து புறப்பட்ட பயணக் குழு வழி நெடுகிலும் அய்யாவின் புரட்சிப் பாடல்களோடும், இன எழுச்சிப் பாடல்களோடும் பயணித்தது.

காலை 10 மணிக்கு கலிக்கநாமக்கன்பாளையம் வந்தடைந்த பயணக் குழுத் தோழர்களுடன் பொது மக்களும் வரவேற்றனர். தோழர்கள் கருப்புசாமி, சிவராஜ், ஜெய்கிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் கழகத்தின்



கொடியினை பொதுச்செயலாளர் ஏற்றி வைத்து சிறப்புரை யாற்றினார். மாவட்ட தலைவர் இராமசாமி, வெ.ஆறுச்சாமி உரையாற்றினர். விழாவில் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது. தினேஷ்குமார், ரவிக்குமார், சக்திவேல், மணிகண்டன் ஆனந்த பாபு, ரங்கராஜ், மணிகண்டன், கணேசன், கு. ராஜன் ஆகியோர் பொதுச்செயலாளர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

காலை 11 மணிக்கு வடவள்ளி நோக்கி வந்த பயணத்தை, வடவள்ளி தி.மு.க. பொறுப்பாளர்கள் வரவேற்று தேநீர் அளித்தனர். வடவள்ளி பேருந்து நிலையம் அருகில் தம்பு, அசோக்குமார் தலைமையில் கழகக் கொடியேற்று விழா மற்றும் பெயர்ப் பலகை திறப்பு விழா நடைபெற்றது. கழகக் கொடியினை வெ. ஆறுச்சாமி ஏற்றினார். பெயர் பலகையை வடக்கு மாவட்ட தலைவர் து. இராமசாமி திறந்து வைத்தார். மருத்துவர் மாணிக்கம் உரையாற்றினார். திரளான மக்கள் கூடியிருந்த கூட்டத்தில் கழகத்தின் பொதுச் செயலாளர் சிறப்புரையாற்றினார். விழாவில் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. ஏராளமான பொது மக்கள் கருத்துரைகளை கேட்டறிந்தனர்.

பகல் 12 மணிக்கு கவுண்டம்பாளையம் பேருந்து நிறுத்தம் அம்பாடி பேக்கரி அருகில் கிளைக் கழக கொடியேற்று விழா இராசன், பெ. பாலன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. கழகக் கொடியினை வடக்கு மாவட்ட செயலாளர் நாகராசன் ஏற்றி வைத்துப் பேசினார். பொது மக்கள் கலந்து கொண்ட இவ் விழாவில் கழகத்தின் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன், அக்.2 திருச்சி போராட்டம் குறித்து விளக்கி எழுச்சியுரையாற்றினார். அருகில் ஜனநாயக இளைஞர் முன்னணி மாநாடு கல்பனா திருமண மண்டபத்தில் நடந்தது. அங்கிருந்த தோழர்கள் கருத்துரைகளைக் கேட்டு பயனடைந்தனர். விழாவில் கழக வெளியீடுகள், புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டன. அனைவருக்கும் குளிர்பானங்கள் வழங்கப்பட்டது.

எழுச்சியுடன் பயணம் நண்பகல் 1 மணிக்கு துடியலூர் வந்தடைந்தது. வெ. ஆறுச்சாமி, மாவட்ட செயலாளர் நாகராசன் ஆகியோர் பரப்புரை செய்தனர். இரவி, செபாசுடின், இராசேந்திரன் ஆகியோர் தலைமையில் கழகக் கொடியினை பொதுச் செயலாளர் ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். அனைவருக்கும் தேநீர் வழங்கப் பட்டது. ஆங்காங்கு கடைகளில் இருந்தவர்களும் ஆர்வத்துடன் நிகழ்விடத்துக்கு வந்திருந்து பொது மக்களுடன் இக்கருத்துகளை கேட்டனர்.

நண்பகல் 2 மணிக்கு சரவணம்பட்டி பெரியார் நகர் மக்கள் பயணக் குழுவை வரவேற்றனர். வீ.கணேசன், சந்திரன் ஆகியோர் தலைமையில் விழா நடைபெற்றது. கழகக் கொடியினை கழகத்தின் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் ஏற்றி வைத்து எழுச்சியுரை யாற்றினார். கிளைக் கழகத்தின் சார்பில் விழாவில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

மதியம் 2.45 மணிக்கு காளப்பட்டி நோக்கி வந்த பயணக் குழுவுக்கு பறை இசை முழங்க மேளதாளத்துடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜெயபிரகாஷ், அம்பேத்கர், மணி ஆகியோர் தலமையில் கொடியேற்று விழா நடைபெற்றது. கழகக் கொடியினை மாநகர செயலாளர் இ.மு. சாஜித் ஏற்றி வைத்தார். திடீரென மழை பெய்யத் தொடங்கியது. அம்மழையிலும் ஏராளமான பொது மக்கள் பங்கு பெற்றனர். கழகத்தின் போராட்டத்தை விளக்கி பொதுச்செயலாளர் சிறப்புரையாற்றினார். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. மழையுடன் தொடர்ந்தது கொள்கைப் பயணம். தேசிய நெடுஞ்சாலைகளில் பயணித்துக் கொண்டிருந்த நம் பயணம், இப்போது மெல்ல கிராமங்களின் வழியே பயணித்து வெள்ளமடை கிராமத்தை அடைந்தது. அங்கு தோழர்களும் மக்களும் வரவேற்றனர்.

மதியம் 3.15 மணிக்கு வெள்ளமடை கிளைக் கழகத்தின் பெயர் பலகை திறப்பு மற்றும் கொடியேற்று விழா, கா. மோகன்ராசு, சா. ரமேசு, வே. சுரேசு ஆகியோர் தலைமை யில் நடைபெற்றது. கழகத்தின் கொடியினை சா. கதிரவன் ஏற்றினார். பெயர்ப் பலகையை பொதுச் செய லாளர் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். ஏராளமான கிராம மக்கள் திரண்டு வந்திருந்தனர். கருத்துரைகளைக் கேட்ட மக்கள், கழகத்தின் போராட்டத்திற்கு வாழ்த்து தெரிவித்தனர். இறுதியில் கிளைக் கழகத்தின் தலைவர் அ. இராம கிருட்டிணன் நன்றியுரையாற்றினார். விழாவில் அனை வருக்கும் காரம், இனிப்பு மற்றும் தேநீர் வழங்கப்பட்டது.

பயணக்குழு மதியம் 3.45 மணிக்கு நாயக்கனூர் சென்றடைந்தது. வீரபாண்டி பாபு மதிய உணவு (மாட்டுக்கறி) வழங்கி சிறப்பித்தார். சிறிது நேர ஓய்வுக்குப் பின் மாலை 4.30 மணிக்கு நாயக்கனூர் கிளைக் கழகத் தோழர்கள் வீரபாண்டி பாபு, சத்திய பிரகாஷ் ஆகியோர் தலைமையில் விழா நடைபெற்றது. கழகக் கொடியினை மாநகர பொருளாளர் இரஞ்சித் பிரபு ஏற்றி வைத்தார். கா.ச. நாகராசன் பெயர்ப் பலகையை திறந்து வைத்து உரையாற்றினார். கழகத்தின் பொதுச் செயலாளர் கு. இராம கிருட்டிணன் சிறப்புரையாற்றினார். அங்கிருந்து எழுச்சி யுடன் புறப்பட்ட பயணம் மாலை 5 மணிக்கு வீரபாண்டி பிரிவு வந்தடைந்தது. ராகீஸ் பாபு தலைமையில் கழகக் கொடி யினை வடக்கு மாவட்ட பொருளாளர் மாவீரன் மதியழகன் ஏற்றி வைத்தார். மாநகர செயலாளர் இ.மு.சாஜித் உரை யாற்றினார். நிறைவாக கழகத்தின் பொதுச் செயலாளர் உரையாற்றினார்.

மாலை 5.30 மணிக்கு பெரிய நாயக்கன்பாளையம் விவேகானந்தபுரம் கிளை கழகத்தில் ஸ்டாலின், ராஜ்குமார் ஆகியோர் தலைமையில் கழகக் கொடியினை கழகத்தின் பொதுச்செயலாளர் ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

மாலை 6 மணிக்கு பெரியநாயக்கன் பாளையம் பேருந்து நிறுத்தத்தில் கி. சீனிவாசன், சி. பிரசன்னா ஆகியோர் தலைமையில் கழகக் கொடியேற்றி வைத்து கழகத்தின்

*(4 ஆம் பக்கம்)*



PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# மரணதண்டனை குற்றங்களை குறைக்காது!

## தமிழச்சி தங்க பாண்டியன்

***தூக்குத் தண்டனை மனித உரிமைக்கு எதிரானது என்ற அழுத்தமான வாதங்களை முன் வைக்கும் கட்டுரையாளர், உலக வரலாற்றிலிருந்து சம்பவங்களை சுட்டிக் காட்டுகிறார். (சென்ற இதழ் தொடர்ச்சி)***

அடுத்ததாக நாம் மிக மிக வலியோடு கவனிக்க வேண்டிய விசயம் இந்த மரண தண்டனை நிறைவேற்றப்படுகின்ற பொழுது எந்த வகையில் அவை நிறைவேற்றப்படுகின்றன என்பதாகும். மரண தண்டனை அறிவிக்கப்பட்ட அந்த கணத்தில் இருந்து எப்படி சாவை நாம் எதிர்க்கொள்ளப் போகிறோம் என்கின்ற அந்த வேதனையிலும், அந்த முள் வலியிலுமே மனிதனுடைய இறப்பு நிகழத் தொடங்கிவிடுகிறது. எத்தனை வழிகளில் எல்லாம் அவர்களுக்கான தண்டனை நிறைவேற்றப்படுகின்றது என்று பார்த்தோமேயானால் சாகும் வரை தூக்கிலிடுதல், மின்சார நாற்காலி, மரண வாயு, டெட்டால் ஊசி என மிக மிக கடுமையான, கொடுமையான வலி மிகுந்த வழிகளிலேயே அவர்கள் மரணத்தை சந்திக்க நேர்கின்றன. மிக வருத்தத்திற்குரிய கவனத்தில் கொள்ள வேண்டிய இன்னொரு விசயம் நைட்ரசன் ஆக்டிபேகேஷன் என்ற முறையும் இப்போது சமீபகாலமாக புழக்கத்திலே வரலாமா ? வேண்டாமா என்ற ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றதாம். அவற்றையும் நாம் கவனத்தில் கொண்டு மிக, மிக உரத்தக் குரலெடுத்து நாம் இவற்றிற்கு முடிவுக் கட்ட வேண்டும்.

1974-லே பெக்காரியா என்பவர் எழுதிய ‘ஆன் கிரைம் அன்ட் பனீஷ்மென்ட்’ என்ற புத்தகத்தை படித்து விட்டுத் தான் ஒரு அரசு மனம் திருந்தி ஆஸ்திரியாவிலே மரண தண்டனையை குறைத்திருக்கின்றது. இந்த புத்தகத்திலே இந்த தண்டனை எந்த வகையிலும் குற்றங்களை குறைக்கப் போவதில்லை என்று மிக அழகாக கோர்வையாக அன்றே அந்த எழுத்தாளர் எடுத்து வைத்த வாதத்திலே மயங்கி, அதிலே மனம் திருந்திய ஆஸ்த்ரிய அரசர், தனது ஆளுமைப் பிரதேசத்திலே 1806-லிருந்து அந்த மரண தண்டனையை ஒழித்தார். இன்றளவும் அந்த தண்டனை ஒழிக்கப்பட்ட நவம்பர் 30 தான் உலகமெங்கும் ‘சிட்டிஸ் பார் லைப்டே’ என்று ஒரு தினமாக அனுசரிக்கப்பட்டுக் கொண்டாடப்படுகிறது. அந்த ஒரு பொன்னான நாள் இந்தியாவிலே மரண தண்டனை ஒழிக்கப்பட்டு நாமும் கொண்டாடப்படுகின்ற ஒரு நிலை நமக்கும் வரும் என நாம் நம்புவோம்.

ஆகவே படைப்பாளிகளாகிய, போராளிகளாகிய நாம் மிக வலுவாக எழுத்திலே, பேச்சிலே தெருமுனைக் கூட்டங்களிலே, மாநாடுகளிலே குறிப்பாக பொது மக்களுக்கு அதிலே இருக்கின்ற பாதகங்களை அவர்களுக்கு புரியும்படி எடுத்துச் சொல்லி, அவர்களுடைய எண்ணங்களை காரணம் காட்டி, இன்றைக்கு இருக்கின்ற இந்த இந்துத்துவா சக்திகளும், இனத்திற்கு எதிரான சக்திகளும் எப்படி ஒரு மாயையை உருவாக்கியிருக்கின்றனவோ அந்த மாயையிலிருந்து மக்களை வெளிக் கொண்டு வரவேண்டும்.

காந்தி சொல்கின்றார், ‘‘கடவுள் தந்த உயிரைப் பறிக்க மனிதனுக்கு உரிமையில்லை. உயிரைப் பறிக்கும் உரிமை அரசுக்குக் கிடையாது’’. கடவுள் மீது நம்பிக்கையற்றவர்கள் நாங்கள். ஆனால் மனிதர்கள் மீதும், மனித உயிர்கள் மீதும் அன்பும், நம்பிக்கையும் உடையவர்கள் என்பதால் உரத்துச் சொல்கின்றோம். உயிரைப் பறிக்கும் உரிமை அரசுக்குக் கிடையாது.

கிருஷ்ணய்யர் சொல்லுகின்றார், ‘‘நீதிமன்றம் விதித்த தண்டனையால் ஒரு மனித உயிர் பறிக்கப்படும் ஒவ்வொரு வைகறை பொழுதிலும் மனித உரிமைக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கின்றன. நீதிபதிகள் விதிக்கும் மரணதண்டனைகளை எதிர்த்து நாம் வாதாடுகின்றோம். ஆனால், பல நேரங்களில் அரசின் கையில் உயிர் இழப்பவர்கள் ஏராளமானோர். பொய் மோதல்கள், காவல்துறை, இராணுவ படுகொலையில் சாகிறார்களே தவிர, நீதிபதிகள் விதித்த மரண தண்டனையால் அல்ல; நாம் இந்த படுகொலைகளையும் எதிர்த்துப் போராட வேண்டும். ஒவ்வொரு மனிதனுமே திருத்தப்படக் கூடியவன் தான். உலகிலேயே படுமோசமான கயவனைக்கூடத் திருத்திவிட முடியும். பொருத்தமான பயிற்சியின் வாயிலாக, பொருத்தமான சீர்படுதலின் வாயிலாக, மனப்பாங்கை மாற்றும் படியான பொருத்தமான வழிமுறைகள் வாயிலாகவும், பொருத்தமான சகவாசத்தின் வாயிலாக பொருத்தமான விழுமங்களை புகட்டுவது மூலமாக மனிதர்களை நாம் மாற்ற முடியும். மனித உரிமைகளுக்காக ஓங்கி குரல் கொடுப்போம்; கொடுத்துக் கொண்டிருப்போம், உரிமைகளைப் பெறுவோம்.

---

*(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

பொதுச் செயலாளர் சிறப்புரையாற்றினார். கழகத்தின் பிரச்சார பயணம் தோழர்கள் மத்தியில் மிகப் பெரிய உற்சாகத்தைத் தந்தது. பயணத்திற்கான ஏற்பாடுகளை வடக்கு மாவட்ட தலைவர் து. இராமசாமி, செயலாளர் நாகராசன், அமைப்பாளர் சண்முகம் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். இரு சக்கர வாகனப் பேரணி மாநகரத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பயணத்தில் முன்னேற்பாட்டுக் குழுவாக மு. பூங்கா பாண்டியன், கோ. பாலமுரளி, சிலம்பரசன், தமிழரசன் ஆகியோர் செயல் பட்டனர். ஆக.2 போராட்டம் சுவர் விளம்பரம் மற்றும் பொதுக் கூட்ட விளம்பரம் ஆகியவற்றை ஓவியர் வீரபாண்டிபாபு சிறப்பாக செய்திருந்தார். பயணத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் வடக்கு மாவட்டத்தின் சார்பில் மாவட்ட செயலாளர் நாகராசன் நன்றி கூறினார்.

26.9.2010 ஞாயிறு இரவு 7 மணிக்கு பெரிய நாயக்கன்பாளையம் பேருந்து நிலையம் அருகில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பெரியநாயக்கன் பாளையம் ஒன்றியத் தலைவர் கி. சீனிவாசன் தலைமை தாங்கினார். வடக்கு மாவட்ட தலைவர் து. இராமசாமி, மேட்டுப்பாளையம் நகர அமைப்பாளர் த. சந்திரசேகர், பெரியநாயக்கன்பாளையம் நகர செயலாளர் வீரபாண்டி பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பொரு ளாளர் மாவீரன் மதியழகன் வரவேற்புரையாற்றினார். தலைமைக் கழக பேச்சாளர் கா.சு. நாகராசு, கழகத்தின் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பார்ப்பனியம் நம்மை எப்படி அடிமைப்படுத்தியது ? அதனை பெரியார் எவ்வாறு எதிர்கொண்டு தமிழர் நலன் காத்தார் என்பதை கழகப் பேச்சாளர் கா.சு. நாகராசு விளக்கிப் பேசினார். கழகத்தின் பொதுச் செயலாளர் இன்றைய சூழலில் பெரியாரின் தேவை குறித்தும், மனிதனை மனிதன் அடிமைப்படுத்தும் சாதித் தீண்டாமையை ஒழிக்க நாம் அனைவரும் ஒன்று திரண்டு போராட வேண்டும். கழகத்தின் திருச்சி தீண்டாமை ஒழிப்புப் பிரிவின் காவல் நிலையத்தை இழுத்துப் பூட்டும் போராட்டத்திற்கு அனைவரும் வாரீர் என அறைகூவல் விடுத்து எழுச்சியுரையாற்றினார். முடிவில் மாவட்ட அமைப்பாளர் ம. சண்முகம் நன்றி கூறினார்.

# ஐ.நா.வில் மரண தண்டனைக்கு இந்தியா ஆதரவாம்!

மரண தண்டனை விதிப்பதை முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும் என்று ஐ.நா. அவையில் கொண்டு வரப்பட்டத் தீர்மானத்திற்கு எதிராக அமெரிக்கா, ஈரான், சவுதி அரேபியா ஆகிய நாடுகளுடன் இணைந்து இந்தியாவும் வாக்களித்துள்ளது. ஆயினும் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்று கோரும் அந்த தீர்மானத்திற்கு பெரும்பான்மை நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன. ஐ.நா. அவையில் உறுப்பினர்களாக உள்ள 192 நாடுகளில் 107 நாடுகள் மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

இந்தியா, சீனா, சவுதி அரேபியா, அமெரிக்கா, ஈரான் ஆகியன உள்ளிட்ட 38 நாடுகள் அதற்கு எதிராக வாக்களித்தன. ஆதரவாகவோ, எதிராகவோ வாக்களிக்காமல் 36 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தன. இதே போன்று 2007 ஆம் ஆண்டில் மரண தண்டனை ஒழிக்கக் கோரி கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாக 104 நாடுகள் வாக்களித்தன. இப்போது அது 107 ஆக உயர்ந்துள்ளது. அப்போது 54 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. அது இப்போது 38 ஆக குறைந்துள்ளது. இதேபோல் வாக்களிப்பில் கலந்து கொள்ளாத நாடுகள் அப்போது 29 ஆக இருந்தன. அது இப்போது 36 ஆக அதிகரித்துள்ளது. இதிலிருந்து மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்றும் கருத்தொற்றுமை உலக நாடுகளுக்கு இடையே அதிகரித்து வருவது தெரிய வந்துள்ளது.

---

### மார்க்சிஸ்ட்டாக இருந்தாலும் ‘தலித்’ என்றால் இப்படித்தான்!

கங்காதார் கெய்க்வார்டு என்பவர் மும்பையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி தலைவர். மத்திய தொழிற் சங்கத்தின் துணைத் தலைவர் ஆனாலும், நான்டிட் மாவட்டத்தில் பஜ்ரங் குடியிருப்பு என்ற பகுதியில் இவர் தனக்காக ஒரு வீடு கட்ட முடியவில்லை. காரணம், இவர் மார்க்சிஸ்டாக இருந்தாலும் பிறப்பால் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தவர். மராட்டியத்திலுள்ள ‘‘தீண்டப்படாத’’ சாதியான ‘மங்ஸ்’ என்ற பிரிவைச் சார்ந்தவர். பஜ்ரங் குடியிருப்பில் இவருக்காக சொந்தமான குடியிருப்பு மனை ஒன்று உள்ளது. அதில் அரசு திட்டமான ஏழைகளுக்கு வீடு கட்டித் தரும் ஜவகர்லால் நேரு, நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வீடு கட்டும் அனுமதி கிடைத்தது. மாநகராட்சியும் அவரது மனையில் வீடு கட்ட தொடங்கியது. அப்போதுதான் குடியிருப்பின் அக்கம்பக்கத்து பார்ப்பனர்கள், சாதி வெறியர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். வீடு கட்டும் வேலையும் நிறுத்தப்பட்டு விட்டது. கங்காதர் அப்பகுதியில் மதவெறி சக்திகளுக்கும், ஊழல் பெருச்சாளிகளுக்கும் எதிராக செயல்பட்டு வந்தார். தனக்கு இழைக்கப்படும் சாதி தீண்டாமை அவமதிப்பிலிருந்து காப்பாற்றிட தனது உரிமையைக் காப்பாற்ற வேண்டும் என்று அவர் அரசுக்கு மனுத் தாக்கல் செய்துள்ளார்.

---

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*



இலால்குடி முத்து. செழியன், பயிற்சியைப் பார்வையிட வந்தவர், பயிற்சியில் வழங்கப்பட்ட கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, அவரும், பயிற்சியாளர்களில் ஒருவராக இருந்து குறிப்புகளை எடுத்து, முழுமையாகப் பங்கேற்றது குறிப்பிடத்தக்கதாகும். கழகத் தோழர்களின் கட்டுப்பாடு, கொள்கைத் துடிப்புகளை அவர் நெகிழ்ந்து பாராட்டினார். 1958 ஆம் ஆண்டு சட்ட எரிப்புப் போராட்டத்தில் 9 மாத சிறைத் தண்டனை பெற்ற தோழர் முத்து செழியன், 1946 ஆம் ஆண்டிலிருந்து கழகத்தில் இணைத்துக் கொண்டு பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றவர்.

பெரியார் காலத்தில் கழகத்தில் போராளியாகத் திகழ்ந்து, விழுப்புண்களை சந்தித்து வாழ்க்கையை கொள்கைக்கு உரமாக்கிய 80 வயதைக் கடந்த திருச்சி ஆசிட் தியாகராசன், கடைசி இரண்டு நாட்கள் பயிற்சியில் பங்கேற்று, தமது களப் போராட்டங்களை தோழர்களுடன் பகிர்ந்து கொண்டார். அவரது கருத்துப் பகிர்வு தோழர்களுக்கு உணர்வூட்டியது. 35 தோழர்கள் பயிற்சியில் பங்கேற்றனர். பல்வேறு மாவட்டங்களிலிருந்து பங்கேற்ற தோழர்கள் தங்களுக்குள் கலந்து உறவாடி தோழமையை வளர்த்தெடுப்பதற்கும் இந்தப் பயிற்சி முகாம் பயன்பட்டது. நவம்பர் 13 ஆம் தேதி மாலை 6 மணியளவில் பயிற்சி முகாம் நிறைவடைந்தது.

---

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
**தொடர்புக்கு புதிய எண்:**
✆ 99416 13535


### நன்கொடை

திருச்சி மாவட்ட கழகத் தோழர் க. செகன்னாதன் மகன் செ. கருணாநிதி - கு. மாலதி ஆகியோரது வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா 27.10.2010 புதன் கிழமை காலை 10.30 மணியளவில் இலால்குடி பெரியார் திருமண மாளிகை யில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. பெரியார் பெருந் தொண்டர் முத்துச் செழியன், மருத்துவர் முத்து, வே. ராசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழ் வளர்ச்சிக்காக ரூ.1000 நன்கொடை வழங்கினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 18th November 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | நவம்பர் 25, 2010 | புரட்சி 9 | முழக்கம் 46 | விலை: ரூ.2.50


## புதுவை கழகத் தலைவர் லோகு அய்யப்பன் – சக்திவேல் (தி.மு.க.), தேவமணி (பா.ம.க.) மீது

# தேசிய பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தது

## ஈழத் தமிழர்களுக்கு உதவியதாக குற்றச்சாட்டு!

ஈழத் தமிழ் அகதிகள் வெளிநாடு செல்ல உதவினார்கள் என்ற குற்றத்தின் கீழ் புதுவை மாநில கழகத் தலைவர் லோகு அய்யப்பன், தி.மு.க. கவுன்சிலரும், மீனவர் சங்கத் தலைவருமான சக்திவேல், காரைக்கால் மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் தேவமணி ஆகியோரை தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் புதுவை காங்கிரஸ் ஆட்சி கைது செய்துள்ளது. இதே குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் இந்திய தண்டனை சட்டத்தில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு, சுமார் இரண்டு வாரம் சிறைவாசத்துக்குப் பிறகு, நீதிமன்றத்தால் நிபந்தனை பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

காலையிலும் மாலையிலும் புலனாய்வு அலுவலகத் தில் கையெழுத்திட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் புதுவை காங்கிரஸ் ஆட்சி பழிவாங்கும் வெறியில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ஏவியுள்ளது. மத்திய காங்கிரஸ் அமைச்சர் ஒருவர் இதற்கு பின்னணியாக இருந்து செயல்பட் டுள்ளதாக தெரிகிறது.

தேசிய பாதுகாப்புச் சட்டத்தை முறைகேடாக பழி வாங்கும் நோக்கத்தோடு, பயன்படுத்தியிருப்பது புதுவை வாழ் தமிழின உணர்வாளர்களை கொதிப்படையச் செய்துள்ளது. கைதான அடுத்த நாளே - கைதைக் கண்டித்து அனைத்துக் கட்சியினரும் பங்கேற்ற மறியல் போராட்டம் 18 ஆம் தேதி புதுவை சுப்பையா சிலை அருகே மாநில கழக அமைப்பாளர் தந்தைப் பிரியன் தலைமையில் நடைபெற்றது. மறியலில் முத்து (பார்வர்டு பிளாக் கட்சி), அருமைதாசு (நாம் தமிழர்), தமிழ் மணி (செந்தமிழ் இயக்கம்), செல்வராசு (ம.தி.மு.க.), புரட்சி வேந்தன் (மக்கள் ஜனசக்தி), எம். சந்திர சேகர் (பிராமப்புற மக்கள் அடிப்படை உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் இயக்கம்), பார்த்திபன் (செம்படுகை நன்னீரகம்), கி. மூர்த்தி (புரட்சியாளர் அம்பேத்கர் மக்கள் படை), ஆனந்த குமார் (புதுவை குயில் பாசறை), இராம சேகர் (புரட்சிப் பாவலர் இலக்கிய பாசறை), வேல்முருகன் (மாணவர் கல்வி உதவி அறக்கட்டளை) ஆகியோர், தங்க அமைப்பு தோழர் களுடன் கலந்து கொண்டனர். ஏராளமான கழகத் தோழர்கள் பங்கேற்றனர். 302 தோழர்கள் கைது செய்யப்பட்டு, பிறகு விடுதலை செய்யப்பட்டனர்.

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப் பட்டதைக் கண்டித்து புதுவை முழுதும் கண்டன சுவ ரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ன. ஆர்ப்பாட்டங்கள், பெண்கள் பங்கேற்கும் போராட்டங்கள், தொடர் கண்டனக் கூட்டங்கள் என்று பழிவாங்கும் அடக்கு முறையைக் கண்டித்து, மக்கள் இயக்கங்களை நடத்துவதற்கு தோழர்கள் திட்டமிட்டுள்ளனர். உயர்நீதிமன்றத்தில் கழக சார்பில் தேசிய பாது காப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி கழகத்தின் மூத்த வழக்கறிஞர் எஸ்.துரைசாமி வழக்கு தொடர இருக்கிறார்.

லோகு அய்யப்பன் கைதைக் கண்டித்து, கடந்த 20 ஆம் தேதி மாலை கோவையில் தமிழ்நாடு உணவகம் முன் கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் கழக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## ஒரு மாத சிறைவாசத்திற்குப் பின் மார்ட்டின் பிணையில் விடுதலை



மேட்டூர் காவல் நிலையத்தில் அரசு ஆணைகளுக்கு எதிராக, ஆயுத பூஜை கொணடாடப்பட்டது. இதை தட்டிக் கேட்ட கழகத் தோழர்கள் பொய் வழக்கில் கைது செய்யப்பட்டு மார்ட்டின் தவிர மற்ற தோழர்கள் ஏற்கனவே பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்) 16.11.2000 செவ்வாய் அன்று பகல் 12 மணிக்கு சேலம் மாவட்ட கழகத் தலைவர் தோழர் மார்ட்டின், சுமார் ஒரு மாத காலத்திற்குப் பிறகு சேலம் மத்திய சிறையில் இருந்து பிணையில் விடுதலை செய்யப்பட்டார். அவருக்கு சிறை வாசலில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி உட்பட ஏராளமான தோழர்கள் வரவேற்பு அளித்தனர். பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. பின்னர் தோழர்களால் மேட்டூர் அழைத்துச் செல்லப்பட்டார்.

## மாவீரரின் கொடி இது!

ஏறுதுபார் கொடி ஏறுதுபார்
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் – இங்கு
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் – தமிழ்
ஈழத்தின் வேதனை தீர்த்தகொடி
எட்டுத்திக்கிலும் மானத்தை சேர்த்தகொடி
காலத்தை வென்றுமே நின்றகொடி – புலி
காட்டிய பாதையில் சென்றகொடி

செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது – தமிழ்
மக்களைக்காத்த நம்மான மாவீரரை
வாழ்த்திடும் கொடியிது – புலி
வீரத்தின் கொடியிது
மாவீரரின் கொடியிது.

எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது – பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினில்
சாற்றிய கொடியிது – தமிழ்
ஈழத்தின் கொடியிது – புலி
ஏந்திய கொடியிது.

சாதிகள் சண்டைகள் சாய்த்துவிழுத்திய
சாதனைக் கொடியிது – சங்கு
ஊதி முழங்கிட ஊர்மனை யாவிலும்
உலவிய கொடியிது – சம
தர்மத்தின் கொடியிது – எங்கள்
தாயவள் கொடியிது.

ஆயிரமாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது – பிர
பாகரன் என்றிடும் காவியநாயகன்
போற்றிடும் கொடியிது – தமிழ்த்
தேசத்தின் கொடியிது – எங்கள்
தேசியக் கொடியிது.

***(மாவீரர் நாளில் ஒலிக்கும் கொடி வணக்கப் பாடல். நவம்பர் 27 – மாவீரர் நாள் நினைவாக)***

## நவம்பர் 26 சாதியை பாதுகாக்கும் சட்டத்தை எரித்த நாள்

*சட்ட எரிப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்து பெரியார் 'விடுதலை'யில் விடுத்த அறிக்கை:*

நான்,
மூன்று ஆண்டுக்கோ,
பத்து ஆண்டுக்கோ,
நாடு கடத்தலுக்கோ
தூக்குக்கோ

மற்றும் பிரிட்டிஷ்காரன், காங்கிரஸ் கிளர்ச்சியின் மீது கையாண்ட எந்தவிதமான கொடிய, தீவிரமான அடக்கு முறைகளை நம் மீதும், கழகத்தின் மீதும் பிரயோகித்தாலும் கூட, அவைகளுக்குப் பயப்பட்டு என் லட்சியத்தையோ, திட்டத்தையோ மாற்றிக் கொள்ளப் போவதில்லை.

கழகத் தோழர்களே! தீவிர லட்சிய வாதிகளே!

நீங்கள் மூன்று ஆண்டு தண்டனைக்கு பயந்துவிட வேண்டியதில்லை. பயந்து விட மாட்டீர்கள். சட்டத்தைப் பார்த்து பயந்து விட்டதாகப் பேர் வாங்காதீர்கள்!

ஆகவே இஷ்டப்பட்டவர்கள் தஞ்சை மாநாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்ற பெயர் கொடுங்கள்.

# சாதி : சாஸ்திரங்கள் கூறும் இழிவு கதை

## – பெரியார் –

ஒரே நாட்டு மக்கள் பிறவியில் பல சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது இந்தியாவில் தான் இருக்கின்றதே தவிர வேறு எங்கும் இல்லை.

பொதுவாக 'சாதி' என்பது, இந்துக்கள் என்பவர்களுக்குள் – ஆரியக் கொள்கைகளுக்கு அடிமைப்படுபவர்களுக்குள் மாத்திரம் தான் – 'கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது' என்கின்ற கொள்கையின் மீது நாலு சாதிகளாக, அதுவும் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவை முறையே ஒன்றுக்கொன்று தாழ்ந்ததாகவும் – கடைசி சாதி மிக்க இழிவானதாகவும் கருதப்படுவதாகக் குறிக்கப்பட்டிருக்கின்ற விவரம் யாவரும் அறிந்ததேயாகும். இப்படி இருந்தாலும், இப்போது அனேக சாதிகள் இருப்பதற்கு என்ன காரணம்? அதாவது, "ஆதியில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட நான்கு வருணத்தாரும் தங்களில் சாதிமுறை தவறிக் 'கலப்பு', 'விபச்சாரம்' செய்து கொண்டதால் ஏற்பட்ட பிரிவுகளென்றும் அப்படிப்பட்ட பிரிவுகளுக்குப் பஞ்சம சாதியார்கள் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் ஆதாரங்களில் இருக்கின்றன.

அப்படிச் சொல்லப்படுவதிலும் இப் 'பஞ்சம சாதிகள்' என்பது, இப்போது நமது நாட்டில் பெரும்பான்மையாய் இருக்கும் பல முக்கியமான சாதிக்காரர்கள் என்பவர்களே பெரிதும் இந்த விபச்சாரப் பெருக்கால் ஏற்பட்ட பஞ்சம சாதிகள் என்றே காட்டப்பட்டிருக்கின்றது. ஆகவே, அதில் உதாரணமாக இன்று தமிழ்நாட்டில் பிரபல சாதியும் பிரமுக சாதியும் என்று சொல்லிக் கொள்ளப்படுவதான வேளாள சாதியார் எனப்படுபவர்களே பஞ்சம சாதியில் சேர்ந்தவர்கள் என்றும், பஞ்சம சாதியிலும் பிராமணன், க்ஷத்திரியப் பெண்ணைச் சோரத்தால் கலந்ததால் பிறந்தவர்கள் என்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

இவர்களில் – இந்தப்படியான வேளாளர் என்பவர்களில், விவசாயம் செய்பவர்களாக இருந்தால் அவர்களுக்குக் 'காணியாளர்' என்றும் பதவிகளில் இருந்தால் 'வேளாண் சாமந்தர்' என்றும் குறிக்கப்பட்டிருப்பதுடன், இவற்றிற்கு ஆதாரம் சுப்ரபோதகம், பிரம்ம புராணம், வைகாநசம், மாதவியம், சாதி விளக்கம் என்கின்ற நூல்கள் என்றும் உள்ளது.

பிராமணன் – வைசியப் பெண்ணுடன் கலியாணத்தால் பிறந்த பிள்ளை அம்பட்டன் என்றும், சோரத்தால் பிறந்த பிள்ளைகள் குயவர், நாவிதர் என்றும் உள்ளது.

அதுபோலவே, பிராமணன் – சூத்திரப் பெண்ணுடன் கலியாணத்தால் பிறந்த பிள்ளை 'பரதவர்' அல்லது 'செம்படவர்' என்றும் சோரத்தால் பிறந்த பிள்ளை 'வேட்டைக்காரன்' அல்லது 'வேடுவர்' என்றும் உள்ளது.

அதுபோலவே, பிராமணன் க்ஷத்திரிய சாதிப் பெண்ணை விவாகம் செய்து கொண்டதால் பிறந்த பிள்ளைகளே 'சவர்ணர்' எனவும், 'தெலுங்கர்' எனவும் உள்ளது.

பிராமணப் பெண்ணுடன் சூத்திரன் விபச்சாரம் செய்ததால் பிறந்தவர்கள் 'சண்டாளர்கள்' என்றும் உள்ளது.

பிராமணகுலப் பெண்ணுடன் சண்டாளர் கூடிப் பிறந்த பிள்ளைகள் 'சருமக்காரர்' அதாவது 'சக்கிலியர்' என்றும், க்ஷத்திரிய குலப் பெண்ணுடன் சண்டாளர்கள் சேர்வதால் பிறந்த மக்கள் 'வேணுகர்' (வேணுகானம் செய்பவர்கள்), 'கனகர்' (தங்கவேலை செய்பவர்), 'சாலியர்' (நெசவு வேலை செய்பவர்) ஆவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாதிரி கீழ் மேல் சாதிகள் கலந்து வந்ததால் ஏற்பட்ட சாதிகளில் ஒன்றாகிய 'அயோவகச் சாதி'ப் பெண்ணிடம், நிடாதனுக்குப் பிறந்த பிள்ளைகள் 'பார்க்கவர்கள்' என்றும் உள்ளது. இந்தப்படியே, இப்போது அமுலில் உள்ள சாதிகளெல்லாம் குறிக்கும்படியாகவே இன்னும் அனேக விஷயங்கள் காணப்படுகின்றன. அபிதான கோசம், அபிதான சிந்தாமணி முதலிய எல்லா இந்துப் பண்டிதர்களாலும் ஆதாரமாய்க் கொண்டாடப்படும் புத்தகங்களிலும் மற்றும் பல சாதிகளை இதைவிடக் கேவலமாகவும் குறிக்கப்பட்டிருக்கின்றதோடு நான்கு ஜாதிகள் தவிர, மற்ற சாதிகள் எல்லாம் மேற்கண்ட நான்கு சாதிக்குள் மேல் கீழாகவும், கீழ் மேலாகவும் கலியாணம் செய்தும், விபச்சாரம் செய்தும் பிறந்த பிள்ளைகளாக ஏற்பட்டவர்கள். செட்டியார், ஆச்சாரியார் இவர்களைப் பற்றியும் மிக மிக இழிவாகக் கூறப்படுகின்றது.

ஆகவே, ஜாதியைக் கட்டிக் கொண்டு அழுவது இவ்விழிவுகளை மறைமுகமாய் ஏற்றுக் கொள்வதையே ஒக்கும்.

**('குடிஅரசு' தலையங்கம் 16.11.1930)**

# "மாற்று உலகை நோக்கி பயணிக்கிறேன்"

*(அருந்ததி ராய் பற்றி 'ஆனந்த விகடன்' வார ஏடு நவம்பர் 24 இதழில் வெளியிட்ட குறிப்புகள்)*



அதிகாரத்துக்கு எதிராக அஞ்சாமல் போராடும் துணிச்சல்காரர், அருந்ததி ராய்! காஷ்மீர், ஈழம், மாவோயிஸ்டுகள்... என அனலடிக்கும் பிரச்னைகள் அனைத்திலும் நேர்மையின் பக்கம் நிற்கும் எழுத்துப் போராளி!

மேகாலயா மாநிலம் ஷில்லாங்கில் 1961 ஆம் வருடம் நவம்பர் 24 ஆம் தேதி பிறந்தவர். கேரள அம்மாவுக்கும் பெங்காலி அப்பாவுக்கும் பிறந்தவரின் இளம் பருவம் முழுக்க ஆலப்புழாவில் இருக்கும் 'அய்மெனம்' (ayemenem) எனும் அழகிய கிராமத்தில் கழிந்தது!

அய்மெனம் கிராமத்தில் கம்யூனிசத்தின் தாக்கம் அதிகம். இதைப் பற்றி, 'அப்போது எல்லாம் அடுத்த வாரம் புரட்சி வந்துவிடும் என்பதுபோலவே இருக்கும்' என்று புன்னகையுடன் குறிப்பிடுகிறார் தனது நூலில்!

கோட்டயத்தில்தான் பள்ளிப் படிப்பு. ஊட்டி லவ்டேலில் இருக்கும் லாரன்ஸ் பள்ளியிலும் சில வருடங்கள் படித்தார். 16 வயதில் டெல்லிக்குச் சென்று கட்டடக் கலை படிப்பில் சேர்ந்தார்!

டெல்லியில் உடன் படித்த சீனியர் ஒருவரைக் காதல் மணம் புரிந்து கொண்டார். ஆனால், நான்கே வருடங்களில் அந்தத் திருமணம் விவகாரத்தில் முடிந்தது!

1997 இல் புக்கர் பரிசு வென்ற இவருடைய 'The God ofSmall Things' விற்பனையிலும் செம ஹிட். மே மாதம் வெளியான நாவல் ஜூன் மாதமே விற்றுத் தீர்ந்தது. அட்வான்சாக மட்டும் அருந்ததி ராய்க்குக் கிடைத்த தொகை ரூ.5 லட்சம் பவுண்ட்!

தனது 40 ஆவது வயதில் புக்கர் பரிசு வென்றார் அருந்ததி ராய். இப்போது வரை புக்கர் பரிசு வென்ற ஒரே இந்திய எழுத்தாளர் ராய் தான்!

'The God of Small Things' நாவலை 97 ஆம் வருடத்தின் உலகின் தலைசிறந்த ஐந்து புத்தகங்களில் ஒன்றாகத் தேர்வு செய்தது 'டைம்' பத்திரிகை. நாவல் வெளியாகி உலகமே கொண்டாடிக் கொண்டு இருக்க.... மீண்டும் டி.வி. சீரியலுக்கு திரைக்கதை எழுத வந்தார் அருந்ததி ராய். The Banyan Tree என்ற சீரியலின் திரைக்கதை ராய் எழுதியதே!

புக்கர் பரிசு வென்றதும், 'இது ஐந்து நீதிபதிகளின் தீர்ப்பு. ஒரு வேளை வேறு ஐந்து பேர் நீதிபதிகளாக இருந்திருந்தால், வேறு ஒரு புத்தகம் தேர்வாகி இருக்கும். அதனால், என் புத்தகம் மட்டும்தான் சிறந்தது என்று நான் கருதவில்லை!' என்பது அருந்ததியின் பதில் மரியாதை!

நாவல் எழுதிப் புகழ் பெறும் வரை, டெல்லி ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் எடுத்த ஏரோபிக்ஸ் வகுப்புகள் மூலம் கிடைத்தது மட்டுமே வருமானம்!

நர்மதா அணைத் திட்டத்தால் பாதிக்கப்படும் ஆதிவாசிகள், விவசாயிகளின் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். புக்கர் பரிசு மூலம் தனக்குக் கிடைத்த பணத்தில் 30 ஆயிரம் டாலரை 'நர்மதாவைக் காப்பாற்றுவோம் அமைப்பு'க்கு வழங்கினார்.

பொக்ரானில் இந்தியா அணுகுண்டு வெடித்துச் சோதித்தபோது, 'வல்லரசின் முதல் படி' என்று தேசமே கொண்டாடியது. ஆனால், 'அணு ஆயுத அரசியல் மிக மோசமானது!' என்று 'The end of imagination' எனும் கட்டுரையில் வெடித்தார் அருந்ததி ராய்!

1985 இல் வெளியான Massey Sahib என்ற திரைப்படத்தில் அருந்ததி ஒரு கிராமத்துப் பெண்ணாக நடித்தார். அந்தப் பட இயக்குநர் பிரதீப்பை இரண்டாவதாகத் திருமணம் செய்து கொண்டார்.

பிரதீப் இயக்கிய In Which Annie Gives it Those Ones படத்துக்கு அருந்ததி திரைக்கதை எழுதினார். இதற்கு திரைக்கதைக்கான தேசிய விருது கிடைத்தது!

சேகர் கபூரின் 'பண்டிட் குயின்' திரைப்படத்தைக் கடுமையாக விமர்சித்தார். The Great Indian Rape Trick என்ற தலைப்பில் கட்டுரை எழுதியவர், 'உயிருடன் இருக்கும் பூலான்தேவியின் வாழ்க்கையை அவருடைய அனுமதி இன்றி சினிமாவாக எடுத்தது தவறு!' என்று கடும் கண்டனம் தெரிவித்தார்.

நர்மதா அணை விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பை, 'நாகரிக வன்முறை' என்று விமர்சித்தார். இதற்காக இவர் மீது 'நீதிமன்ற அவமதிப்பு' வழக்குப் பதிவு செய்தது நீதிமன்றம். அதற்காக வருத்தமோ, மன்னிப்போ கேட்க மறுத்தார் ராய். அதனால், அடையாளமாக ஒரு நாள் சிறைத் தண்டனையும், ரூ.2000 அபராதமும் விதிக்கப்பட்டது. ஒரே ஒரு நாள் சிறைச் சென்று வந்தார் அருந்ததி ராய்!

2003 ஆம் வருடம் நியூயார்க் நகரில் 'ஏகாதிபத்திய ஜனநாயகம் - உடனடித் தயாரிப்பு' என்ற தலைப்பில் அமெரிக்காவை விமர்சித்து, அருந்ததி ராய் ஆற்றிய நீண்ட உரை உலகப் புகழ் பெற்றது!

2006 ஆம் வருடம் ஜார்ஜ் புஷ் இந்தியா வந்தபோது, 'War Criminal' என்று சாடி கட்டுரை எழுதினார் ராய்.

கேரளாவின் முத்தங்கா காடுகளில் ஆதிவாசி மக்கள் கொடூரமாக அடித்துத் துரத்தப்பட்டபோது, உடனடியாக அங்கு நேரில் சென்று ஆய்வு செய்தவர், 'உங்கள் கைகளில் ரத்தக் கறை படிந்திருக்கிறது' என்று கேரளாவின் அப்போதைய முதல்வர் ஏ.கே. அந்தோணிக்குக் கடிதம் எழுதினார்.

இலங்கையில் யுத்தம் நடந்தபோது, எழுத்தாளர்கள், அறிவுஜீவிகள் பலரும் கள்ள மௌனம் சாதித்தபோது, 'இலங்கையில் நடப்பது ஓர் இனப் படுகொலை' என்று வெளிப்படையாகக் கட்டுரை எழுதியவர் ராய்!

தண்டகாரண்யா காட்டில் இந்திய அரசு நடத்தி வரும் போரை 'இந்தியாவின் இதயத்தின் மீதான போர்' என்று வர்ணித்துக் கட்டுரை எழுதிய அருந்ததி ராய், 10 நாட்களுக்கும் மேல் நேரில் சென்று காட்டுக்குள் தங்கி இருந்து திரும்பினார். அந்த அனுபவத்தை 'தோழர்களுடன் ஒரு பயணம்' என்று நீண்ட கட்டுரையாக எழுதினார். மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரத்தை 'இந்தப் போரின் C.E.O.' என்றே குறிப்பிடுகிறார் ராய்!

2004 ஆம் வருடம் வன்முறைக்கு எதிரான செயல்பாடுகளுக்காக அருந்ததிராய்க்கு 'சிட்னி அமைதி விருது' வழங்கியது, ஆஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகம். The Algebra of Infinite Justice என்ற கட்டுரைத் தொகுப்புக்காக 2006 ஆம் ஆண்டு இந்திய அரசு சாகித்ய அகாடமி விருது அறிவித்தது. ஆனால், அதைப் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்!

இரட்டைக் கோபுரத் தாக்குதலின்போது 'ஒசாமா பின்லேடன், ஜார்ஜ் புஷ் இருவருமே கிரிமினல்கள் தான். ஒரே ஒரு வித்தியாசம். பின்லேடனை மக்கள் யாரும் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கவில்லை!' என்று இவர் வெளியிட்ட கருத்து, பலரையும்

(4 ஆம் பக்கம்)

## + சபரிமலை "சீசன் ஒழுக்கம்" + காங்கிரசார் "வீரப்" போராட்டம்

# புரோகிதமறுப்புபகவான்கோயில்

கடவுளுக்கு சக்தி அதிகமா ? ஆகமத்துக்கு சக்தி அதிகமா ? இந்தக் கேள்விக்கு - ஆகமப் பண்டிதர்களான பார்ப்பனர்கள், கடவுளைப் பின்னுக்குத் தள்ளி விடுகிறார்கள். சக்தி ஆகமத்துக்குத்தான் என்கிறார்கள். இதுவும்கூட ஒரு கடவுள் மறுப்பு தானே ! திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு வரும் பக்தர்கள் சரியாக பகவானை தரிசிக்க முடியவில்லை என்றும், கோயில் ஊழியர்கள், சில நொடிகளிலே பக்தர்களை பிடித்துத் தள்ளி விடுவதாகவும், பக்தர்களிடமிருந்து புகார்கள் குவிந்து வருகின்றன. இப்படி பக்தியை 'நுகர்வோர்' குறைகளைத் தீர்ப்பது குறித்து நுகர்வோர் குறை தீர்க்கும் கருத்தரங்கு ஒன்று திருப்பதியில் கடந்த 20, 21 தேதிகளில் நடந்துள்ளது. கூட்டத்தை ஒழுங்குபடுத்த மேலும் புதிய வாயில்களை கோவிலுக்கு அமைப்பது; நகரும்படிகளை அமைப்பது பற்றியெல்லாம் ஆலோசிக்கப்பட்டது. ஆனால், கோயிலின் தலைமை அர்ச்சகப் பார்ப்பனர் ரமண தீட்சர், ஆகம ஆலோசகர் விஷ்ணு பட்டாச்சாரியா ஆகியோர் இந்த யோசனைகளை எல்லாம் புறந்தள்ளி விட்டனர். கோயில் களையும், சாமி சிலைகளையும் காப்பாற்றவே ஆகம விதிகள் ஏற்படுத்தப்பட்டன. அதன்படி நடந்தால்தான் உலகம் அமைதி பெறும்; அதற்கு மாறாக நடந்தால், பாதகமான விளைவுகள் ஏற்பட்டுவிடும் என்று ஓங்கி அடித்துக் கூறி விட்டார்களாம்.

அதாவது ஏழுமலையான் உள்ளிட்ட சகல சர்வதேச பாதுகாப்பும் ஆகமங்களுக்குள்தான் அடக்கம். அந்த ஆகமங்கள் பற்றி தீர்ப்புக் கூறும் அதிகாரம் இந்த பார்ப்பனப் பண்டிதர்களிடம் அடக்கம். கோயிலுக்கு கோடிக்கணக்கில் வருவாயைக் குவித்து வரும் பக்தர்கள் வசதிகளைக்கூட பறிக்கக் கூடிய அதிகாரங்கள் இந்த "பூதேவர்"களிடம் தான் இருக்கிறது.

இந்த '2010'-லும் இந்தியாவில் இதுவே நிலை; தமிழ்நாட்டுக் கோயில்களில் பார்ப்பனரல்லாத மக்களை இன்றைக்கும் 'சூத்திரர்'களாக (அதாவது பார்ப்பனர்களின் தேவடியாள் பிள்ளைகளாக) சட்டப்படி நிலைநாட்டி வைத்திருக்கும் அதிகாரம், இந்தப் பார்ப்பனர்களிடம்தான் இருக்கிறது. 'சட்டத்தின் முன் அனைவரும் சமம்' என்று சட்டங்கள் கூறுவது எல்லாம் வெறும் வார்த்தைகள்தான். ஆகமச் சட்டங்கள் முன் - அரசியல் சட்டங்கள் அடிபணிந்து தான் போக வேண்டும் ! இது ஜனநாயக நாடா ? பார்ப்பன நாடா ?

### அய்யப்பா....

சபரிமலை சீசன் தொடங்கிவிட்டது. அது தொடர்பாக பல்வேறு 'பக்திரசம்' சொட்டும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சென்னை ஆலந்தூரைச் சார்ந்த கே. பஞ்சாட்சரம் எனும் ஓய்வு பெற்ற பேராசிரியர் (வயது 74) தனது மகன், மருமகனுடன், சபரிமலை சென்றபோது, பம்பையிலிருந்து சன்னிதானத்துக்குச் செல்லும் வழியில் அப்பாச்சி மேடு அருகே மலை ஏறி வந்தபோது திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு, அருகே அமைக்கப்பட்டிருந்த இருதய நோய் சிறப்பு மருத்துவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட் டுள்ளார். சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார் என்று ஒரு செய்தி வந்துள்ளது. பலவீனமான இருதயம் உள்ள முதியவர்கள் மலைமேல் ஏறுவதால் நிகழும் விபத்து இது. நிச்சயமாக இந்த மரணத்தைத் தடுக்கும் சக்தி அய்யப்பனுக்கு இல்லை என்பதை அறிவுபூர்வமாக சிந்தித்தால் விளங்கும். எனவே மருத்துவச் சான்றிதழ் முறைகளை நிர்வாகம் அமுல்படுத்தலாம். அல்லது, பெண்களுக்கு வயதுக் கட்டுப்பாடு விதித்திருப்பதுபோல், சபரிமலைக்கு வரும் பக்தர்கள் அனைவருக்குமே அதிகபட்ச வயது கட்டுப்பாடு ஒன்றையும் நிர்ணயித்தால், பல உயிரிழப்புகளை தடுக்க முடியும்.

அதேபோல், தமிழ்நாட்டிலிருந்து அய்யப்ப பக்தர்கள் சபரிமலைக்கு, லாரிகளிலோ, சரக்கு லாரிகளிலோ செல்லக் கூடாது என்றும், மீறிச் செல்வோர், மாநில சோதனைச் சாவடிகளில் தடுத்து நிறுத்தப்படுவார்கள் என்றும் தமிழ்நாடு போக்குவரத்துத் துறை ஆணையாளர் ராசாராம் அறிக்கை விடுத்துள்ளார். லாரிகளில் போவதால் கடந்த ஆண்டு பல விபத்துகள் நடந்ததை சுட்டிக்காட்டியுள்ள அதிகாரி, பாதுகாப்பாக பயணிகள் வாகனங்களில் செல்லு மாறு பக்தர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். "அய்யப்பன் சக்தியை சந்தேகிப்பதா ? விரதம் இருந்து வரும் பயணிகளை எல்லையோரத்திலிருந்து திருப்பி அனுப்புவது - பகவான் நிந்தனை அல்லவா ?" என்றெல் லாம், பக்தர்கள் உணர்ச்சி வயப்பட்டுக் கேள்விகளை எழுப்புவதில், எந்த நியாயமும் இல்லை. இது உயிர்ப் பிரச்சினை என்பதை மறந்துவிட்டு, 'பகவான் சக்தி' பற்றிய அர்த்தமற்ற விவாதங்களில் உயிர் மீது பற்றுக் கொண் டவர்கள் ஈடுபடாமல் இருப்பதுதான் நல்லது. 'கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை' என்று நடை பயணமாகவே பக்தர்கள் புறப்படுவது லாரிகளில் போவதைவிட பாது காப்பானது என்பதால், அது பற்றி பரிசீலிக்கலாம், பக்தர்கள் !

### நமது பார்வையில்....

மற்றொரு செய்தியும் ஏடுகளில் வந்துள்ளது. கடந்த நவம்பர் 17 ஆம் தேதியிலிருந்து அய்யப்ப சீசன் தொடங்கிய பிறகு, தமிழ் நாட்டிலுள்ள 'டாஸ்மாக்' கடைகளில் மது விற்பனையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளதாம். வழக்கமான விற்பனையைவிட 20 முதல் 24 சதவீதம் விற்பனை வீழ்ந்து விட்டதாம். நாளொன்றுக்கு சராசரி விற்பனை வருவாய் 45 கோடியிலிருந்து 38 கோடியாகக் குறைந்துள்ளதாக அந்தப் புள்ளி விவரம் கூறுகிறது. இதனால் 'டாஸ் மாக்' விற்பனை ஊழியர்கள் விற்பனைத் தொகையில் தங்களுக்குக் கிடைக்கும் ஊக்கத் தொகை குறைந்து விட்டதே என்று கவலை அடைந்துள்ளதாகவும், 'தினமலர்' செய்தி வெளியிட்டுள்ளது. ஒரு மாத காலத்துக்கு மட்டும் நேர்ந்துள்ள இந்த இழப்பை ஊழியர்கள் "பக்தி"க்காக பொறுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

சீசன் முடிந்த பிறகு மீண்டும் விற்பனை களைக்கட்டத் தொடங்கி விடும். கடந்த முறை இதேபோல் 'விரத' காலத்தில் மட்டும் குடியை நிறுத்தியவர்கள், மீண்டும் உற்சாகத்துடன் வேகமாகத் தொடங்கினார்கள் அல்லவா ? அப்படி அவர்கள் மீண்டும் தொடங்கியதால்தானே, இப்போது தற்காலிக தொழில் 'மந்தம்' ஏற்பட்டிருக்கிறது. எனவே கவலைப்பட வேண்டாம். சீசன் முடிந்து அய்யப் பர்கள் டாஸ்மாக்குக்கு வராமல் போய்விட மாட்டார்கள் என்பதே நாம் ஊழியர்களுக்கு கூறும் ஆறுதல். சீசனில் வந்து போகும் அய்யப்ப பக்திபோல் இந்த "ஒழுக்கங்கள்" என்பவையும் சீசனோடு முடிந்து போவது தானே !

### காங்கிரஸ் 'வீரப்' போராட்டம்

நியாயமான காரணங்களுக்காக போராட்டங்கள் நடத்தும் இயக்கங்கள் மீது தமிழக காவல்துறையின் 'கெடுபிடிகள்' தாங்கவே முடியாது. ஆனால், காங்கிரஸ் காரர்கள் போராட்டம் என்றால், அவ்வளவு "சுதந்திரம்" அண்ணா சாலையில் அவர்கள் போராட்டம் நடத்தினால் கூட கண்டுகொள்ள மாட்டார்கள். இப்படித்தான் சோனியாவை விமர்சித்த ஆர்.எஸ்.எஸ். தலைவரை கண்டித்து தங்கபாலு தலைமையில் காங்கிரசார் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்களாம். அனுமதி பெற்று நடந்த போராட்டமாக தெரியவில்லை. ஆனாலும், 'மேலிட' உத்தரவால் காவல்துறை கண்டு கொள்ளவில்லை. காவல்துறை வேனில் ஏறி கைதாவதுபோல், பத்திரிகை களில் புகைப்படும் வெளிவரவேண்டும் என்று துடித்த "தியாகிகள்" வழி வந்த காங்கிரசார் தாங்களாகவே போய் போலீஸ் வேனில் ஏறிக்கொள்ளவே போலீசார் வேறு வழியின்றி ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் கொண்டு போய் இறக்கிவிட்டுள்ளனர். மதியம் 2 மணிக்கு தங்க பாலுவே சொந்த செலவில் எல்லோருக்கும் சாப்பாடு வாங்கித் தந்தாராம். மாலை 4 மணி ஆனதும், "எங்களுக்கு எப்போது விடுதலை ?" என்று காங்கிரசார், அங்கே இருந்த காவல்துறையினரிடம் கேட்கவே, காவல்துறையினர், "உங்களை நாங்கள் கைது செய்யவே இல்லையே; அப்புறம் எங்கே விடுதலை செய்வது ?" என்று திருப்பிக் கேட் டுள்ளனர். போராட்டம் நடத்த வேண்டுமானால் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியிலிருந்து கொண்டு போராட வேண்டுமப்பா !

### ஆங்கில 'தேவியே'....

நாடு முழுதும் கோயில்களைக் கட்டி, மத பக்தியையும், கடவுள் நம்பிக்கையையும் பார்ப்பனர்கள் வளர்த்து வருவதற்கு மாற்றாக உ.பி. மாநிலம், லட்சுமிபூர் கெரி மாவட்டம் பகதூர் கஞ்ச் கிராமத்தில் வாழும் தலித் மக்கள் ஒரு புதுமையான கோயிலை கட்டி வருகிறார்கள். இந்தக் கோவிலின் கடவுள் 'ஆங்கிலம்'. 'ஆங்கில தேவி' என்ற பெயரில் 3 அடி உயர சிலை உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவிலுள்ள 'சுதந்திர தேவி'யைப் போல் ஒரு கையில் பேனாவை உயர்த்தி பிடித்தபடியும், மறு கையில் இந்திய சட்டப் புத்தகத்தை உயர்த்தியபடியும் இந்த சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது. தலித் மக்களிடையே ஆங்கிலம் மற்றும் நவீன கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்து வதே, இதன் நோக்கம் என்று தலித் அமைப்பினர் கூறுகிறார்கள்.

ஆனால் பார்ப்பனர்களும் ஆதிக்க சாதியினரும் இதை இந்துக் கடவுள்களை இழிவுபடுத்தும் முயற்சி என்றும், கிறிஸ்தவ மதத்திற்கு தலித்துகளை மதமாற்றம் செய்யும் முயற்சி என்றும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்களாம். பார்ப்பான் சமஸ்கிருத வேத மந்திரம் ஓதினால்தானே "ஆங்கில தேவி" சிலைக்கு கடவுள் சக்தி கிடைக்கும் ? ஏன், பார்ப்பனர்கள், எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்பதுதான் நமக்குப் புரியவில்லை. அப்படி வேத மந்திரத்தை ஓத மறுத்துவிடலாமே ! 'ஆங்கில தேவி' போல் இனி "சாதி மறுப்பு பகவான்", "பூணூல் அறுப்பு தேவதை", "வேத அழிப்பீசுவரன்", 'புரோகிதம் ஒழித்த நாயகன்" என்ற கடவுள்களை உருவாக்கி, கோயில் கட்டலாம் என்றுகூட தோன்றுகிறது. இந்தக் கோயில்களில் புரோகிதம், அர்ச்சனை மற்றும் வழிபாடுகளை முற்றாகத் தடை செய்து விட வேண்டும். இந்து சாஸ்திர புராண கருத்துகளை மறுக்கும் பண்டிகைகள் திருவிழாக்களை அறிமுகப்படுத்த வேண்டும். இப்படி ஒரு நடைமுறை பழக்கத்துக்கு வந்து விட்டால், "மதச் சுதந்திர உரிமை", "பழக்க வழக்கங்கள்" என்ற பாதுகாப்புகளுக்குள் பார்ப்பனர்கள் நுழைந்து கொண்டு சாதி ஆணவத்தை காப்பாற்ற முடியாது அல்லவா ? இதுவும் மதஉரிமை என்று நாமும் கோரலாமே !

'இரா'

## வேறென்ன வழி இருக்கிறது, இதைத் தவிர?



(மேட்டூர் காவல் நிலையத்தில் ஆயுத பூசைக்கு எதிராக கழகத் தோழர்களின் எதிர்வினை தொடர்பாக **"யாழன் ஆதி"** எழுதிய முகப்புக் கவிதை)

சப்தமில்லாமல் அமைதியாயிருக்கின்றன
உங்கள் சாத்திரங்கள்
பசித்த வயிறுகளின் இடையறாத
அழுகைகளைப் புறக்கணித்து

உழைப்பவனைக் கொண்டாடாமல்
கருவிகளைக் கழுவுகின்றன
உங்கள் துருவேறிய மூளைகள்

களைத்த கைகளுடன் வரும் அவனை
மிதித்துத் துரத்தும் உங்கள்
பளபளக்கும் காலணிகள்
பொரிகடலைக்காக
கழற்றப்படுகின்றன பவ்யமாய்

அறிவின் விளிம்பில் மானுடம்
விண்ணேகிக் கொண்டிருக்க
அறிவற்ற உங்கள் மூடத்தனம்
இன்னும் ஆண்டுகளை விழுங்குகின்றன

நம்பிக்கை என்னும் பாம்பின்
பிளவுபட்ட நாக்கால்

கொத்திப் பரப்பிய நச்சின்
நீலவண்ணத்தை மையாக்கியே
அரசுக் கோப்புகளில்
கையெழுத்திடுகின்றீர்கள்.

வெட்கமற்ற மூடத்தின் அறிவீனத்தால்
சிதைக்கப்பட்டவைகளைச் சீராக்க
வேறென்ன வழி இருக்கிறது
இதைத்தவிர!

நன்றி: 'தலித் முரசு' அக். 2010

# பெரியார்கண்ட புரட்சி இயக்கம் எங்கே போகிறது?



செய்யாறு மாவட்ட தி.க. தலைவர் அ.இளங்கோவன் 85 உண்மை சந்தாக்களுக்கான தொகை ரூ. 18,700அய் தலைமை நிலையச் செயலாளர் வீ.அன்புராஜிடம் வழங்கினார்.


திராவிடர் கழகத் தலைவர் வீரமணி, எந்த சூழ்நிலையிலும் தனக்கு அடுத்த நிலையிலுள்ள கழகப் பொறுப்பாளர்களை முன்னிலைப்படுத்த விரும்பாதவர். கழகத்தின் பொதுச்செயலாளராக பணிபுரிந்து வந்தவர், கழகத்தின் "தலைவராக" வேண்டும் என்று திட்டமிட்டு, "கழகத்தின் பொறுப்புகளை இளைஞர்களிடத்தில் ஒப்படைத்து, அவர்களை தயார்ப்படுத்தப் போகிறேன் என்று நாடகம் போட்டு தோழர் துரைச் சக்கரவர்த்தியை "பொதுச் செயலாளர்" என்ற அறிவித்து திட்டமிட்டபடி தன்னை கழகத்தின் "தலைவராக" அறிவித்துக் கொண்டவரல்லவா ?

தனது மகன் அன்புராஜ் என்பவரை, கழகத்துடன் எந்தத் தொடர்பும் இல்லாதவரை கழகத்தின் "தலைமை நிலையச் செயலாளராக்க" காரணம் என்ன என்பது பொது மக்களுக்குத் தெரிய ஆரம்பித்துவிட்டது. பெரியார் தனது கொள்கைகளுக்கு வாரிசைத் தேடினார். வீரமணி பெரியார் விட்டுச் சென்ற சொத்துக்கள் தனது குடும்பத்தை விட்டுச் செல்லாமலிருக்க தனது குடும்பத்திலேயே வாரிசைத் தேடிக் கொண்டு விட்டார். தமிழ்ச் சமுதாயமே வெட்கித் தலைகுனிய வேண்டிய செயல் !

கழக நிகழ்ச்சிகளில், கழகத்துக்கான நன்கொடைகள் இதழ்களின் சந்தா தொகைகளை தானே நேரில் பெற்று வந்த வீரமணி, கழகத்தில் தனக்கு அடுத்த தலைமை வாரிசு தனது மகன் அன்புராஜ் தான் என்பதை வெளிப்படையாக அறிவிக்கும் வகையில், தான் வழிவிட்டு ஒதுங்கிக் கொண்டு 'விடுதலை' சந்தாக்களை தன் முன்னிலையிலேயே தன் மகனிடம் ஒப்படைக்கச் செய்த சூட்சமத்தை விவரமறிந்தோர் கூர்ந்து கவனிக்கிறார்கள் !

மேலே உள்ள படம் இதை வெளிப்படுத்துகிறது !

## வரப்பெற்றோம்!




பெரியார் கொள்கைகளை வாழ்க்கை நெறியாக்கிக் கொண்டிருக்கும் மதுரை மருத்துவர் அ. சவுந்தரபாண்டியன், 'தன் முன்னேற்றப் போர்' என்ற தலைப்பில், 'தன் வரலாறை' நூலாக வெளியிட்டுள்ளார். உள்ளூர் வரலாறுகளும், தனி மனித வரலாறுகளும், சமூக வரலாற்றின் ஒரு பகுதியே ஆகும். நாட்டின் வரலாற்றைவிட, இந்த வரலாறுகள் - உண்மைகளை சமூகத்தை துல்லியமாக படம் பிடித்துக் காட்டுகின்றன. துணிக் கடையில் விற்பனையாளராக வேலை பார்த்து, மருந்தாளுநராக படித்துபணியாற்றி முப்பதாவது வயதில் மருத்துவப் பட்டப் படிப்பில் சேர்ந்து தோல் நோய் மருத்துவத்தில் சிறப்பு கல்வித் தகுதி பெற்று 17 ஆண்டுகாலம் மருத்துவத் துறையிலும் அதுவும் 11 ஆண்டுகாலம் அரசு தொழு நோய் கட்டுப்பாடு நிலையங்களிலும் பணியாற்றி, ஓய்வு பெற்ற ஒரு பெரியாரியல்வாதி தன்னுடைய தன்னம்பிக்கைப் பயணத்தை பதிவு செய்துள்ளார்.

பெரியாரைப் போலவே குத்தூசி குருசாமி கொள்கை வழியிலும், மிகுந்த ஈடுபாடு கொண்டவர். குறைந்த கட்டணத்தில் இவர் இப்போது நடத்தி வரும் சிறிய மருத்துவ மனையில் புரட்சிப் பெரியார் முழக்கம், நாத்திகம் (வெளிவந்தவரை) சிந்தனையாளன், சங்கமித்ரா இதழ்கள், கண்ணியம் மாத ஏடு, குத்தூசியாரின் சில நூல்கள் ஆகியவை மட்டுமே - காத்திருப்போர் அறையில் நிறைந்திருக்கும். மிக அவசியமாக தேவைப்பட்டால் மட்டுமே ஆய்வகச் சோதனைகளுக்கு பரிந் துரைத்து நோயாளிகளுக்கு மருந்து மாத்திரைகளை வழங்கி, ஸ்கேன் பரிசோதனைக்கு நிறுவனங்கள் தரும் கட்டணத்தை ஏற்க மறுத்து, நோயாளிகளிடம் மிகக் குறைந்த கட்டணம் வாங்கி, தான் சார்ந்த துறையிலும் கொள்கை அடையாளத்தைப் பதித்து வரும் தோழர் அ. சவுந்தரபாண்டியனின் தன் வரலாறு - இளம் தலைமுறைக்கு கொள்கை வழிபட்ட வாழ்க்கைக்கு வழிகாட்டுகிறது !

**தொடர்புக்கு: மருத்துவர் அ. சவுந்தர பாண்டியன், 98, பாண்டியன் தெரு, பீ.பீ. குளம், மதுரை - 625 002. தொலைபேசி 0452 2521976**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
**தொடர்புக்கு புதிய எண்:**
✆ 99416 13535

# சூலூர் ஒன்றியக் கழகத்தின் தொடர் பணிகள்

பெரியார் பிறந்த நாள் விழா சூலூரில் 19.9.10 ஞாயிறு காலை 10 மணியளவில் குருதிக் கொடை முகாம் நிகழ்ச்சியாக எஸ்.எல்.எஸ். திருமண மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையேற்றார். நிகழ்ச்சியில் முன்னாள் பேரூராட்சித் தலைவர் சூ.ர.தங்கவேல், கண்ணம்பாளையம் பேரூராட்சித் தலைவர் மவுனசாமி, கழக செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, திருப்பூர் மாவட்டத் தலைவர் சு. துரைசாமி, ம.தி.மு.க. சூலூர் ஒன்றிய செயலாளர் சூ.பெ. கருணாநிதி, மனிதநேய சன்மார்க்க அறக்கட்டளை அமைப்பாளர் காளிமுத்து, மாதப்பூர் ஊராட்சித் தலைவர் சி. தங்கராஜ், புரட்சிகர இளைஞர் முன்னணி அமைப்பாளர் வள்ளுவராசன், சி.பி.எம். நகரச் செயலாளர் பழனிச்சாமி, இந்திய ஜனநாயக வாலிபர் சங்க செயலாளர் சாமிநாதன், கலைஞர் இரத்ததான இயக்க அமைப்பாளர் தர்மராஜ், பசுமை நிழல்கள் சுற்றுச் சூழல் அமைப்பின் தலைவர் விஜயகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர். 50-க்கும் மேற்பட்ட தோழர்கள் குருதி வழங்கினர். இறுதியாக பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக உரையாற்றினார். அனைவருக்கும் கறி விருந்து வழங்கப் பட்டது.

அக்டோபர் 2 போராட்டத்திற்காக சூலூர் ஒன்றியத்தில் 2500 துண்டறிக்கைகள் மக்களை வீடு வீடாகச் சென்று நேரடியாக சந்தித்து வழங்கப்பட்டது. எல்லா கிராமங்களிலும் மக்களை நேரடியாக சந்தித்து போராட்டத்தின் நியாயத்தை விளக்கி பிரச்சாரம் செய்யப்பட்டது. ஒன்றியத்தில் ஒன்பது இடங்களில் போராட்டத்திற்காக சுவரெழுத்து எழுதப்பட்டது. கழகத் தோழர்கள் விழுப்புரம் அய்யனார் மற்றும் சென்னை நாத்திகன் ஆகியோர் இரண்டு நாள் சூலூரில் தங்கி சுவரெழுத்துப் பணிகளை மேற்கொண்டனர்.

பெரியார் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சூலூர் ஒன்றியத்தில் சாதி தீண்டாமை ஒழிப்புத் தொடர் பொதுக் கூட்டங்கள் கடந்த 18, 19, 20.1.2010 திங்கள், செவ்வாய், புதன் மூன்று நாட்கள் நடைபெற்றது. மூன்று நாள் பொதுக் கூட்டத்திற்கும் கழகத்தின் தெற்கு மாவட்டத் தலைவர் கலங்கல் மு. வேலுச்சாமி தலைமை தாங்கினார். 18.10.2010 மாலை 6 மணியளவில் சூலூர் மதியழகன் நகர் பகுதியிலும், 19.10.2010 அன்று இராவத்தூர் கலைஞர் நகர் மைதானத்திலும், 20.10.2010 அன்று அத்தப்பக்கவுண்டன் புதூர் பேருந்து நிலையம் அருகிலும் பொதுக் கூடடங்கள் நடைபெற்றன.

மூன்று நாள் நிகழ்ச்சியிலும் தோழர் சிற்பி ராசன் 'மந்திரமா, தந்திரமா ?' நிகழ்ச்சியை நடத்தினார். கோபி வேலுச்சாமி மக்களுக்கு எளிமையாக புரியும் வகையிலும் நகைச்சுவையாகவும் சிறப்புரையாற்றினார்.

கழகத்தின் தொடர் பணிகளுக்காக ஒன்றியக் கழகத் தோழர்கள் மாவட்டத் தலைவர் க.மு.வேலுச்சாமி, துணைத் தலைவர் இரா. பன்னீர்செல்வம், பொருளாளர் அகில் குமரவேல், ஒன்றியச் செயலாளர் கி. திலீபன், நகர செயலாளர் ஆட்டோ தேவா, இருகூர் கோடிநாதன், முனியப்பன், இருகூர் செந்தில் மற்றும் சூலூர் வீரமணி ஆகிய தோழர்கள் கடுமையாக உழைத்தனர்.

மூன்று நாள் தொடர் கூட்டங்களுக்கும் திருப்பூர் மாவட்டத் தலைவர் துரைசாமி, ஒலிபெருக்கி உதவி செய்து உதவியோடு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். தோழர்கள் முகில்ராசு, அகிலன், தியாகு, பல்லடம் விசயன், கோவை தெற்கு மாவட்ட செயலாளர் கா.சு. நாகராசன், கோவை மாணிக்கம் ஆகியோர் நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

தொடர் பணிகளின் விளைவாக சூலூர் ஒன்றியத்தில் பல புதிய இளைஞர்கள் இயக்கத்தில் சேர முன் வந்துள்ளனர். அவர்களை ஒருங்கிணைத்து அமைப்பாக்க ஒன்றியக் கழகத் தோழர்கள் முனைப்புடன் பணியாற்றி வருகிறார்கள்.

**செய்தி: சூலூர் ப. வீரமணி**

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்க்க வைத்தது !

1997 ஆம் வருடமே அடுத்த நாவல் எழுத ஆரம்பித்துவிட்டதாக அறிவித்தார். ஆனால், அதன் பிறகு, அரசியல் கட்டுரைகள் தான் அதிகம் எழுதினார். இன்னும் நாவல் எழுதவில்லை. சமீபத்தில் வெளியான அருந்ததி ராயின் Field Notes on Democracy; Listening to Grasshoppers புத்தகமும் அரசியல் விமர்சனக் கட்டுரைகள் நிறைந்ததே !

Come September என்ற தலைப்பில் நியூ மெக்சிக்கோவில் அருந்ததி ராய் 64 நிமிடங்கள் பேசினார். அதிகாரம், ஆயுதம் மற்றும் கார்ப்பரேட் உலகின் அரசியலை அம்பலப்படுத்தும் அந்தப் பேச்சை அடிப்படையாக வைத்து, நியூசிலாந்தைச் சேர்ந்த ஒருவர் "WE" என்ற பெயரில் டாக்குமெண்ட்டரி எடுத்தார். ஏராளமான பணம் செலவழித்து, இணையத்தில் அந்தப் படத்தை இலவசமாகக் கிடைக்கச் செய்த அந்த நபர், கடைசி வரை தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவே இல்லை !

'மற்றொரு மாற்று உலகம் சாத்தியமானது மட்டுமல்ல, நான் அதை நோக்கிப் பயணித்துக் கொண்டு இருக்கிறேன். ஓர் அமைதியான நாள் ஒன்றில், என் பயணத்தின் மூச்சுக் காற்றை நான் உணர்கிறேன்' ராயின் நம்பிக்கை வார்த்தைகள் இவை !

**நன்றி: 'ஆனந்த விகடன்'**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 25th November 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.